இருக்க இடமில்லை. அதனால் நான் கொடுத்த இந்த திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும். அல்லது இதை ஒரு செலெக்ட் கமிட்டிக்கு விட்டு அங்கு இதை ஆலோசனை செய்யவேண்டும் என்றும், பட்ஜெட் முடிந்தவுடன் இதை எடுத்துக்கொள்ளலாம் என்ற யோசனையையும் நான் சொல்லிக்கொள்கிறேன்."

*THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கனம் சபா நாயகர் அவர்களே, எதிர்க்கட்சியினர் நல்லெண்ணத்துடன் கொண்டு வந்த இந்த திருத்தத்தை இந்த அரசாங்கம் ஒத்துக்கொள்ளக்கூடாதா, ஏன் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். எந்த வகையில் இந்த சட்டத்தைத் திருத்தி சட்டம் செய்யலாம் என்று இந்த சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கமே மசோதா கொண்டுவருவதாக இருந்தாலும் அதைக்கொண்டுவரலாம். ஆனால் மத்திய சர்க்கார் ஒரு சட்டத்தைக் கொண்டுவரப்போவதால் இப்பொழுது இந்த சர்க்கார் அப்படிப்பட்ட ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவராமல் இருக்கிறார்கள். ஸ்பெஷல் ஆபீசரின் சிபாரிசுகள் பேரில் திருத்தச்சட்டம் கொண்டுவந்து இப்பொழுதுள்ள குறைகளை நீக்க முடியும். ஆனால் மத்திய அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வரப்போவதால் நாமும் ஒரு சட்டம் கொண்டுவர வேண்டாம். ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கவேண்டாம் என்பதற்காகத்தான் இப்பொழுது இந்த சர்க்கார் அப்படிப்பட்ட ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை. மத்திய சர்க்காருடைய சட்டத்திற்கும் இந்த சர்க்காருடைய சட்டத்திற்கும் எந்த விதமான வித்தியாசமும் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த சர்க்கார் ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வராமலிருக்கிறார்கள். இப்பொழுது கொண்டுவந்தும் பிரயோசனமில்லை. மத்திய சர்க்கார் கொண்டுவந்த பிறகு குறைபாடுகளை நீக்குவதற்கு எப்படி திருத்தம் கொண்டுவரலாம் என்று யோசிப்போம். மத்திய சர்க்காரும் அதைச் சீக்கிரத்தில் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கிறோம். அதனால்தான் இந்த சர்க்கார் இப்பொழுது கொண்டுவரவில்லை. எதிர்க்கட்சி கொண்டுவந்தாலும் அதையும் ஒத்துக்கொள்வதற்கு இல்லை. இதனால்தான் இந்த மசோதாவை சர்க்கார் எதிர்க்கிறது."

MR. SPEAKER :—" The question is—

' That the Madras Shops and Establishments (Amendment) Bill, 1954 (L.A. Bill No. 15 of 1954), be taken into consideration at once.' "

The motion was put and lost.

MR. SPEAKER :—" There are only five more minutes. We can now adjourn. The House will now rise for lunch and meet again at 2-30 p.m."

The House then adjourned for lunch.

(After lunch—2-30 p.m.)

(3) THE DISTRIBUTION OF WASTE LAND BILL, 1954 (L.A. BILL NO. 34 OF 1954).

SRI C. KANDASAMY :—" Mr. Speaker, Sir, I move—

' That Sri C. Kandasamy having been authorized by the Member-in-charge of the Distribution of Waste Land Bill, 1954, introduced on the 12th August 1954 by Sri P. Ramamurthi who is unable to be present in the House, be permitted to carry the Bill through its further stages.' "

17th February 1955]

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" I second the motion."

MR. SPEAKER :—" The Hon. Leader of the House is agreeable to the motion. So, the motion is carried."

SRI K. RAJARAM NAIDU :—" May I know whether the permission should be given by the Government or by the House? "

MR. SPEAKER :—" When the Leader of the House consents, it means he is acting on behalf of his party which is the majority party in this House."

* SRI M. NARAYANA KURUP :—" The rule says : ' Provided that where a member-in-charge of the Bill is unable to be present in the House, any other member may, if authorized in writing by such member . . .' Even when there is an authorization should that matter come up before the House? "

MR. SPEAKER :—" Though the member-in-charge of the Bill has written to me, the House must know it and the permission should be granted only by the House."

SRI C. KANDASAMY :—" Sir, I move—

' That the Distribution of Waste Lands Bill, 1954 *(L.A. Bill No.* 34 *of* 1954), *be taken into consideration at once.'* "

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" I second the motion."

* SRI C. KANDASAMY :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ராஜ்யத்தில் எங்கு பார்த்தாலும் இருக்கின்ற தரிசு நிலங்களை எல்லாம் எடுத்து நிலமில்லாத ஏழை விவசாயக் கூலிகளுக்கு உடனடியாக வினியோகம் செய்யவேண்டுமென்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இந்த மசோதாவைப் பிரேரிக்கிறேன். ராஜ்யத்திலுள்ள தரிசு நிலங்களை நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்ற கொள்கைக்கு எதிராக எந்தவிதமான வாதப்பிரதிவாதங்களும் எழுப்ப முடியாது. எந்தவிதமான அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டும் இந்த மசோதா கொண்டுவரப்படவில்லை. கட்சிக் கண்ணோட்டத்தோடு இந்த மசோதாவைப் பார்க்கக்கூடாது என்றும் அரசாங்கத்தின் தரப்பிலுள்ளவர்களுக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவைப் பூராவாகவும் படித்துப் பார்த்தவர்கள் நிச்சயமாக இந்த மசோதா கட்சிக்கண்ணோட்டத்தோடு கொண்டுவரப்படவில்லையென்பதை ஒப்புக்கொள்வார்கள். நிலமில்லாத விவசாயிகள், நிலமில்லா ஏழை ஹரிஜனங்கள் ஆகியோரும் பொருளாதார வாழ்வில் மற்றவர்களைப்போல் மேம்பட்டு வாழவேண்டுமென்பதற்காக ராஜ்யத்திலுள்ள தரிசு நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். அதனால் நாட்டில் உணவு உற்பத்தியும் பெருகும். ஆகவே இந்த மசோதாவிற்கு வீணான வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் எழுப்பப்பட்டு மசோதா நிராகரிக்கப்படாது என்றே நான் நினைக்கிறேன். கட்சி கண்ணோட்டத்திற்கு இடம் கொடுக்கவேண்டாமென்று சர்க்கார் தரப்பினரைக் கோட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் சாதாரணமாக இந்த மசோதா எதிர்க்கட்சியிலிருந்து கொண்டுவரப்பட்டிருப்பதால் இதற்கு பலவிதமான அர்த்தங்கள் கொடுக்கப்பட்டு இதை எதிர்க்கவே பலர் விரும்பக் கூடும். இதில் குற்றங்கள் சில இருக்கலாம். மசோதாவின் அடிப்

[Sri C. Kandasamy] [17th February 1955

படைக் கொள்கையை ஒப்புக்கொண்டால் சில திருத்தங்கள் மூலமாக அந்தக் குற்றங்களும் அகற்றப்பட வசதியுண்டு என சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"சர்க்கார் ஒரு வேளை, இந்த மசோதா தேவையேயில்லை, அவர்கள் தங்களுக்குள்ள சில அதிகாரங்களைக்கொண்டு ராஜ்யத்திலுள்ள தரிசு நிலங்களைப் பிரித்துக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று சொல்லக்கூடும். ஆனால் இதுவரையில் காரியத்தில் எவ்வளவுதூரம் செய்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். இது சம்பந்தமாகப் பல சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சட்ட சபையிலும் பல கேள்விகள் இதைப்பற்றி கேட்கப்படுகின்றன. அங்கங்கே பல ஊழல்கள் நடந்திருக்கின்றன என்பதையும் சர்க்காருடைய கவனத்திற்குப் பலர் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகவேதான் எங்கும் குற்றங்குறைகள் ஏற்படுவதற்கு இடமேயன்றி ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து திட்டம் வகுத்துவிட்டால் நியாயமாகப் போய்விடும் என்கின்ற முறையில் இதைக் கொண்டுவந்திருக்கிறோம். குறிப்பாக மதுரை ஜில்லாவில் பல இடங்களில் ஏராளமான தரிசு நிலங்கள் இருக்கின்றன. அவற்றைக் கோரி ஏராளமான மனுக்கள் வந்திருக்கின்றன. அவை சிலருக்கு வழங்கப்பட்டும் வந்திருக்கின்றன. சிலர் அவற்றில் விவசாயம் செய்யவும் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் வேறு சிலர் அவர்கள் அந்நிலத்தில் விவசாயம் செய்யமுடியாத வகையில் பல கஷ்டங்களை ஏற்படுத்திக் கொண்டுவருகிறார்கள். அதோடு அவர்களை அந் நிலத்திலிருந்தே வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பொட்டிபுரம், கோம்பை போன்ற இடங்களில் இது சம்பந்தமான தகராறுகள் எப்படியிருந்துகொண்டிருக்கின்றன என்பதை நன்கு பார்த்தாலே இந்த மசோதா கொண்டுவரப்படவேண்டிய அவசியம் நன்கு தெரியும். நாளுக்கு நாள் பலவிதமான புகார்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. ஏற்கெனவேயே பல வருஷங்களாக அந்த நிலங்களில் விவசாயம் செய்துகொண்டு வரும் ஹரிஜனங்கள் பலர் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு வருகிறார்கள். கடைசியாக ஸ்பெஷல் தாசில்தார் அந்தப் பிரதேசத்திற்குச் சென்று நிலைமையை நன்கு பரிசீலிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதையும் பார்க்கிறோம். ஏன் இவற்றை எடுத்துச் சொல்லுகிறேன் என்றால் இந்த மாதிரியான மசோதா ஒன்று இல்லாததின் காரணமாக சர்க்கார் தரிசு நிலங்களை வினியோகிக்கும் கொள்கையில் பல ஊழல்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதை சுட்டிக்காட்டவேதான். வேண்டியவர்களுக்கு நிலம் கொடுப்பது, தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு நிலம் கொடுப்பது, தியாகி என்ற பெயரால், ஏராளமாக நிலம் ஏற்கெனவேயுள்ள பெரிய பெரிய நிலச்சுவாந்தார்களுக்கே தரிசு நிலங்களைக் கொடுப்பது ஆகிய சகலவிதமான பாரபட்ச நடவடிக்கைகள் எல்லாம் நடந்து வருகின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை: ஆகவேதான் தரிசு நிலங்களை நிலமில்லாதவர்களுக்கு வினியோகிப்பதில் அரசாங்கத்தை எந்த வகையிலும் குற்றம் சொல்லாதிருக்கும்படியாக நாங்கள் இந்த மசோதாவைக் கொண்டுவருகிறோம். சர்க்கார் இதை ஒத்துக் கொள்வார்களேயானால் இதுவரையிலும் அவர்களுக்கு ஏற்பட்டுவந்த பழிச்சொற்கள் இனிமேல் வராது என்றும், பல ஜில்லாக்களிலிருந்து வந்துகொண்டிருந்த புகார்கள் எல்லாம் இனிமேல் வராது என்றும் நிச்சயமாக அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள முடியும்.

"ஏனென்றால் அவ்வளவு நல்ல முறையில், எளியவகையில், யாருக்கும் அதிருப்தியை ஏற்படுத்தாத வகையில் இந்தச் சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டால் ஓரிரு ஆண்டுக்குள்ளேயே ராஜ்யத்திலுள்ள தரிசு நிலங்கள் எல்லாம் பிரித்துக் கொடுக்கப்பட்டுவிடும். இந்தப் பிரச்னையையே மிகச் சுலபமாகத் தீர்த்துவிட முடியும். அதோடு பிரித்துக் கொடுக்கப்படுகிற லட்சக்கணக்கான நிலங்களில் ஏராளமாக உணவு உற்பத்தியும் செய்ய முடியும். அப்படியே இல்லையென்றாலும் அவரவர்களின் கஞ்சிக்காவது அவரவர்கள் உற்பத்தி செய்து கொண்டுவிடுவார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்த

17th February 1955] [Sri C. Kandasamy]

ராஜ்யத்திலுள்ள ஏழை எளிய மக்கள் பசியின்றி இருப்பதினால் யாருக்கு லாபம்? சர்க்காருக்குத்தான் லாபம். அவர்களுடைய கை வெகுவாகப் பலப் படும். ராஜ்யத்தின் பொருளாதார நிலைமையும் வெகுவாக உயரும். அதைவிட்டு இந்த மசோதாவினால் இன்ன தீங்கு விளையும், ஆகவே நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொன்னால் எப்படி அந்த தீங்கு விளையும் என்பதை நாம் நன்கு ஆலோசிப்போம். அவசியமிருந்தால் மசோதாவில் சில திருத்தங்கள் செய்வோம். அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம், ஆனால் இந்த அடிப்படைக்கொள்கையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றே வற்புறுத்த விரும்புகிறேன்.

"தரிசு நிலங்களை நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு வினியோகித்து விடுவதால் ஒரு பெரிய நன்மையும் கூட ஏற்படும். அதாவது இவர்கள் எல்லாம் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சொந்த நிலத்திலேயே பயிரிட ஆரம்பித்துவிடுவார்கள். அதனால் நிலப் பிரபுக்களுக்கு இருக்கக் கூடிய நிலங்களின் கிராக்கி குறைந்துவிடும். நான் நீ என்று யாரும் அவர்களுடைய நிலத்தை அதிகக் குத்தகைக்கு வைத்துக்கொள்ள போட்டி போடமாட்டார்கள். அதனால் நியாயமான குத்தகை, விவசாயக் கூலிகளின் போட்டியில்லாததால், நியாயமான கூலி ஆகியவை எல்லாம் அந்தந்தப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு நாம் உத்திரவாதம் அளிக்க முடியும். ஆகவே இந்த ராஜ்யத்திலுள்ள ஏழை எளிய விவசாயிகள் எல்லாம் இன்பமாக வாழவேண்டுமென்ற கருத்தோடு, ஒட்டு மொத்தமான அபிப்ராயத்தோடு எல்லோரும் இந்த மசோதாவை ஆதரிக்கவேண்டும். இது எந்தக் கட்சியினரால் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்கின்ற எண்ணத்திற்கே இடம் கொடுக்கக்கூடாது.

"ஏனென்றால் இன்றையதினம் கிராமப்புறங்களில் அமைதியின்மை ஏற்பட்டு வருகிறது. வறுமை அதிகரிப்பதினால் குற்றங்கள் அதிகப்பட்டு வருகின்றன. எங்கு பார்த்தாலும், சச்சரவும், கலவரமும் அதிகப்பட்டு வருகின்றன. ஆகவே கிராமப்புறங்களில் அமைதி ஏற்படவும், ஸ்திரத்தன்மை ஏற்படவும் உடனடியாக இந்த மசோதா கொண்டுவரப்படுவது ரொம்பவும் அவசியமாகும். தரிசு நிலங்களை நிலமில்லாதவர்களுக்கு வழங்குவதன் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு போக்க முடியும். அவரவர்கள் அவரவர்களின் நிலத்திலாவது வேலை செய்வார்கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"ஒருவன் தன்னுடைய உடலுழைப்பினால் விவசாயம் செய்தாலும் அல்லது குத்தகை எடுத்து தன்னுடைய உடலுழைப்பினால் விவசாயம் செய்தாலும் அவனை விவசாயி என்று அழைக்க வேண்டும் என்று இந்த மசோதாவில் வியாக்யானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலம் இல்லாது ஒருவன் குத்தகைக்கோ அல்லது வாரத்திற்கோ விவசாயம் செய்து வந்தால், அதுவும் அவன் தன்னுடைய உடலுழைப்பினால் விவசாயம் செய்தால், அவனும் விவசாயி என்று வியாக்யானம் கொடுக்கப்பட்டிருக்கிறது: 100 ஏக்கராவும் 500 ஏக்கராவும் வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்களை ஒரு விவசாயி என்று அழைக்கக் கூடாது. ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நஞ்சை நிலமோ அல்லது தோட்ட நிலமோ வைத்திருந்தும், அல்லது பத்து ஏக்கருக்குக் குறைவாக புஞ்சை நிலம் வைத்துக்கொண்டிருக்கக் கூடியவனைத்தான் ஒரு விவசாயி என்றும் அதுவும் அப்படி வைத்துக்கொண்டிருக்கக்கூடிய குடும்பமும்தான் விவசாயி என்று கருதவேண்டும் என்றும் மசோதாவில் வியாக்யானம் கூறுகிறது. ஆனால் நடுத்தரவர்க்கத்தினரையும் அவருடைய வாரிசுகளையும், நிலமில்லாதவர்களையும் விவசாயி என்று அழைக்கக் கூடாது என்றும் வியாக்யானம் கூறுகிறது. இது எவ்வளவு நியாயமானது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். குறைந்த பட்சம் எவ்வளவு நிலம் ஒரு விவசாயிக்கு இருக்கவேண்டும் என்பதை இந்த மசோதா நிர்ணயிக்கிறது. 2-45 p.m.

"சிறிய பட்டாதார் யார் என்றால் ஒரு ஏக்கருக்குக் குறைவாக நஞ்சை நிலத்தையும், தோட்டம் அல்லது மானாவாரி நிலத்தை வைத்

[Sri C. Kandasamy] [17th February 1955

துக்கொண்டிருக்கிறவன் தான் சிறிய பட்டாதார் என்று கருதப்படும் என்றும், மூன்று ஏக்கர் புஞ்சை நிலத்தை வைத்துக்கொண்டிருக்கக் கூடியவனும், தன்னுடைய உடலுழைப்பால் அந்த நிலத்தில் பாடுபட்டு விவசாயம் செய்கிறவனும், அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் தான் சிறிய பட்டாதார்கள் என்று அழைக்கப்படவேண்டும் என்று மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது.

" வேஸ்ட் லான்ட் என்பது சாகுபடிக்கு லாயக்குள்ளதாகவுள்ள எல்லா சர்க்காருடைய நிலமும் என்றும், மற்றும் மாடுகள் மேய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிலங்களும் காடுகளும் வேஸ்ட் லாண்ட் அல்ல என்பதும் இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது தரிசு நிலங்கள் என்று சொல்லி சர்க்கார் உத்யோகஸ்தர்கள் விவசாயிகளை அந்த நிலங்களிலிருந்து வெளியேற்றுகிறார்கள். யுத்த காலத்தில் நிலமில்லாதவர்களுக்கு உணவு உற்பத்தியின் பொருட்டு அப்படிப்பட்ட நிலங்களை சாகுபடி செய்வதற்கு அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவைகள் மாடுகளை மேய்ப்பதற்கும், காடுகளை வளர்ப்பதற்கும் கொடுக்கப்பட்ட நிலங்கள் அல்ல. அப்படிப்பட்ட நிலங்களை விவசாயிகள் பண்படுத்தி செலவு செய்து சாகுபடிக்கு லாயக்குள்ளவைகளாக கொண்டுவந்த பிறகு, அதுவும் பலன் தரக்கூடிய காலத்தில் விவசாயிகளை அந்த நிலத்தைவிட்டு வெளியேற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள். நிலங்களைத் தரம் பார்த்து அவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கலாம். நிலத்தினுடைய தரத்தையும், நில வீஸ்தீர்ணத்தையும், நஞ்சை, கார்டன் தோட்டம் முதலிய நிலங்களின் தரத்தையும் கொண்ட ஒரு நோட்டீசை கெஜட்டிலும் அந்தந்த ஊரில் வெளி வரும் பேபர்களிலும் அந்தந்த தாசில்தார் பிரகடனம் செய்ய வேண்டும் என்ற அதிகாரத்தையும் இந்த மசோதாவின் மூலம் தாசில்தாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அப்படி விநியோகம் செய்யக் கூடிய நிலங்களுக்கு ஏதாகிலும் ஆட்சேபணைகள் இருந்தால் அவைகளும் வரலாம் என்றும் தெளிவாக ஒரு செக்ஷனில் போட்டிருக்கிறோம். அப்படி நிலம் வேண்டுமென்று கேட்கிறவர்கள் இந்த நோட்டீஸ் பிரகடனம் செய்யப்பட்ட மூன்று மாதங்களுக்குள் நிலம் வேண்டுமென்ற மனுக்கள் வரவேண்டும் என்றும் மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

" நிலங்களை விநியோகம் செய்வதற்கு ஒரு கமிட்டியையும் நியமிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த ஸ்தலத்தின் தாசில்தாரும், அந்தந்த தாலூகா பிரதிநிதிகளாகிய எம்.எல்.ஏ.-யும், அந்தந்த தாலூகாவிலுள்ள ஜில்லா போர்டால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஜில்லா போர்ட் மெம்பரும், ஆக மூன்று பேர்கள் கொண்ட ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி நியமிக்கப்பட்ட கமிட்டிக்கு அந்தந்த தாலூகாவிலுள்ள தரிசு நிலங்களை நிலமில்லாதவர்களுக்கு வழங்குவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் எந்த விதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது என்று நினைக்கிறேன். இந்தச் சட்டத்தை அமுலுக்குக்கொண்டு வந்தாலும் அந்தக் கமிட்டியில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏக்களும், ஜில்லா போர்ட் மெம்பர்களும்தான் பெரும்பாலும் வருவதற்கு இடம் இருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

" தரிசு நிலம் சம்பந்தமாக ஏதாகிலும் காரியங்கள் நடக்கவேண்டும். தரிசாகக் கிடக்கும் நிலங்களைப் பண்படுத்தி அவைகளை சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும். இவைகளைப் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் விவசாயிகளாக இருக்கவேண்டும். அவர்கள் வாங்கிக்கொள்ளும் நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவந்து உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். கரம்பையாகக் கிடக்கும் நிலங்களை எடுத்து அவைகளை சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த மசோதாவைக்கொண்டு வந்திருக்கிறோம். இந்த மசோதாவில் எந்த விதமான கட்சி மாறுபாட்டுக்கும் இடமில்லை. கமிட்டியை நியமிக்கவேண்டும் என்று சொல்லும்போது கம்யூனிஸ்ட் கட்சிக்கு சாதகமாக இருக்கும் என்று

17th February 1955] [Sri C. Kandasamy]

நினைப்பதற்கு இல்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட அந்தக் கமிட்டியில் அங்கத்தினர்களாக இருக்கலாம். ஆகையினால் இந்த மசோதாவை ஆட்சேபிப்பதற்கு இடமில்லை.

"இந்தக் கமிட்டிக்கு இப்படி நிலங்களை விநியோகம் செய்ய அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் மாதம் இருமுறையாவது கூடவேண்டும். யாராவது கூட்டத்திற்கு வசதி குறைவு காரணமாகவோ அல்லது வேண்டுமென்றோ வராமலிருந்தால் வேலையில் தடங்கல் இருக்கக்கூடாது. அதற்காகவே ஒரு விதி செய்யப்பட்டிருக்கிறது. கமிட்டியின் நடவடிக்கைகள் நடக்கவேண்டும்.

"இந்தக் கமிட்டிக்கு சிவில் கோர்ட்டு அதிகாரங்கள்கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. தஸ்தாவேஜிகளை வரவழைத்து பார்க்கவும், சாட்சிகளை விசாரிக்கவும் அதன்மேல் உத்தரவுகள் போடவும் இந்தக் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"அடுத்தபடியாக இந்தக் கமிட்டி தரிசு நிலங்களைப் பற்றிய புள்ளி விவரங்களையும் கேட்கலாம். அந்தக் கமிட்டி அங்கங்கு இருக்கும் தரிசு நிலங்களின் புள்ளி விவரங்களையும் சேகரிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த கிராமங்களில் எவ்வளவு கம்யூனல் நிலங்கள் இருக்கின்றன என்று புள்ளி விவரங்கள் அந்தந்த தாலூகா கச்சேரிகளில் இருக்கின்றன. இது ஒரு பெரிய சிக்கலான பிரச்னை அல்ல. ரெவினியு போர்டில் புள்ளி விவரங்கள் தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அந்தந்த தாலூகா தாசில்தார்கள், இந்த சட்டம் நிறைவேறிய பிறகு, மூன்று மாதங்களுக்குள் தங்கள் தங்கள் தாலூகாவில், இருக்கக்கூடிய தரிசு நிலங்களின் புள்ளி விவரங்களையும் அந்த நிலங்களில் எவ்வளவு விநியோகிக்க தயாராக இருக்கிறது என்பதையும் பிரகடனம் செய்யவேண்டும். இதற்கு வேண்டிய ஒரு விதியும் இந்த மசோதாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது தரிசு நிலங்களை $\frac{1}{4}$ ஏக்கர் ஒரு ஏக்கர் கொடுக்க வேண்டுமென்ற கிளர்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. கனம் ஸ்ரீ ஓ.பி. ராமசாமி ரெட்டியார் முதல் மந்திரியாக இருந்தபோது அக்ரேரியன் ரிபார்ம்ஸ் கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார். இந்த மாகாணத்திலுள்ள தரிசு நிலங்களின் புள்ளி விவரங்களை அதில் அவர் கொடுத்திருக்கிறார். இந்த ராஜ்யம் பூராவும் கணக்கு எடுத்துப் பார்க்கும் போது இந்த சென்னை ராஜ்யத்தில் ஒரு கோடியே ஐந்து லட்சம் ஏக்கருக்கு மேல் அரசாங்கத்திற்கும் இதரர்களுக்கும் சொந்தமான தரிசு நிலங்கள் இருக்கின்றன என்று கூறியிருக்கிறார். அதுவும் சாகுபடிக்கு லாயக்காக இருக்கின்றன என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதன் மூலம் குறைந்த பட்ச வருமானம் எவ்வளவு வரும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த மாகாணத்தில் பொருளாதார நிலைமை எந்த அளவில் அபிவிருத்தி அடையும் என்பதையும் அவர் கணக்குக் கொடுத்திருக்கிறார். அவருடைய கணக்கைப் பார்த்தால் இது எவ்வளவு முக்கியமான பிரச்னை என்று புரிந்துகொள்ள முடியும். குறிப்பாக யுத்த காலத்திற்குப் பிறகு உணவு உற்பத்திக்காக எவ்வளவோ நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1942-43 லிருந்து 1948-49 வரையில் சுமார் லட்சத்து எழுபத்தையாயிரம் சொச்சம் ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் 77,693 டன் உணவு தான்யம் அதிகரித்திருக்கிறது. இந்த விவரங்களை வைத்துகொண்டு பார்த்தால் எந்த அளவில் இந்த ராஜ்யம் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைய முடியும் என்பது தெரியும். அதன் மூலம் மூலப்பொருள்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நிலைமை எவ்வளவு ஏற்படும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

"இந்த வகையில் அந்தக் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு தரிசு நிலங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி அந்த தாசில்தார் மூன்று மாதங்களுக்குள் பிரகடனம் செய்யவேண்டும்.

[Sri C. Kandasamy] [17th February 1955

அதன் பிறகு நிலங்கள் வேண்டுமென்கிறவர்கள் மனுச் செய்துகொள்ளலாம் என்றும் விளம்பரம் செய்யவேண்டும். இதற்கு வேண்டிய ஷரத்தும் இந்த மசோதாவில் சேர்ந்திருக்கிறது.

"நிலத்தை விநியோகம் செய்யும்போது அதை எப்படி நிர்ணயம் செய்யவேண்டுமென்பதற்கும் விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விவசாயி தொழிலாளிகளுக்கு முதலிடமும், நிலமில்லாத குத்தகைக்கோவாரத்திற்கோ விவசாயம் செய்யும் விவசாயிக்கு அடுத்தபடியாகவும், சிறிய பட்டாதாரர்களுக்கு அடுத்தபடியாகவும் நிலங்களைப் பிரித்துக்கொடுக்க வேண்டும் என்ற ஒரு திட்டமும் இதில் வகுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் மூன்றாவது வகையில் கொடுக்கும்போது ஒருவருடைய தகப்பனோ அல்லது தாயாரோ அல்லது பிள்ளையோ அல்லது பெண்ணோ குத்தகைகாரராகவோ அல்லது சிறிய பட்டாதாரராகவோ இருந்து நிலத்தில் நேரடியாக உழைத்தால் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஷெடியூல்ட் வகுப்புக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் முதலிடம் கொடுக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற விஷயங்களில் ஒரேவிதமாக இருந்தால் பிற்பட்டவர்களுக்கும் சிறு நிலக்காரர்களுக்கும் முதலிடம் கொடுக்கப்படவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

"இவ்வளவு அதிக பட்சம் கொடுக்கவேண்டும் என்றும் இவ்வளவு குறைந்த பட்சம் கொடுக்கப்படவேண்டும் என்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மசோதா பூராவும் நேரடியாக உடலுழைப்பு செய்தவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நஞ்சை நிலம், தோட்ட நிலமாக இருந்தால் உயர்ந்த பட்சம் ஒரு ஏக்கரும் குறைந்த பட்சம் ½ ஏக்கரும் கொடுக்கப்படவேண்டும் என்றும். புஞ்சையாக இருந்தால் உயர்ந்த பட்சம் மூன்று ஏக்கரும் குறைந்த பட்சம் 1½ ஏக்கரும் கொடுக்கப்படவேண்டும் என்றும் நிர்ணயம் சொல்லப்பட்டிருக்கிறது.

2-55 p.m. "அடுத்தபடியாக இந்த மசோதாவின் 8-வது ஷரத்திலேயே இப்படி விநியோகிக்கப்படும் நிலத்தை உடையவர்களுக்கு அவற்றில் எவ்வளவு உரிமை உண்டு என்பதும் நிர்ணயிக்கப்பட்டுவிடுகிறது. அவர்கள் அந்த நிலத்தில் சுய உழைப்பைக்கொண்டு உழைத்து விவசாயம் செய்து பாடுபடுகின்ற வரையில்தான் அது அவர்களுடைய நிலமே தவிர, அதை பட்டா மாற்றவோ, அடமானம் செய்யவோ அவர்களுக்குக் கொஞ்சம்கூட அதிகாரம் கிடையாது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

"அடுத்தபடியாக ஷரத்து ஒன்பதிலேயே இந்த மசோதாவின்படி அமைக்கப்படப்போகின்ற கமிட்டியானது நிலம் பிரித்துக்கொடுக்கும் வேலையை காலவரையின்றி நீடித்துக்கொண்டே போகக்கூடாது என்பதற்காகத்தான், அதாவது இந்தப் பிரச்னையை குறுகிய காலத்திலேயே தீர்த்துவிடவேண்டுமென்பதற்காகத்தான், இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து இரண்டாண்டுக்குள்ளேயே ஒவ்வொரு கமிட்டியும் தனது வேலையை முடித்துவிடவேண்டுமென்ற நிபந்தனையைப் போட்டிருக்கிறோம்.

"இப்படி மிகச் சுலபமான முறையில், எளிய வகையில் மசோதா யாருக்கும் தீமையை விளைவிக்காதவாறு தயாரிக்கப்பட்டிருக்கிறது. உத்யோகப்பற்றற்ற மசோதா இது என்பதற்காக இதை எதிர்க்காமல், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதைக் கொண்டு வந்திருக்கிறார்களே, ஆகவே இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது, அரசியல் நோக்கம் இருக்கிறது என்று சந்தேகப்படாமல், இந்த ராஜ்யத்திலுள்ள ஏழை எளிய விவசாய மக்களின் நலனை உத்தேசித்து, இந்த ராஜ்யத்திலுள்ள ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களின் நல்வாழ்வை உத்தேசித்து இந்த மசோதாவை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

17th February 1955]

* SRI A. SAMBASIVAM :—' கனம் தலைவர் அவர்களே, தரிசு நிலங்களை நிலமில்லாத விவசாயிகளுக்கு வினியோகிக்க வேண்டுமென்கின்ற கொள்கை முன்பே சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு எங்களுடைய ஆத்தூர் தாலூகாவின் தொகுதியில் அமுல் செய்யப்பட்டும் வருகிறது. அதுவும் இந்த மசோதாவில் கொடுக்கப்பட்டுள்ள கொள்கைப் படியேதான் முதலில் நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கும், ஹரிஜனங்களுக்கும், பின்னர் நிலம் உள்ளவர்களாக இருந்தால் 20 ரூபாய்க்குக் குறைவாக கந்தாயம் செலுத்துகிறவர்களுக்கும் தரிசு நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஆத்தூர் தாலூக்காவில் இதற்காக சர்க்கார் நான்கு தாசில்தார்களை நியமித்து தரிசு நிலங்களை எல்லாம் நிலமில்லாதவர்களுக்கும், அடுத்தபடியாக சிறிது நிலம் உடைய உள்ளூர்காரர்களுக்கும் கொடுத்து வருகின்றார்கள். சிவாய்ஜாமா நிலங்களையெல்லாம் கணக்கு எடுத்து அவை ஏழை ஹரிஜனங்களிடமிருந்தால் அவர்களுக்கே பட்டா செய்யப்பட்டு வருகின்றன. இரண்டொரு இடங்களில் அந்த ஏழை ஹரிஜனங்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பதாகத் தகவல் வந்தது. அதைக் கலெக்டரின் கவனத்திற்கு நான் எடுத்துச் சென்று அந்த உத்திரவை மாற்றியிருக்கிறேன்.

" ஆகவே ஏற்கெனவேயே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கையை, அதுவும் காரியத்திலே நிறைவேற்றிக் கொண்டு வரும் காரியத்தைச் செய்ய எதிர்க் கட்சிக்காரர்கள் ஒரு மசோதா கொண்டுவந்திருப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. ஹரிஜனங்களுக்கும், ஏழை எளிய நிலமில்லாத விவசாயிகளுக்கும் தரிசு நிலங்களைப் பிரித்துக் கொடுக்கக் கூட சர்க்கார் விரும்பவில்லை, நாங்கள் ஒரு மசோதா கொண்டுவந்தோம், அதையும்கூட ஒப்புக்கொள்ளவில்லை என்பதாக சர்க்கார் ஒருக்கால் இந்த மசோதாவை நிராகரித்தால் மக்களிடையே பிரசாரம் செய்ய வசதியாயிருக்கும் என்கின்ற பல காரணங்களுக்காகவே இது ஒரு அரசியல் நாடகமாகக் கொண்டுவரப்பட்டு நடிக்கப்படுவதாக நான் நினைக்கவேண்டியிருக்கிறது. சர்க்காரால் ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையை, தாங்கள் தான் இப்பொழுது அந்தக் கொள்கையைப் புதிதாகச் சொல்வது போல எதிர்க் கட்சிக்காரர்கள் இந்த மசோதாவைக் கொண்டுவந்து அரசியல் நாடகம் நடிப்பது எனக்கு ஒரு பக்கம் விந்தையாகவும், இன்னொரு பக்கம் வியப்பாகவும் இருக்கிறது.

" நிலம் கொடுக்கப்படுகின்ற முறையில் அங்கங்கே சிறு சிறு குறைகள் இருக்கலாம். அல்லது மிக்க காலதாமதம் ஆகக்கூடிய இடங்களும் இருக்கலாம். இதைப்போன்ற குறைகள் எங்கள் பக்கத்திலும்தான் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சட்டத்தை ஒப்புக்கொண்டால் அந்தக் குறைகளே இனிமேல் வராது என்பதற்கும் என்ன உத்தரவாதம் இருக்கிறது. ஆகவேதான் சர்க்காரால் ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டு, நடைமுறையில் செய்து வரப்படுகின்ற ஒரு விஷயத்திற்காக எதற்காக இந்த மசோதா வேண்டும் என்கின்ற விஷயம்தான் எனக்குப் புரியாதாக இருக்கிறது. அங்கங்கே குறைபாடுகள் இருந்தால் அதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவந்து அவற்றை இப்படிச் செய்யவேண்டுமென்று சர்க்காருக்கு நல்ல முறையில் யோசனை சொல்லவேண்டியதே மிகவும் அவசியமாகும். சில இடங்களில் எனக்குத் தெரியும். முதலில் ஹரிஜனங்களுக்கு நிலம் வழங்கப்படும். பின்னர் யார் அதிகப் பணம் தருகிறார்களோ அவர்களுக்கு இந்த நிலம் ஹரிஜனங்களிடமிருந்து பிடுங்கிக் கொடுக்கப்பட்டுவிடும். காரணம் அங்கு இருக்கக்கூடிய கணக்குப் பிள்ளைகள் அந்தமாதிரியான முறையில் சில இடங்களில் தவறாக நடந்துகொண்டு வருகிறார்கள். இந்த மாதிரியான விஷயங்களை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அவர்கள் நல்ல முறையில் அவற்றைத் திருத்த தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். குறிப்பாக எங்கள் தொகுதியில் இம்மாதிரியான சில குறைபாடுகள் இருந்தன. அவற்றை சர்க்காருடைய கவனத்திற்கு நானும், ஸ்ரீ எம். பி. சுப்ரமணியம் போன்றவர்களும் கொண்டுவந்திருக்கிறோம். சர்க்கார் இன்றையதினம் சில ஸ்பெஷல் அதிகாரிகளைப் போட்டு அந்தத் தரிசு நில விநியோகம் நல்ல முறையில்

[Sri A. Sambasivam] [17th February 1955

நடக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சென்ற மாதம் பன்னிரண்டாயிரம் ஏக்கரா வரையில் பிரித்துக் கொடுக்கப்பட்டுவிட்டதாக ஜில்லாக் கலெக்டர் அறிக்கை விடுத்திருக்கிறார். இன்னும் மார்ச்சு மாதம் 31-ந் தேதிக்குள் மேலும் முப்பதாயிரம் ஏக்கராக்கள் விநியோகம் செய்யப்பட்டுவிடும் என்று அந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.

"சில இடங்களில் காலதாமதம் ஆகின்றது என்பது வாஸ்தவம். அதோடு நிலம் பட்டுவாடா செய்யப்பட்டும் சில இடங்களில் ஹரிஜனங்கள் அவற்றில் விவசாயம் செய்யமுடியாத நிலைமையில் இருக்கிறார்கள். காரணம் அவர்களிடம் போதுமான பண வசதியில்லாததேயாகும்.

(இந்தச் சமயத்தில் உதவி சபாநாயகர் அக்கிராசனம் வகித்தார்.)

"1953-54-ம் வருஷத்தில் பல இடங்களில் இம்மாதிரி பயிர் செய்யப் படவில்லை. ஆகவே சர்க்கார் ஆரம்பத்தில் அவர்களுக்கு எல்லாம் கொஞ்சம் பண உதவி செய்து, அந்தப் பணத்தை மூன்று நான்கு மகசூல்களில் திருப்பி அவர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம். சில இடங்களில் பாதிச் செலவை சர்க்காரே ஒப்புக்கொள்ளவும் செய்யலாம். இப்படிச் செய்தால் நாம் வழங்கும் தரிசு நிலங்களில் உண்மையாகவே அவர்கள் எல்லோரும் விவசாயம் செய்ய ஆரம்பிப்பார்கள். இதனால் ஹரிஜனங்களின் நிலைமை வெகுவாக உயரவும் கூடும்.

"அடுத்தபடியாக இன்னொரு விஷயம். தரிசு நிலங்களை ஹரிஜனங்களுக்குப் பல இடங்களில் வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னேன். அதோடு சில நாட்களுக்கு முன்பாக ரெவினியு டிபார்ட்மெண்டிலிருந்து ஒரு தாக்கீது எல்லா ஜில்லாக் கலெக்டருக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறோம். அதாவது அதில் இம்மாகாணத்திலுள்ள தரிசு நிலங்களில் எவையெவை "வால்யுபில் லாண்டு', என்று குறிப்பிட்டு அனுப்பியிருக்கிறார்களாம். அந்த விலைமதிப்புள்ள நிலங்களை ஹரிஜனங்களுக்குக் கொடுத்திருந்தால் அவற்றுக்காக ஏதாவது கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் மறுபடியும் உத்திரவுபோட்டுவிடுவார்களோ என்று அவர்கள் பயப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எங்காவது அதிகாரிகள் அப்படிக் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருந்தால்கூட அவற்றை அரசாங்கம் தள்ளுபடி செய்வதோடு கூட, முன்பே இனாமாகக் கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு இனிமேல் எவ்விதப் பணமும் வசூலிக்கப்படாது என்கின்ற அறிக்கையை அவர்கள் விடுத்தாகவேண்டும். ஏனென்றால் சில அரசியல் கட்சிகள், ஹரிஜனங்கள் வசிக்கும் வட்டாரத்திற்குச் சென்று அரசாங்கம் ஏழை ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களுக்கு எல்லாம் பணம் வசூல் பண்ண வேண்டுமென்று உத்திரவு போட்டிருப்பதாகவும், அவர்கள் அம்மாதிரியாகப் போடாமல் இருக்கும்படி சண்டை பிடித்துக்கொண்டிருப்பதாகவும் பிரசாரம் செய்துவருகின்றன. ஆகவே சர்க்கார் உடனடியாக அரசாங்கம் வழங்கும் நிலம், மதிப்புள்ள நிலமாக இருந்தாலும்கூட, எவ்வித தொகையும் உங்களிடமிருந்து வாங்கமாட்டோம், என்பதாக ஒரு அறிக்கையை விட்டு அந்த ஹரிஜனங்களுடைய உள்ளத்தில் எழுப்பப்பட்டிருக்கும் பயத்தைப் போக்க வேண்டுமென்றும் வழங்கப்படும் நிலம் இனாமாகவே வழங்கப்படுகின்றது என்கின்ற உத்தரவாதத்தையும் அளித்தாகவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அதோடு இன்னொரு விஷயம். தரிசு நிலங்களை ஹரிஜன மக்களுக்கோ, அல்லது நிலமில்லாத விவசாயிகளுக்கோ கொடுக்கப்படும்பொழுது கிராமங்களிலுள்ள மேச்சல் பூமியை தரிசு நிலமாகக் கருதி கொடுத்துவிடாமல் இருக்கும்படியான உத்திரவையும் போட்டாகவேண்டும். ஏனென்றால் மேய்ச்சல் பூமி வினியோகிக்கப்பட்டுவிடுமாகில் அந்தந்த கிராமங்களுக்குத்தான் மிகக் கஷ்டமாகும்.

3-05 p.m. "அந்தந்த கிராமங்களில் உள்ள நிலங்களை ஹரிஜனங்களுக்கும், நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கும் விநியோகம் செய்கின்றபோது மேய்ச்சல் புறம்போக்கு என்ற ஒரு பகுதியும் களத்துப் புறம்போக்கு என்ற

17th February 1955] [Sri A. Sambasivam]

மற்றொரு பகுதியும் அவசியம் ஒதுக்கவேண்டும். அதன்படி அரசாங்கமும் ஒரு அறிக்கை வெளியிடவேண்டும். சில கிராமங்களில் பல தகராறுகள் வருகின்றன. நிலங்களை அடமானம் செய்யும்போது அவைகள் தன்னுடையது என்றும், அவைகள் மேய்ச்சல் புறம்போக்கு நிலம் என்றும், களத்துப் புறம்போக்கு நிலம் என்றும் சொல்லுகிறார்கள். அதனால் தாசில்தார் என்ன செய்வது என்று தெரியாமல் அங்கு சாகுபடி செய்துவரும் விவசாயிகளை வெளியேற்றிவிடுகிறார். அதனால் கிராமங்களில் நிலங்களை விநியோகம் செய்வதற்கு முன்பாக மேய்ச்சல் தரை எவ்வளவு என்பதையும், களத்துப் புறம்போக்கு எவ்வளவு என்பதையும் நிர்ணயம் செய்துகொண்டு நிலங்களை ஒதுக்கவேண்டும். இவ்விதம் பிரித்துக்கொடுப்பதற்கு ஏற்கெனவே சர்க்காரிடம் திட்டம் இருக்கிறது. ஏற்கெனவே எடுத்துவரும் காரியங்கள்தான் இது. புதிது ஒன்றும் இல்லை. அரசாங்கம் அறிக்கைகளின்மூலம் இவைகளைச் செய்தால் போதும். அந்தந்த கிராமங்களிலுள்ள நிலங்களை எடுத்து கலெக்டரும் தாசில்தாரும் பட்டா செய்துவிட்டால் மட்டும் போதாது. நிலத்தைப் பண்படுத்தவேண்டும். அதற்குப் பாதி பணம் கொடுத்து விவசாயிகளால் வாங்க முடியாது. அவ்விதம் பண்படுத்தாமல் நிலத்தைமட்டும் கொடுத்துவிட்டால் போதாது. அதனால் பயனில்லை. நில விநியோக முறை இப்பொழுது நடைமுறையில் இருக்கிறது. அதனால் இந்த மசோதா தேவை இல்லை. இதற்கென ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும் என்று சொல்வதில் பயனில்லை என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டு இந்த மசோதாவை எதிர்த்து இத்துடன் முடித்துக்கொள்கிறேன்."

Sri A. RATNAM.—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் கந்தசாமி அவர்கள் கனம் ராமமூர்த்தி அவர்கள், சார்பாகக் கொண்டு வந்த இந்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகளைப் பேச ஆசைப்படுகிறேன். இந்த மசோதா ஒரு நிலச் சொந்தக்காரருடைய நிலத்தை எடுத்து அதை விநியோகம் செய்வதோ அல்லது பிரித்துக் கொடுப்பதோ அல்லது வாங்கிக்கொடுப்பதோ என்ற முறையில் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மசோதாவில் கூறப்பட்டிருப்பது என்னவென்றால் பயிரிடக்கூடிய தரிசு நிலங்கள் எங்கு இருக்கிறதோ அந்த நிலங்களை எடுத்து விவசாயிகளுக்கும், விவசாய கூலிகளுக்கும் கொடுத்து அதன் மூலம் நாட்டிற்கு நன்மை அளிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. மக்களுக்கு ஒரு நல்ல சூழ்நிலையை உண்டுபண்ணுவதற்குத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவினால் எந்த நிலச்சுவாந்தாருக்கும் பாதகம் ஏற்படாது. அரசாங்கத்திக்குக் கூட எந்த அளவிலும் நஷ்டம் இல்லாமல் லாபமடையக்கூடிய நிலைமையில் இருக்கிறது. ராஜ்யத்திலுள்ள வருவாயை அதிகப்படுத்துவதற்கும் ராஜ்யத்திலுள்ள செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கும் இந்த மசோதா வழிவகை செய்கிறது. நாட்டின் உணவு நிலைமை மோசமாகப் போகாமலும் உணவுக்காக ஆந்திர நாட்டை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டாம் என்பதற்காகவும், நம்முடைய ராஜ்யத்தின் உணவு அளவை நாமே உற்பத்தி செய்துகொள்வதற்கும் இந்த மசோதா வழிவகை காண்பிக்கிறது. தரிசாகக் கிடக்கும் நிலங்களை உழுது பயிரிட்டு நாட்டை சுபிட்சமாக ஆக்கவேண்டும் என்பதற்காகவும் தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

"நம் நாடு கரம்பாக இல்லாமலும் கட்டாந்தரையாக இல்லாமலும் பசுமை நிறைந்த பூமியாகவேண்டும் என்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. நிலத்தைப் பண்படுத்தக்கூடிய அளவில் பல லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாயை செலவழிக்க மக்களைத் தூண்டக்கூடிய அளவில் இந்த மசோதா இருக்கிறது. அது மட்டுமல்ல விவசாயத் தொழிலில் விதவிதமாக கஷ்டங்கள் இருப்பதை உடனடியாகத் தீர்ப்பதற்கு வேண்டிய வசதிகளும் அனுகூலங்களும் இந்த மசோதாவில், இருக்கிறது. ஊர்களுக்குக் கோடியில் சேரிகள் என்று, சொல்லக்கூடிய இடங்களில் வசித்துவரும் ஏழை விவசாயிகளுக்கு வசதி செய்கிறது இந்த மசோதா. ஒரு ஏக்கர் நிலம்கூட வைத்துக்கொள்ளக்

கூடாது என்றும் ஆனால் உயர்ந்த ஜாதிக்காரர்கள் எத்தனை ஏக்கர் நிலம் வேண்டுமென்றாலும் வைத்துக்கொள்ளலாம் என்றும் வகுத்து இந்த தாழ்த்தப்பட்டவர்கள் எப்பொழுதும் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருக்க வேண்டும் என்ற கொள்கையை மாற்றி அமைப்பதற்கும் இந்த மசோதா வழிவகை காண்பிக்கிறது. தஞ்சை பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் போன்ற சட்டங்களை அமுல் நடத்துவதில் தடங்கல் செய்துகொண்டு வருவதைத் தடுக்கவும், தீண்டாமை என்பதை அகற்றுவதற்கும் இந்தச் சட்டம் அனுகூலம் செய்கிறது. வருமையின் காரணமாக அடிமையாக்கப் பட்டு தவித்துக்கொண்டிருக்கும் ஏழை விவசாயிகளுக்கும், ஹரிஜன மக்களுக்கும் சுபிட்சத்தை உண்டாக்கக்கூடிய சட்டமாக இது அமைந்திருக்கிறது. அது மட்டுமல்ல. வேலையில்லாத் திண்டாட் த்தை இது ஒழித்துக் கட்டுகிறது. வேலையில்லா திண்டாட்டத்தினால் வருமை ஏற்பட்டு அந்த வறுமையினால் தாழ்த்தப்பட்டிருக்கும் மக்களுக்கு இது சுபிட்சத்தை உண்டாக்குகிறது. அவர்களுடைய வறுமையை அகற்றுவதற்கும் இது வழிவகை செய்கிறது. வறுமையின் காரணமாக, அந்த வறுமையைப் போக்கிக்கொள்வதற்கு கொலை போன்ற பல கேவலமான காரியங்களைச் செய்வதற்கு இப்பொழுது இடம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலைமையை இந்த மசோதாவின் மூலம் போக்கிவிடலாம். ஒருவனுக்கு வேண்டிய உணவு இல்லாவிட்டால்தான் அவன் எந்தக் காரியத்தைச் செய்யவும் துணிந்து விடுகிறான். அவனுக்கு உணவு கிடைத்துவிட்டால் அவன் இப்படிப்பட்ட கேவலமான காரியங்களைச் செய்யவேமாட்டான். அவன் அடிமை என்னும் நிலைக்கும் வரமாட்டான். வறுமைக்கு ஆளாகமாட்டான். அவன் முன்னேற்றமடைந்தால் நாடு சுபிட்சம் அடையும், நாடு முன்னேற்றமடையும், நாடு நாகரீகம் அடையும். அவர்கள் முன்னேற்றமடையவில்லை என்றால் நாடு முன்னேற்றமடையாது. நாடு முன்னேற்றமடைந்தால்தான் சுபிட்சம் என்று சொல்லலாம். அவர்கள் வளமாக இருந்தால்தான் நாடும் வளமாக இருக்கிறது என்று சொல்லலாம்.

" நாட்டிலுள்ள மக்கள் வறுமையில் இருந்தால், வறுமையில் செத்துக் கொண்டிருந்தால், நாட்டில் கூலியாக இருந்தால், அடிமைகளாக இருந்தால் அடிமைத் தொழில் செய்தால் நாடு சுதந்தரம் அடைந்துவிட்டது என்று சொல்லமுடியாது. நாடு சுதந்தரம் அடைந்துவிட்டது என்று சொல்வதிலும் அர்த்தமில்லை. சுதந்தர நாடு என்றால் அதிலுள்ள மக்கள் சுதந்தரமாக வாழவேண்டும், மனிதத் தன்மையோடு வாழவேண்டும், நல்ல முறையில் சுகாதார முறையில் வாழவேண்டும், நல்ல இடங்களில் வாழவேண்டும், நல்ல உடை உடுக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் நாடு சுதந்தரம் அடைந்துவிட்டது என்று காந்திஜிகூட சொல்லியிருக்கிறார். இப்பொழுது சுதந்தர இந்தியாவில் விவசாய மக்கள் சுதந்தரமாக விவசாயம் செய்வதற்கு நிலம் கிடையாது. ஆனால் ஒரு சிலர் ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாய மக்களிடத்தில் ஒரு ஏக்கரா நிலம்கூட கிடையாது. அவர்களுடைய குடும்பங்கள் வாழவேண்டுமென்றால் விவசாயக் கூலி வேலைசெய்து வாழவேண்டியதாக இருக்கிறது. ஒரு படி நெல்லுக்கு விவசாயம் செய்து கூலி வாங்கிக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இந்த ஒரு படி, இரண்டு படி, நெல் கூலி வாங்குவதற்கு அவர்கள் காலை முதற்கொண்டு இரவு வரையில் வேலை செய்யவேண்டியதாக இருக்கிறது. இந்த நிலைமையில் அவன் தன்னுடைய பலத்தை இழந்து செத்து மடியவேண்டியதாக இருக்கிறது. அவனுடைய கன்னங்கள் ஒட்டிப்போய் தேகம் மெலிந்து நடை பிணமாக இன்று நாட்டில் அவன் காட்சி அளிக்கிறான். நிலம் வேண்டுமென்று கேட்டாலும் அதைக் கொடுப்பது கிடையாது. தரிசு நிலங்களைக் கேட்டாலும் அவர்களுக்கொடுப்பது இல்லை. அவர்களுக்கு வேண்டிய கூலி கிடைக்காததால் அவர்கள் நாட்டில் எலும்பும் தோலுமாக காட்சி அளிக்கிறார்கள். அவர்கள் நிவாரணம் தேடுவதற்குத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பொழுது நாட்டில் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களும் பிற்பட்ட இனத்தவர்களும் நூறுக்கு 90 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நிலமில்லாத விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது நாட்டில் என்ன நடக்கிறது. கோடிக்கணக்கான பணத்தை எடுத்து ஐந்து ஆண்டு திட்டம் என்றும் அணைக்கட்டு திட்டம் என்றும் செலவு செய்து

17th February 1955] [Sri A. Ratnam]

வருகிறார்கள். அப்படி செலவிட்ட பணமெல்லாம் விவசாயக் கருவிகள் வாங்குவதற்கும், விவசாய மிஷின்கள் வாங்குவதற்கும், பம்பு செட்டுகள் வாங்குவதற்கும், மின்சார வசதிகளைச் செய்துகொள்வதற்கும், செலவிடப் படுகிறதேயொழிய விவசாயிகளுக்குச் செலவழிக்கப்படவில்லை. அவைகள் வாங்குவதினால் சில பணக்காரர்களுக்குத்தான் அது சௌகர்யமாக இருக்கிறது. யார் பணக்காரர்களாக இருக்கிறார்களோ, யார் அதிக நிலம் உள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் அவைகள் பயன் படுகின்றன. ஏழை விவசாயிகளுக்கும், ஏழை விவசாயக் கூலிகளுக்கும் அந்தப் பணம் பயன்படவில்லை. ஏன்? நாட்டிலுள்ள 100 பேருக்கு 90 பேர்கள் நிலமில்லாதவர்களாக இருக்கிறார்கள். அந்தக் காரணத்தினால்தான் அவர்கள் பயனடையவில்லை. சர்க்கார் கோடிக்காணக்கான ரூபாய் செலவிட்டாலும் அது ஜமீந்தார்களுக்கும் பணக்காரர்களுக்கும் தான் போய் சேருகிறது. பெரும் நிலம் படைத்தவர்களுக்கும் அணைக்கட்டு கட்டி பலனடைகிறவர்களுக்கும்தான் இந்தப் பணம் செலவிடப்படுகிறது. அவர்களுக்குத்தான் இந்தப் பணத்தின் மூலம் வழிவகை செய்வதாக இருக்கிறது.

"சேலம் ஜில்லாவில் இப்பொழுது பல எக்கர் தரிசு நிலங்களை நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுக்கப்போகிறார்கள். அவைகளையெல்லாம் ஏழை நிலமில்லா விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும். அப்படி நிலம் கொடுக்கும் திட்டத்தை அரசியலார் திட்டப்படி வகுக்கவேண்டுமென்றால் மக்கள் சுபிட்சமாக வாழும் வகையில் திட்டம் வகுக்கவேண்டும். சோஷலிஸ்டி அடிப்படையில் ராஜ்யம் இருக்கவேண்டுமென்றால் இந்த தரிசு நிலங்களை நேர்மையாக அளிக்கவேண்டும். இதையே காங்கிரஸ் மெம்பர்கள் முன்பு பேசியபோதும் குறிப்பிட்டார்கள்.

"அடுத்தபடியாக எனக்கு முன்பு பேசிய ஒரு காங்கிரஸ் அங்கத்தினர் அவர்கள், ஹரிஜனங்களுக்கு வழங்கப்படும் தரிசு நிலங்களில் அந்த ஹரிஜனங்கள் பயிர் செய்வதே கிடையாது என்று குறிப்பிட்டார். 'அந்த ஹரிஜனர் ஏன் பயிரிடவில்லை? தனக்கு வழங்கப்பட்ட நிலத்தில் அவருக்கு விவசாயம் செய்யவேண்டுமென்ற ஆர்வம் கிடையாதா?' என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். இன்றையதினம் ஹரிஜன மக்கள் பொருளாதாரத்தில் மிகத் தாழ்ந்த நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன். வெறும் நிலத்தை மாத்திரம் கொடுத்துவிட்டால் அவன் நிலத்தைப் பண்படுத்தப் பணத்திற்கு எங்கே போவான்? விதை வாங்கப் பணத்திற்கு எங்கே போவான்? மாடுகள் வாங்கப் பணத்திற்கு எங்கே போவான்? இதை அரசியலார் நன்கு கவனித்தாகவேண்டும். உண்மையிலேயே ஹரிஜனங்களுக்குத் தரிசு நிலங்களை வழங்கி அவற்றில் அவர்கள் நல்ல முறையில் விவசாயம் செய்து பலனடைய வேண்டுமென்று விரும்பினால் நல்ல நிலங்களை அவர்களுக்கு வழங்கும்போதே அவர்களுக்குப் பண உதவியும் செய்யவேண்டும். ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறையப் பணம் ஒதுக்கியிருக்கிறோம். அந்தப் பணத்தை எடுத்தாவது தரிசு நிலங்களை சாகுபடி செய்வதற்காக என்று ஹரிஜனங்களுக்கு வழங்கப்படுவது மிகவும் முக்கியமானது என்பதை சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏதோ நிலம் கொடுத்தோம் என்று பேருக்காக, அரசியல் நோக்கத்திற்காக, கட்சிப் பிரசாரத்திற்காக சர்க்கார் இந்தமாதிரியான முறையில் தரிசு நிலங்களை வழங்கி வருவதாகச் சொல்லிக்கொண்டிருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். உண்மையிலே அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதில் சர்க்காருக்கு அக்கரையிருக்குமானால் இந்த மசோதாவை அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்றே நான் நம்புகிறேன்.

3-15 p.m.

"ஏன் இப்படிக் குறிப்பிடுகிறேன் என்றால், ஏற்கெனவேயே ஹரிஜன மக்கள் உழுது பயிரிட்டு பண்படுத்தி வைத்திருந்த நிலங்களை அவர்களிடமிருந்து பிடுங்கி தியாகிகள் என்ற பெயராலே தங்களுக்கு வேண்டியவர்களுக்கு சர்க்கார் கொடுத்துவிட்டார்கள். இன்றைக்கும் ஏதாவது ஒரு குறிப்பிட்ட பூமியைத் தனக்கு வழங்கவேண்டுமென்று எந்த ஹரிஜனனாவது மனுப்போட்டுக்கொண்டான் என்றால் உடனே அந்த பூமி குட்டைப் புறம்போக்கு, அல்லது ஆற்றுப் புறம்போக்கு, அல்லது மேய்ச்சல் நிலம் என்ற காரணங்களைச் சொல்லி அவனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு

வருகின்றது. இப்படிச் செய்பவர்கள் பெரு நிலச்சுவாந்தார்கள். இவர்களுக்கு உட்கையாகத்தான் கிராமத்திலுள்ள கர்ணங்களோ, அல்லது தாசில்தார்களோ, அல்லது ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களோ இருக்கின்றார்கள். எங்கெங்கே தரிசு நிலங்கள் இருக்கின்றன என்பதையே இந்த ஏழை ஹரிஜனங்களுக்குத் தெரிவிப்பது கிடையாது.

"எனக்குத் தெரியும், சில இடங்களிலே அங்குள்ள கர்ணம் தன்னுடைய சொந்த நிலம்போல் சர்க்காரின் தரிசு நிலத்தை ஹரிஜனங்களை விட்டு விவசாயம் செய்யச்சொல்லி அதில் வரும் வருமானத்தில் பெரும் பகுதியை தங்களிடம் கொடுத்துவிடவேண்டுமென்று சொல்வார்கள். ஓராண்டு ஈராண்டு கொடுத்துவிட்டுப் பின்னர் அந்த ஹரிஜன் தர மறுத்தால் உடனே மேலே எழுதி அது குட்டைப் புறம்போக்கு, அல்லது மேய்ச்சல் நிலம் என்று சொல்லி அவற்றை அவர்களிடமிருந்து பிடுங்கிவிடுகிறார்கள். பத்து, ஐந்து ஆண்டுகளாக நல்ல முறையில் ஹரிஜனங்களால் உழுது பயிரிடப்பட்டு வந்த நிலங்களெல்லாம் அவர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு தியாகிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆனால் ஹரிஜனங்களுக்கு ஒரு சென்டு நிலம்கூட வழங்கப்படுவது கிடையாது.

"ஆகவேதான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், ஹரிஜனங்களுக்கும், தரிசு நிலங்களைக் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த மசோதா வந்திருக்கிறது. இது நிறைவேற்றப்படவேண்டியது ரொம்பவும் அவசியமாகும். சர்க்கார் இதற்கு எவ்விதமான ஆட்சேபணைகளையும் சொல்லாமல் இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

DEPUTY SPEAKER :—"I fix a time-limit of five minutes for each member."

SRI K. V. RAMASWAMI :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கடந்த மூன்று வருஷ காலமாக இந்தச் சபையில் தரிசு நிலங்களைப்பற்றி பேசிவந்திருக்கிறோம். இந்த இராஜ்யத்திலுள்ள தரிசு நிலங்களை நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு உடனடியாக வினியோகிக்க வேண்டுமென்பதற்காக இந்த **Distribution of Waste Land** மசோதா ஸ்ரீ கந்தசாமி அவர்களால் சபையில் பிரேரிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சபையில் காலையில் இரண்டு உத்தியோகப்பற்றற்ற மசோதாக்கள் பிரேரிக்கப்பட்டன. அவற்றுக்கு ஏற்பட்ட கதியே இந்த மசோதாவுக்கும் ஏற்படக் கூடாது என்ற எண்ணத்தில் இதை சர்க்கார் கட்சித் தலைவர் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"மசோதாவின் அடிப்படைக் கொள்கையில் யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் இது இந்த ராஜ்யத்திலுள்ள சகல மக்களின் பிரச்னையாகவும் இருக்கின்றது. ஆகவே இதைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு கூட பார்க்கக்கூடாது என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"சர்க்காரால் இந்த ராஜ்யத்திலே விரிவானதொரு நிலச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்பதற்காக அமைக்கப்பட்ட சுப்பிரமணியம் கமிட்டியில் ஒரு விஷயம் குறிப்பிடப்பட்டிருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதில் 'இந்த நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் நிலப் பசி கொண்ட மக்கள், அவர்களுக்கு உடனடியாக நிலம் வழங்கப்பட்டாகவேண்டும்,' என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த நாட்டிலுள்ள நிலப்பசி கொண்ட மக்களுக்கு உழுது பயிரிட நிலம் கொடுக்காமல் வேறு பல சீர்திருத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்வதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. இந்த ராஜ்யத்திலுள்ள தரிசு நிலங்களை எல்லாம் அவர்களுக்கு வழங்குவதில் சர்க்காருக்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்று தான் நான் அறிய விரும்புகிறேன்.

17th February 1955] [Sri K. V. Ramaswami]

"ஸ்ரீ கந்தசாமி அவர்கள் பேசும்போது இந்த ராஜ்யத்தில் சுமார் ஒரு கோடியே ஐந்து லட்சம் ஏக்கரா தரிசு பூமி இருக்கின்றது எனவும் குறிப்பிட்டார்கள். அவற்றையெல்லாம் ஏழை எளிய விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்தால் அதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்கும். அதோடு நாட்டின் உணவு உற்பத்தியும் பெருகும். இன்றைய தினம் எங்கேயாவது தரிசு நிலம் கிடந்து அதில் ஏழை ஹரிஜன் விவசாயம் செய்து விட்டான் என்றால் அதற்காக அவனுக்குத் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. இந்தத் தண்டத் தீர்வை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. மேலும் நோட்டீஸ்கள் கொடுத்து அதில் விவசாயம் செய்து கொண்டிருந்த ஏழை எளிய ஹரிஜன மக்களை வெளியேற்றிக்கொண்டும் இருக்கிறார்கள். இந்த மசோதாவின்படி அம்மாதிரியாக சாகுபடி செய்து கொண்டிருப்பவர்களுக்கு உடனடியாக அந்த நிலங்கள் ஜாரி செய்யப்பட வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை ஒப்புக்கொண்டால் உண்மையிலேயே உழுது சாகுபடி செய்து கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு நாம் ஒரு நிவாரணம் அளித்ததாக ஆகும்.

"தரிசு நிலங்களை வழங்க வேண்டுமென்பதற்காக எதற்கு ஒரு மசோதா, சர்க்கார் நிர்வாக உத்திரவைப் போட்டே இன்றைய தினம் தரிசு நிலங்களை ஏழைகளுக்கு, நிலமில்லாதவர்களுக்கு வழங்கி வருகிறார்களே, என்று குறிப்பிடலாம். அதற்கு உதாரணமாக சேலம் ஜில்லாவில் ஆத்தூர் தாலுக்காவில் நடந்து வரும் காரியங்களைப்பற்றி குறிப்பிட்டார்கள். ஆனால், உண்மையிலேயே என்ன நடக்கிறது? அங்கே பல வருஷ காலமாக இந்தப் பிரச்னை இருந்து கொண்டேயிருக்கிறது. அதைப்பற்றி பல கேள்விகள் வந்திருக்கின்றன. பல கிளர்ச்சிகள் வேறு நடத்தப்பட்டிருக்கின்றன. கடைசியாக இன்றைய தினம் சர்க்கார் அங்கே தாசில்தார்களைப் போட்டு நிலங்களை துரிதமாக ஜாரி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் இதர ஜில்லாக்களுக்கு என்ன ஆயிற்று என்று கேட்க விரும்புகிறேன். லட்சக்கணக்கான நிலங்கள் தஞ்சை ஜில்லாவிலே இருக்கின்றன. இதுவரையில் தஞ்சை ஜில்லாவில் எவ்வளவு தரிசு நிலம் ஜாரி செய்யப்பட்டிருக்கிறது என்று சென்ற சில தினங்களுக்கு முன்னால் ஒரு கேள்வி கேட்டதற்கு கனம் மந்திரி அவர்கள் 4·27 ஏக்கராக்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார். இந்த மாதிரியான நிர்வாக இயந்திரத்தை வைத்துக் கொண்டு எப்படி ராஜ்யம் பூராவும் இருக்கின்ற தரிசு நிலங்களை பிரித்துக் கொடுக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். திருநெல்வேலி ஜில்லாவில் நிறைய தரிசு நிலங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் சீக்கிரத்தில் நிலமில்லாதவர்களுக்கு வழங்குவதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

DEPUTY SPEAKER :—"The hon. Member's time is up. Sri V. R. Krishna Ayyar will now speak."

SRI V. R. KRISHNA AYYAR :—"Mr. Deputy Speaker, Sir, the measure that is before the House for discussion is quite a simple, sober and very unexceptionable one. I believe there cannot be any objection or opposition to this Bill either on the ground of prestige or on the ground that this is only trying to make political capital or even for untenable and flimsy reasons. The content of the Bill as everybody knows is acceptable. One must say that a word of congratulation is due to Mr. Kandasamy who moved this motion or to Mr. Ramamurthi who introduced the Bill.

"This has been very wisely worded. As a lawyer, it appears to me so very correct. (The Hon. Finance Minister was heard to say 'Is he speaking as a lawyer or as a member of the House?')

[Sri V. R. Krishna Ayyar] [17th February 1955

With the competence of a lawyer I am speaking as a member of the House. There is no legal flaw present here. Apart from the legal aspect of the provisions of the Bill, the content of the Bill is also very good and unexceptional for this reason: Everybody knows there is a lot of waste land uncultivated, although cultivable. In Malabar alone in Wynaad taluk, thousands and thousands of acres of arable land fit for cultivation are not allowed to be cultivated; if anyone tries to cultivate, action is taken against him. The same is the position in all parts of the State, except perhaps the blessed part from which the hon. Friend on the other side is coming where all that is contained in this Bill appears to have been anticipated by executive authority and action taken and things go on happily and merrily. We wish the same conditions prevailed everywhere else. Probably, we are not so fortunate as he to represent constituencies so happily governed. But, executive action is to some extent uncontrolled and unguided; executive action is oftentimes dilatory as experience has shown. Long ago, the Government declared its policy that waste lands would be distributed for cultivation to landless poor. But what has happened since? In fact, even under the Malabar Tenancy Act there is an express provision that waste lands will be distributed. But I suppose there will be blushing on the other side if they could own up that a cent of land has yet been distributed. That is because pious professions or wise declarations or even statutory provisions hardly work where there is no machinery for enforcement and implementation. So, what is sought to be done by this Bill is to give statutory authority to what has been declared by executive authority and what has been stated to be principles governing the Government's conduct on the floor of the Assembly. What is more, the provisions include a machinery which can enforce the provisions, namely, to get at the waste lands and make them available for cultivation by poor landless peasants.

The machinery is best when it is of a local make; it can best appreciate local conditions. What is provided here nobody can challenge. It is not as if some local irresponsible persons are to be put. There is the Tahsildar, an M.L.A., then a District Board Member, all elected members plus the official representing the taluk and thus it is a responsible body from the spot who can appreciate local conditions. If such a machinery is created then we need not wait on the moods and mercies of the Tahsildar with his dilatory habits. There is provision for an application, there is provision for a Tribunal-like body meeting once a week; we can move, we can enforce and we can get things done. That is the advantage of a machinery being provided by statute which will work by itself, instead of depending on the tender mercies of Government's slow action. That is one very important thing to remember.

"The hon. Member who was opposing this motion seemed to say that he agreed with the principle of the Bill, but that since it is being moved by the Opposition, it is a political stunt and all

17th February 1955] [Sri V. R. Krishna Ayyar]

that. I suppose the hon. Member who moved this Bill would certainly make straightway a gift of this Bill to Government, to adopt it as their child here and now. All that is wanted is action and not prestige of moving this Bill. The people are land-hungry, are unemployed and want land for cultivation; and we who want production to go up, we of this State who want that every inch of arable land should be cultivated, that every inch of waste land should be brought under the plough, will make over this Bill to the other side if only they would act. This is an humble challenge to the Socialistic professions of theirs. This arraigns Avadi professions. I hope the challenge will be taken by the Government. Let us have the legislation whether moved by the Government or by the Opposition."

3-30 p.m.

* **Sri M. P. SUBRAMANYAM** :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம் நாட்டில் பல லட்சக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றன. அவைகளை ஏழை விவசாயிகளுக்கும், ஏழை ஹரிஜனங்களுக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று பொது மக்களுடைய வேண்டுகோளாகவும் சட்டசபை எதிர்க்கட்சி அங்கத்தினர்களுடைய கோரிக்கையாகவும் இருந்து வந்திருக்கிறது. இப்படிப் பல லட்சக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் ஒரு பக்கம் கிடக்கின்றன. மற்றொரு பக்கம் பலரால் பெருமையாக பேசிக் கொள்ளப்படும் முதல் 5 ஆண்டு திட்டம் பூர்த்தியடையும் தறுவாயில் இருந்தும் வேலையில்லா திண்டாட்டம் அதிகம். மற்ற நாடுகளை விட நம் நாட்டில் நிலத்தை உழும் மக்கள் சத விகிதம் மிக மிக அதிகம். இந்த நிலைமை இருந்தும் நிலங்களை நிலமில்லாதவர்களுக்கு இன்னும் பிரித்துக்கொடுக்க வில்லை. அவைகளை நிலமில்லாத விவசாயிகளுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் பகிர்ந்து கொடுத்து அவைகளுக்கு பட்டா செய்தும் கொடுக்க வேண்டும் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடியது. இந்தக் கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு சென்ற மூன்று நான்கு மாதங்களாக அந்தக் கொள்கையின்படி நடவடிக்கைளும் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவ்விதம் சேலம் ஜில்லா ஆத்தூர் கிராமத்தில் இருக்கும் தரிசு நிலங்களை இப்பொழுது பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதைப்போலவே சென்னை மாகாணம் பூராவும் இந்த அடிப்படையில் நிலங்களை பகிர்ந்து கொடுக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. ஆகவே சென்னை மாகாணம் பூராவிலும் இந்த மாதிரி தரிசு நிலங்களை பகிர்ந்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்காகத்தான் இந்த மசோதாவும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

" சேலம் ஜில்லா ஆத்தூரில் இப்பொழுது நிலம் பகிர்ந்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது. அதற்காக பல உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் உண்மையே. அந்த வட்டாரத்தில் 90 ஆயிரம் ஏக்கர் நிலம் தரிசாக இருக்கிறது. சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலங்களை இப்பொழுது கொடுக்கப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எந்த அளவில் கொடுக்கப்போகிறார்கள் என்பதை அறிய வேண்டும்.

" ஏற்கனவே சிவோஜியமா நிலங்களை வைத்துக்கொண்டிருக்கின்றவர்களுக்கு ரூ. 20 வரையில் நிலவரி செலுத்தினால் ஐந்து ஏக்கர் வரையில் நிலத்தைப் பகிர்ந்து கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆத்தூர் தாலுக்காவில் ஏக்கர் ஒன்றுக்கு ஒரு ரூபாய்தான் சராசரி நிலவரி இருக்கும். இதன்படி ஒரு சிவோஜிமாதாருக்கு 20 ஏக்கர் நிலம் ஏற்கனவே இருந்தாலும் தரிசு நிலத்தில் ஐந்து ஏக்கர் நிலம் பெற அருகதை உடையவனாகிறான். அதோடு இந்த ஐந்து ஏக்கர் ஒரு குடும்பத்துக்கா அல்லது ஒரு நபருக்கா என திட்டவட்டமாக சொல்லப்படவில்லை. தகப்பனார் பெயரில் ஏற்கனவே உள்ள நிலம் இருந்தால் மகன் தரிசு நிலத்திற்கு விண்

ணப்பம் போட தடை கிடையாது என உள்ளது. இப்பொழுது இருக்கும் சட்டப்படி அவர்களுக்கும் ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்கலாம் என்றிருக்கிறது என்று உத்தியோகஸ்தர்கள் சொல்லுகிறார்கள். அது எங்களுக்கு விளங்கவில்லை. அவ்விதம் கொடுக்கக்கூடாது என்று சட்டம் செய்யவில்லை என்று உத்யோகஸ்தர்கள் சொல்லுகிறார்கள். இப்பொழுது அநேகம் விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதைப்பற்றி உத்தியோகஸ்தர்களிடம் எடுத்துக்காட்டியும் அவர்களால் இதைத் தவிர்க்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். இதைப்பற்றி அரசாங்கத்தையும் கேட்டிருப்பதாக கூறுகிறார்கள். இதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்."

(The Deputy Speaker sounded the gong.)

SRI M. P. SUBRAMANYAM :—"This is a very important question and I request that I may be allowed one more minute."

DEPUTY SPEAKER :—"The hon. Member should have been brief and to the point and should have avoided repetition. I call upon the hon. Member Sri V. Blakrishnan to speak."

3-35 p.m. * SRI V. BALAKRISHNAN :—"கனம் சபைத் தலைவர் அவர்களே, 'இல்லை யென்ற தொல்லையை இவ் வுலகில் இல்லையாக என்று ஆக்குவோம்.' இதன் அடிப்படையில்தான் இந்த மசோதா ரொம்பத் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. 1939-ம் ஆண்டுக்கு முன்பு அன்று காங்கிரஸ் கட்சியில் C.S.P. என்று பெயர் வைத்து அதில் அநேகம் மெம்பர்கள் இருந்தார்கள். அதில் ஸ்ரீ சி. கந்தசாமியும், ராமமூர்த்தியும் என்ன, அடியேன் வி. பாலகிருஷ்ணன் என்ன இவர்கள் எல்லாம் இருந்து C.S.P. என்ற ரூபத்தில் இதைத்தான் அப்பொழுது வலியுறுத்தினோம். Socialist Pattern of Society என்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களின் தலைமையின் கீழ் இதைத்தான் நாங்கள் அன்று வலியுறுத்தி வந்தோம். வீரர் சுபாஷ் போஸ் எங்கள் கருத்தை ஆதரித்தார். அப்பொழுது வலியுறுத்தி வந்த கருத்தை இப்பொழுது 1955-ம் வருஷத்தில் காங்கிரஸ் ஒப்புக்கொண்டிருக்கிறது. அதைத்தான் இப்பொழுது காங்கிரஸ் மகாசபையும் முடிவு செய்திருக்கிறார்கள். அதை ஒத்துத்தான் இந்த மசோதாவும் வந்திருக்கிறது. இப்படி வந்திருக்கும் மசோதாவை காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் என்ன காரணத்திற்காக எதிர்க்கிறார்கள் என்பதும் தெரியவில்லை. அதைத் தெரிந்துகொள்ளக்கூடிய நிலைமையிலும் அடியேன் இல்லை. இப்பொழுது எங்கும் ஒரே குரலாக இருக்கிறது. கஷ்டப்படுகிறவர்களுக்குத்தான் இடம் கொடுக்க வேண்டும். நிலம் கொடுக்க வேண்டும். தியாகி என்ற பெயரை வைத்துக்கொண்டும் பல ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டும் இருந்தவர்கள் இன்னும் ஐந்து ஏக்கர் நிலம் வாங்கிக்கொண்டு வந்ததை மகான் ராஜாஜி தடுத்தார். அப்பொழுதுள்ள சட்டத்தையும் திருத்தினார். அப்படி திருத்தியதோடுமட்டுமல்ல. நிலமில்லாத ஹரிஜனங்களுக்குத்தான் நிலம் கொடுக்கவேண்டும், அதற்கு அடுத்தபடியாக பிற்பட்டவர்களுக்குத்தான் நிலம் கொடுக்கவேண்டும் என்றும் பெரிய ஒரு உதவியைச் செய்தார். அந்தச் சட்டம் இப்பொழுது புஸ்தக ரூபத்தில் இருக்கிறது. ஆனால் நிலம் எங்கு இருக்கிறது என்பது ஹரிஜனங்களுக்குத் தெரியவில்லை. பிற்பட்ட இனத்தவர்களுக்கும் தெரியவில்லை. எந்த இடத்தில் இருக்கிறது என்று கேட்டாலும் சர்க்காரால் சொல்ல முடியவில்லை. அந்தந்த ஊர்களிலுள்ள கர்ணங்களுடைய அந்தரங்க பொக்கிஷமாகத்தான் அது இருக்கிறது. அவர்களுக்குத்தான் அது விஷயம் நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஒரு வட்டத்தில் ஒரு கிராமத்தில் அடமான நிலம் எங்கு இருக்கிறது என்பது யாருக்கும் தெரியவில்லை. தெரிந்திருந்தாலும்கூட அங்குள்ள கணக்குப் பிள்ளையின் தயவு வேண்டியதாக இருக்கிறது. அல்லது அந்தக் கணக்குப் பிள்ளையின் ஆப்த நண்பருடைய உதவி தேவை. ஆனால் மனுப் போட்டால் அவர்களுக்குத் தெரியவில்லை என்று வெகுவாகபதில் எழுதிவிடுகிறார்கள். ஆனால் அந்தக் கணக்குப்பிள்ளையினுடைய

17th February 1955] [Sri V. Balakrishnan]

நண்பராக இருந்தால் அந்த நிலங்கள் அவருக்கு லகுவாக கிடைத்து விடுகிறது. அவர்களுக்கு உடந்தையாக இருக்கும் உத்யோகஸ்தர்களுக்கும் கிடைத்து விடுகிறது. அப்படியெல்லாம் இல்லாமல் உடனடியாக, நேரடியாக நிலமில்லாதவர்களுக்கெல்லாம் நிலம் கொடுக்கக்கூடிய வகையில் ஒரு சிறந்த நோக்கத்துடன்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் நிறைவேறினால் அந்த பெயர் எதிர்க் கட்சிக்குப் போய் விடுமோ என்று கருதினால் அல்லது இதை வைத்துக்கொண்டு எதிர்க் கட்சி பிரசாரம் செய்யலாம். அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்று சர்க்கார் கருதினால் இந்த மசோதாவை வாபஸ் வாங்கிக்கொண்டு சர்க்கார் கட்சிக்காரர்களே இந்த மசோதாவை கொண்டுவந்து அந்தப் பெயரை எடுத்துக்கொள்ளலாம் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"(SRI K. T. RAJU :—'நாங்கள் வாபீஸ் வாங்கிக் கொள்ளுகிறோம். சர்க்கார் கட்சி கொண்டுவரட்டும்.') கிட்டத்தட்ட சவால் விட்டதுபோல் தோன்றியது. இது சமுகப் பிரச்னை. இது ஒரு கட்சிப் பிரச்னை அல்ல. நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கவேண்டும் என்று ஒரு மசோதாவை யார் கொண்டு வந்தால் என்ன? இதில் கட்சிக் கோட்பாடு இருக்கிறது என்று பார்ப்பதைக் கண்டு மிக மிக வருந்தத்தக்கதாக இருக்கிறது. இதில் ஒரு கருத்து சிறந்த நோக்கமாக அல்லது? நான் சென்ற பட்ஜெட் கூட்டத்திலேயே என்னுடைய பிரசங்கத்தில் 'அந்தந்த வட்டங்களில் அந்தந்த கிராமங்களில் இருக்கும் சர்க்கார் அடமானம் செய்யக் கூடிய நிலங்களை ஜனங்களுக்குத் தெரியும்படி அந்தந்த வட்டங்கள் சேரிகளில் விவரத்தை எழுதித் தொங்கவிடவேண்டும். அப்பொழுதுதான் விவசாயிகள் தெரிந்துகொண்டு மனுப்போட வசதியாக இருக்கும்,' என்று சொல்லியிருந்தேன். அந்தக் கருத்தும் இதில் அடங்கி இருக்கிறது. அடமானம் பளு கஷ்டத்திற்கு ஒரு உதாரணம்கூட என்னால் கொடுக்க முடியும். என்னுடைய தொகுதியில் சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன் ஒரு பரம ஏழை என்னிடம் வந்து ஒன்றை தெரிவித்துக்கொண்டான். தனக்கு மூன்று சென்ட் நிலம் வேண்டுமென்று மனுப்போட்டும் அவனுக்கு இன்னும் அது கிடைக்கவில்லை. இதைப்பற்றி தாசில்தாரிடமும் ரிவினியூ இன்ஸ்பெக்டரிடமும் எடுத்துச் சொல்லியும் இன்னும் அவனுக்கு நிலம் கொடுத்தபாடில்லை. அந்த ஏழைக்கு இன்னும் விமோசனம் கிடைக்கவில்லை. கணக்குப் பிள்ளையும் ரெவினியூ இன்ஸ்பெக்டரும் ஒன்று சேர்ந்து கொண்டு மனுவை கிழித்து எரிந்துவிட்டு மனு வரவில்லை என்றுகூட சொல்லிவிடுகிறார்கள். பல மனுவைப்பற்றி ஒரு வருஷம் இரண்டு வருஷங்கள் கழித்துத்தான் அந்த மனு போய்ச் சேரவில்லை என்று அந்த விவசாயிக்குத் தெரியவருகிறது. அவர்கள் போய்க்கேட்டால்கூட அந்த உத்தியோகஸ்தர்கள் தெரிவிப்பது இல்லை. அதற்காக அந்த விவசாயி அந்த தொகுதியிலுள்ள எம்.எல்.ஏயை பிடித்து அவர் மூலம்காகத்தான் தெரிந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. அப்படி அந்த எம்.எல்.ஏ. கேட்ட பிறகு அந்த மனு ஜில்லா கலெக்டர் முதலியவர்களுக்குப் போய் ஒரு சுற்றுப் பிரயாணம் செய்து வருவதற்கு கிட்டத்தட்ட இரண்டு மூன்று வருஷங்கள் ஆகின்றன. மூன்றுவது வருஷத்தில் என்ன பதில் வருகிறது என்றால் 'உன்னுடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது' என்றுதான் பதில் வருகிறது. இதன் காரணம் என்னவென்று தெரியவில்லை. வணக்கம்."

* SRI M. NARAYANA KURUP :—"Sir, I agree with the principle underlying the Bill. But the scope of the Bill is very restrictive inasmuch as it refers only to lands owned by the State. We know, as a matter of fact, that large extents of lands in Malabar as well as in other parts of the State are owned by private individuals and they do not come within the scope of the Bill. It is more than six years since this Government accepted as a 3-40 p.m.

[Sri M. Narayana Kurup] [17th February 1955

plank of their policy the bringing into cultivation of waste lands in the State. But it will be surprising to note that even to-day they have not got even statistics regarding the extent of waste lands in the State. It was a surprising revelation that when a Member of the Board of Revenue was appointed to go into the question of an estate which was in possession of the Government for the last twelve years, the Government did not know what the extent of the land was and how it was utilized. If that were so, it is not news to us that they have less information about the private owners and the waste lands owned by them. Now, more than 50 per cent of the lands in our State are waste lands because we know the acreage under cultivation comes, to put it at the highest, to 40 or 45 per cent. But we are being told that the Government have their own policy in this matter. The question of leasing of waste lands has been raised almost every day on the floor of the House and the random answers given by the Hon. Ministers on various occasions reveals one fact that they have no planned programme or planned execution of any programme in regard to waste lands. The Government may think that they are doing something. The Constitution says that our aim is the establishment of a Welfare State. For that, we want a plan and a planning machinery. So long as the work of leasing of waste lands and bringing them into cultivation is made part of the routine business of the Revenue Department and the function of a Collector who is burdened with so many other activities, the complaints regarding this will always remain. About the waste lands in Malabar, the ineffectiveness in the enforcement of the provisions of the concerned order has already been referred to. Recently, the Government have issued or re-issued the Land Utilization Order, I believe, under the enactment relating to supply of essential articles. That order says that the authorities are empowered to ask a person to cultivate a land himself or lease it to others in three months. Otherwise, the Government officials will give it to the highest bidder for three years. Now, we must realize the loopholes in it. We had recently a bitter experience in this matter. A devaswom used to grant lands for punam cultivation to the tenants for at least twenty to thirty years. The Tenancy Act has fixed twice the assessment as the rent. Now, this particular man did not give lands to the tenants. They approached the Collector who asked him to give them lands for cultivation. Conveniently, he gave the lands on lease, not true lease, but bogus lease executed in favour of his own nominees and the persons who were given the lands for punam cultivation for years together were deprived of their property. There can be no better instance of violation of the Land Utilization Order. The landlords are so capable of overcoming the provisions of every legislation and the Government are so indifferent in the strict enforcement of the provisions of the law. Unless the Government take up the matter more seriously and they have a machinery specially to look into this, will not succeed.

17th February 1955] [Sri M. Narayana Kurup]

"It has been said that this measure is actuated by political motives. We all know that motive-hunting is a dangerous game in public life. Harsh words break no bones and attributing motives for raising a problem does not solve the problem itself."

*SRI C. H. KANARAN :—"മിസ്റ്റർ ഡിപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഗവമ്മേ 3-46 p.m.
ണ്ടിന്റെ കൈവശമുള്ള തരിശുഭൂമികളെ സംബന്ധിച്ചുള്ളതാണ് ഈ ബില്ല്. നമ്മുടെ മന്ത്രിമാർ ആവടി കോൺഗ്രസ്സിൽവച്ചു സോഷ്യലിസ്റ്റ് വ്യവസ്ഥിതി അംഗീകരിച്ചിട്ടുണ്ട്. മാത്രവുമല്ല, ജന്മിമാരുടെ കൈയിൽനിന്നു ഭൂമി വാങ്ങി കൃഷിക്കാർക്കു ദാനം ചെയ്യണമെന്നുള്ള ഉദ്ദേശത്തോടുകൂടി ആരംഭിച്ചിട്ടുള്ള ഭൂദാനയജ്ഞവും കൂടി സ്വീകരിച്ചിട്ടുള്ള ഒരു മന്ത്രിസഭയാണിതു്. ഇപ്പോൾ ഈ സഭയുടെ മുമ്പിലുള്ള ചോദ്യം ഗവമ്മേണ്ടിന്റെ കൈയിലുള്ള തരിശുഭൂമികൾ ഈ രാജ്യത്തിലെ ഭൂമിയില്ലാത്ത കൃഷിക്കാർക്കു കൊടുക്കാൻ ഗവമ്മേണ്ടു് ഒരുക്കമാണോ എന്നുള്ളതാണ്. ജന്മിയുടെ കൈയിൽനിന്നു പിടിച്ചെടുത്തു കൊടുക്കുന്ന കാര്യം പോട്ടെ, ഗവമ്മേണ്ടിന്റെ കൈവശമുള്ള ഭൂമി കൊടുക്കാൻ ഭാവമുണ്ടോ എന്നാണ് ചോദ്യം. ഭൂദാനപ്രസ്ഥാനം അംഗീകരിച്ചു ഗവമ്മേണ്ടിന്റെ മനःസ്ഥിതി മാറുമോ എന്നു് പരിശോധിക്കുന്നതിനുള്ള ഒരു ബില്ലാണ് ശ്രീ കന്തസ്വാമി ഇപ്പോൾ കൊണ്ടുവന്നിരിക്കുന്നതു്. (ഹീയർ, ഹീയർ). ആവടി കോൺഗ്രസ്സിൽവച്ചു് പ്രമേയങ്ങളെല്ലാം പാസ്സാക്കിയിട്ടുണ്ട്. കമ്യൂണിസ്റ്റുകാരായ ഞങ്ങൾ, എതിർപക്ഷത്തുള്ള ഞങ്ങൾ, ഗവമ്മേണ്ടിന്റെ മനസ്ഥിതി മാറിക്കിട്ടുമോ, ഗവമ്മേണ്ടിന്റെ കൈയിലുള്ള ഭൂമിയെങ്കിലും കൃഷിക്കാർക്കു് കൊടുക്കുമോ എന്നുള്ള ചോദ്യത്തോടുകൂടിയാണ് ഈ ബില്ല് അവതരിപ്പിച്ചിട്ടുള്ളതു്. കോൺഗ്രസ്സ് പ്രമേയം പാസ്സാക്കും. കൃഷിക്കാരനു ഭൂമികൊടുക്കുമെന്നു് മന്ത്രിമാർ പ്രസംഗിക്കും. പക്ഷെ ഭൂമികൊടുക്കാൻ ഈ ഗവമ്മേണ്ടു് ഒരുക്കമുണ്ടോ? ഭൂമി വളരെയൊക്കെ കൊടുത്തിട്ടുണ്ടെന്നു് ഒരു ബഹുമാനപ്പെട്ട മെമ്പർ ഇവിടെ പറയുകയുണ്ടായി. സേലത്തു കൊടുത്തിട്ടുണ്ടായിരിക്കും. സേലത്തുകാരുടെ അനുഭവം എന്തായാലും ശരി, മലബാറിലെ അനുഭവം ഗവമ്മേണ്ടു് ഒരിഞ്ചു ഭൂമിപോലും കൊടുത്തിട്ടില്ലെന്നുള്ളതാണ്. ഇന്നു് ഫെബ്രുവരി 17-ാം തിയ്യതിയാണ്. ഗവമ്മേണ്ടിന്റെ കൈയിലുള്ള കൃത്താളി എസ്റ്റേറ്റിലെ കൃഷിക്കാരുടെ സമരം ഇന്നു് മൂന്നുകാട്ടു് മാത്രമല്ല മലബാർ കലക്ടറാഫീസിന്റെ മുമ്പിലേക്കുകൂടി എത്തിയിരിക്കുകയാണ്. കലക്ടറാഫീസിനു മുമ്പിൽ ഇന്നു് സത്യാഗ്രഹം ആരംഭിച്ചിരിക്കുകയാണ്; എന്തിനുവേണ്ടി? ഗവമ്മേണ്ടിന്റെ മനःസ്ഥിതി മാററാൻ വേണ്ടി, സോഷ്യലിസം പ്രസംഗിക്കുന്ന മന്ത്രിമാരുടെ മനസ്സു മാററാൻവേണ്ടി, ശ്രീ കാമരാജ നാടാരുടെ മനസ്സു മാററാൻ വേണ്ടി, ആ സമരം അങ്ങനെ മുന്നേറുകയാണ്. അതിന്റെ ഭവിഷ്യത്തു് എന്തായിരിക്കുമെന്നു് ഞാൻ ഇപ്പോൾ പറയുന്നില്ല. ജനങ്ങളെ മർദ്ദിച്ചും തലതല്ലിപൊളിച്ചും രക്തംചിന്തിയും വെടിവെച്ചുവീഴ്ത്തിയും ഒരു ഗവമ്മേണ്ടിനും മുന്നോട്ടുപോവാൻ സാദ്ധ്യമല്ല. അതു് അനുഭവത്തിൽതന്നെ കാണാൻ കഴിയും. മലബാറിൽ നാലേ നാലുപേരൊഴികെ സകല കോൺഗ്രസ്സുകാരും തിരഞ്ഞെടുപ്പിൽ പരാജയപ്പെട്ടിരിക്കുകയാണ്. എന്നിട്ടും അവർ കാര്യം മനസ്സിലാക്കുന്നില്ല.

"ഇതൊരു അനൌദ്യോഗിക ബില്ലാണ്, ഞങ്ങൾ എന്തിനു ഇതു സ്വീകരിക്കണം എന്നൊരു മനോഭാവമാണ് മന്ത്രിമാർക്കുള്ളതെന്നു തോന്നുന്നു. ബില്ല് ആരുകൊണ്ടുവന്നതോ ആയിക്കൊള്ളട്ടെ. ഇതിലെ വ്യവസ്ഥകൾ വളരെ ന്യായമായിട്ടുള്ളതാണ്. ഭൂമി ആർക്കാണ് കൊടുക്കണമെന്നു് പറയുന്നതു്? ഒന്നാമതു് കർഷകതൊഴിലാളികൾക്കു്, രണ്ടാമതു് സ്വന്തം നിലമില്ലാത്ത ചെറുകൃഷിക്കാർക്കു്, മൂന്നാമതു് വളരെ കുറച്ചു ഭൂമി മാത്രമുള്ള ചെറിയ കൃഷിക്കാർക്കു്. ഹരിജനങ്ങൾക്കു് മുൻഗണന നല്കേണ്ടതാണെന്നും പ്രത്യേകം പറയുന്നുണ്ടു്. ഇത്രയും നല്ല വ്യവസ്ഥകളോടുകൂടിയ ഒരു ബില്ല് സ്വീകരിക്കാൻ തയ്യാറില്ലെന്നു പറയുന്നതിന്റെ അർത്ഥമെന്താണ്? ഗവമ്മേണ്ടതന്നെ ഭൂമി കൊടുക്കുന്നുണ്ടുപോലും. കൊടുക്കുന്നുണ്ടു്, ഇല്ലെന്നു ഞാൻ പറയുന്നില്ല. ആർക്കാണ് കൊടുത്തതു്? സ്വന്തക്കാർക്കു് കൊടുക്കുന്നുണ്ടായിരിക്കും. ഗവമ്മേണ്ടു ഭൂമികൊടുത്ത കഥ പറഞ്ഞാൽ വളരെ പറയാനുണ്ടു്. അതിലേയ്ക്കു ഞാൻ ഇപ്പോൾ പ്രവേശിക്കുന്നില്ല. ഭൂസലത്തു് രണ്ടാളുകൾക്കു് ഭൂമികൊടുത്തിട്ടുണ്ടായിരിക്കും. അതിനെപ്പററിയല്ല ഞാൻ പറയുന്നതു്. രാജ്യത്തെ പൊതുവേയുള്ള കാര്യത്തെപ്പററിയാണ് ഞാൻ പറയുന്നതു്.

[Sri C. H. Kanaran] [17th February 1955

അദ്ധ്വാനിക്കുക, ജീവിക്കുക, ഉല്പാദിപ്പിക്കുക, സുഖമായി ജീവിക്കുക എന്നു മുദ്രാവാക്യം വിളിക്കുന്ന കോൺഗ്രസ്സുകാരോട്, കോൺഗ്രസ്സ് ഗവമ്മേണ്ടിനോട് ഞാൻ ചോദിക്കുന്നു അദ്ധ്വാനിക്കുന്നവരു് ഭൂമി കൊടുക്കാൻ തയ്യാറില്ലാത്ത നിങ്ങൾ എന്തിനിങ്ങനെ മുദ്രാവാക്യം മുഴക്കുന്നുവെന്നു്. തൂമ്പയും എടുത്തുകൊണ്ടു 'ഞങ്ങൾ അദ്ധ്വാനിക്കാൻ തയ്യാറാണു്, ഞങ്ങൾക്കു ഭൂമി തരിക' എന്നു് പറയുന്നവർക്കു് ഭൂമികൊടുക്കാതെ നിങ്ങൾ അദ്ധ്വാനിക്കുക, ഉല്പാദിപ്പിക്കുക, സുഖമായി ജീവിക്കുക എന്നു മുദ്രാവാക്യം മുഴക്കുന്നതു് അവരെ പരിഹസിക്കലാണു്, അവരെ വിഡ്ഢികളാക്കലാണു്. കൃഷിക്കു് യോഗ്യമായ എത്രയോ ഭൂമി മലബാറിൽതന്നെ ഗവമ്മേണ്ടിന്റെ കൈവശമിരിപ്പുണ്ടു്. ചില സ്ഥലങ്ങളിൽ കൃഷിക്കാർ പ്രവേശിച്ചു കൃഷി നടത്തിയിട്ടുണ്ടു്. ഇന്നു് അവർക്കെല്ലാം ഒഴിയാൻ ഗവമ്മേണ്ടു് നോട്ടീസു കൊടുത്തിരിക്കയാണു്. അതു മാത്രവുമല്ല. അതിലും വിചിത്രമായ ചില കാര്യങ്ങളും നടക്കുന്നുണ്ടു്. നാട്ടിക ഫർക്കയിൽ കടൽതീരത്തു മണലടിച്ചു കേറിയ ഭാഗത്തു് അഞ്ചൂറോളം ആളുകൾ കുടികെട്ടി താമസിക്കുന്നുണ്ടു്. അവർക്കും നോട്ടീസ് കൊടുത്തിരിക്കയാണു്. അതു ഗവമ്മേണ്ടിന്റെ ഭൂമിയേ അല്ല. കടലിലെ വെള്ളം മണലടിച്ചു കൂട്ടി ഉണ്ടായിട്ടുള്ള ഭൂമിയാണു് അവിടേയും നോട്ടീസു്. ഇങ്ങനെയാണു് ഗവമ്മേണ്ടു് കർഷകരു കൃഷിഭൂമികൊടുക്കുന്നതു്. ഇവരെന്തിനു ഈ കൃഷിഭൂമിയെല്ലാം തരിശാക്കി വച്ചുകൊണ്ടിരിക്കുന്നു ? പുല്ലുട്ടിയിലെ പട്ടിയെപോലെയാണു് ഈ ഗവമ്മേണ്ടു് ; താനൊട്ടു തിന്നുകയുമില്ല, അന്യരെ തിന്നാൻ സമ്മതിക്കുകയുമില്ല. ലക്ഷക്കണക്കിന്നു് ഏക്കർ തരിശുഭൂമി കൈവശംവച്ചുകൊണ്ടു കൃഷിക്കു കൊടുക്കാത്ത ഗവമ്മേണ്ടിന്റെ മനഃസ്ഥിതിക്കു മാററമുണ്ടോ എന്നുള്ള ഒരു പരീക്ഷണമാണു് ഇപ്പോൾ നടക്കുന്നതു്."

3-52 p.m. * **Sri A. VELOO** :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபை முன்பு இருக்கிற தரிசு நில வினியோக மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

" தற்போது ராஜ்யம் பூராவுக்கும் விரிவான ஒரு நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப்படவேண்டுமென்று பேசப்பட்டு வருகிறது. மற்றொரு பக்கத்தில் பூமி தானப் பிரசாரமும் செய்யப்பட்டு வருகிறது. சமீபத்தில் தான் ஆவடி காங்கிரஸ் மகாசபை கூட்டத்தில், சோஷலிஸத் தன்மை வாய்ந்த ஒரு சமுதாயத்தை இந்த நாட்டில் நிர்ணயிப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய காங்கிரஸ் கட்சி உறுதி பூண்டிருக்கிறது. அவற்றையெல்லாம் காங்கிரஸ் கட்சி உண்மையிலேயே நடைமுறையில் கொண்டு வர விரும்பினால் கண்டிப்பாக இந்தத் தரிசு நில வினியோக மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் சொல்வேன். அவர்கள் அப்படிச் செய்வது சொல்கின்றவற்றையெல்லாம் காரியத்தில் நிறைவேற்றவும் காங்கிரஸ் கட்சி நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது," என்பதற்கு சிறந்த அத்தாட்சியாக இருக்குமென்று நினைக்கிறேன்.

" சர்க்கார் தங்களிடமுள்ள தரிசு நிலங்களை எல்லாம் ஏழை எளிய நிலமில்லாத விவசாயிகளுக்கு வினியோகிப்பதன் மூலம் பெரு நிலச்சுவாந்தார்கள் தங்களிடமுள்ள நிலத்தில் பெரும்பகுதியை பூதானயஞ்த்திற்குக் கொடுத்துவிட தூண்டுவதாகவும் இருக்கும். ஆகவே மற்றவர்களுக்கு வழி காட்டியாக சர்க்கார் நிச்சயம் தங்களிடமுள்ள தரிசு நிலங்களை எல்லாம் ஏழை எளிய மக்களுக்கு வினியோகிக்க முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு கூட புறம்போக்கு நிலங்களில் எல்லாம் நல்ல முறையில் சாகுபடி செய்ய ஆரம்பித்துவிட்டால் நாட்டிலுள்ள உணவுப் பிரச்னையையும் வெகுவாக தீர்க்கமுடியுமென்று நினைக்கிறேன். இந்த நாட்டில் ஏழை எளிய மக்கள் நல்வாழ்வு பெற்றால் காந்திஜி கனவு கண்ட ராமராஜ்யத்தை ஏற்படுத்தினவர்களாகவும் ஆவோம். ஆகையால் சர்க்கார் இந்த மசோதாவை ஏற்றுக் கொண்டு நிலமில்லாத ஒவ்வொரு ஹரிஜன விவசாயிக்கும், தாழ்த்தப்பட்ட விவசாயிக்கும் நிலம் இனாமாக வழங்கி அவர்கள் எல்லோரும் நல்ல முறையில் அவற்றில் விவசாயம் செய்யும்படியாகச் செய்ய முடியும். அப்பொழுதே கிராமங்கள் செழிக்கும். ஆகவே சர்க்கார் எவ்வித ஆட்சேபனையும் சொல்லாமல் இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். "

17th February 1955]

* SRI T. ANANTA PAI :—" Mr. Deputy Speaker, Sir, I am in agreement with the principles of the Bill and I wish that I could support it. But I am afraid I have to oppose it because—the principle is no doubt good—the execution of the principle is fraught with difficulties which we have got to foresee and we have to make provision for meeting such difficulties. The Bill envisages the constitution of a committee consisting of the local representatives like M.L.As. and members of district boards, in whose hands the distribution of waste lands is to be vested. I am afraid that we are not very competent to do the job. We have got to depend upon our electorate for our being returned here. I do not think that we can be trusted with that amount of impartiality which that job requires. It does not mean that the present policy of the Government of retaining all the lands which can be brought under cultivation with themselves, should continue as such. Various opinions that have been expressed now in this House would make clear the anxiety of the people that lands which are now with the Government should be brought under cultivation and put to the best use in the interests of the people. We see in this country on the one hand, that there is plenty of land available which can be brought under cultivation and there are millions of people who are hungry. Unfortunately, the land and the people cannot be brought together because we have framed such rules as stand in the way of the best utilization of our resources. I do hope that the Government will open their eyes to this problem and apply their mind to its solution as quickly as possible.

" Sir, in this country we also see large tracts of land very thickly populated but, at the same time, there are sparsely populated areas also. Unless there is migration of people within the district at least or unless inter-district migration is encouraged we cannot solve this problem. I am afraid all our linguistic differences might come in the way. Sir, large tracts of cultivable lands lie uncultivated. For instance, in the Malnad area of South Kanara we have got 170,000 acres of land available for cultivation, lands which are fertile with plenty of water-supply. But I do not know whether the people of our district would be willing to allow people from other districts to cultivate them. I think it will be the cause for a first-class political issue. But is it good for us to adopt that policy? Why not give these lands for cultivation? At the same time, what is the use of giving these lands to the so-called landless? Here again is the conflict of idealogies. If people with resources get the land, they will be quite capable of developing it. But if the land is assigned to the landless poor, I do not know how it can be developed. Unless the Government also bring into existence, at the same time, institutions to provide the necessary capital for purchasing bullocks, seeds, etc., which are required for agricultural purposes, mere assignment of waste lands will not solve the problem. Under the circumstances, I do hope that the Government will appreciate the spirit behind this Bill and liberalize the rules and see that the land is given to those who want to cultivate. The land colonization schemes

which the Government have started, have not gone too far and have not been in success. I do hope the Government will pay more attention to this problem and see that the land is put to the best use."

3-59 p.m. *SRI A. K. SUBBIAH :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தற்போது விவாதத்தில் இருந்து கொண்டிருக்கும் தரிசு நில. வினியோக மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவின்படி ராஜ்யத்திலுள்ள தரிசு நிலங்களை எல்லாம் நிலமில்லாத ஏழை எளிய விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்தால், இன்னும் சொற்பமே நிலமுடைய விவசாயிகளுக்கும் பிரித்துக் கொடுத்தால் அதனால் கிராமப்புரங்களிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். அதோடு நாட்டில் அதிகப்படியான உணவு உற்பத்தி பொருள்களையும் பெருக்க முடியும் என்பது என் அபிப்பிராயம். இதை ஆட்சேபிக்கமுடியாது.

" தரிசு நிலங்களை ஏழை மக்களுக்கு வினியோகப்பதின் மூலமாக நாம் அவர்களுடைய பொருளாதார நிலைமையையும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் அதிகப்படுத்த முடியும். அந்த வகையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது.

" குறிப்பாக இன்றைய தினம் இந்த ராஜ்யத்திலுள்ள ஹரிஜனங்களை எடுத்துக் கொண்டால் அவர்களில் பெரும்பாலோர் நிலம் அற்றவர்களாக, பஞ்சைகளாகப் பறைதைகளாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தரிசு நிலங்களை சர்க்கார் வழங்க முன் வந்தால் அவர்களுடைய நிலைமை எவ்வளவு உயரும் என்று யோசித்துப் பாருங்கள். அதற்காகவேதான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த மசோதாவில் நிராகரிக்கப்படவேண்டிய அம்சம் எதுவுமே கிடையாது. கிராமப்புரங்களில் ஏராளமான தரிசு நிலங்கள் இருக்கின்றன. குறிப்பாக ஸ்ரீ கே. வி. ராமசாமி அவர்கள் பேசும் பொழுது ஒரு கோடியே ஐந்து லட்சம் ஏக்கரா தரிசு நிலம் தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் அவற்றையெல்லாம் அங்கேயுள்ள பெரு நிலச் சுவாந்தார்கள் ஏகபோகமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருக்கும் அந்தத் தரிசு நிலங்களை எடுத்துக் கொள்வதற்கு சர்க்கார் பயப்படுகிறார்கள். மேலும் அவ்வாறு எடுத்துக்கொள்ள விரும்பாததின் காரணமாகத்தான் சர்க்கார் இந்த மசோதாவை எதிர்க்கலாம். இல்லாவிட்டால் எவ்வித ஆட்சேபனையும் சொல்லாமல் சர்க்கார் இந்த மசோதாவை ஏற்றுக்கொண்டாகவேண்டும். தரிசு நிலங்களை வழங்குவதற்குச் சட்டம் எதற்காக, சர்க்கார் தான் ஏராளமாக வழங்கிக் கொண்டு வருகிறோமே என்பதாக சர்க்கார் சொன்னாலும் சொல்லலாம். ஆனால் ஏற்கனவேயே நான் குறிப்பிட்டேன், தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் ஏராளமான தரிசு நிலங்கள் கிடக்கின்றன என்று. ஆனால் அவற்றில் சர்க்கார் 4 ஏகராவை மாத்திரம் நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்கியிருப்பதாகப் பதில் கூறினார்கள் அமைச்சர் அவர்கள். தங்களுக்குச் சாகுபடிக்கு நிலம் கொடுக்க வேண்டுமென்று பத்தாயிரக்கணக்கான மனுக்கள் வந்திருக்கின்றன. ஆனால் தரிசு நிலங்கள் இருந்தும் கூட அவைகள் கவனிக்கப்படாமலேயே இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே தான் நாங்கள் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம்.

" அதோடு இன்னும் சில இடங்களில் ஏற்கெனவேயே பல வருஷங்களாக தரிசு நிலங்களில் பயிரிட்டுக் கொண்டு வந்திருக்கும் ஹரிஜனங்கள் இன்றையதினம் அந்நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். பட்டுக்கோட்டை தாலூக்காவில் வெட்டுவாக்கோட்டை கிராமத்தில் பலர் இம்மாதிரி வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அம்மாதிரி செய்யக் கூடாது. இதுவரையில் யார் யார் அந்த நிலங்களில் உழுது பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கே அந்த நிலங்கள் பட்டா செய்யப்படவேண்டுமென்றும் இந்த மசோதாவில் கொடுத்திருக்கிறோம். ஆகவே இதை சர்க்காருக்கு ஒத்துக்கொள்வதில் கஷ்டம் ஒன்றும் இருக்காது என்று

17th February 1955] [Sri A. K. Subbiah]

சொல்ல விரும்புகிறேன். மேலும் நிர்வாக இடையூறு எதுவும் வராது என்று நிச்சயமாகச் சொல்லமுடியும். ஆகவே இந்த ராஜ்யத்திலுள்ள ஏழை எளிய ஹரிஜன மக்கள் கொஞ்சம் நிலம் பெற்று, உழுது பயிரிட்டு மேல் நிலை அடைய சர்க்கார் எவ்வித ஆட்சேபனையும் சொல்லாமல் இந்த தரிசு நில வினியோக மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்."

SRI M. PALANIYANDI :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் ஆதரித்துப்பேசுகிறேன். இந்த மசோதாவிற்கு எந்தப்பக்கத்திலிருந்தும் எதிர்ப்பு இருக்காது என்று நான் இதுவரையில் நினைத்தேன். இப்பொழுது நம் நாடு விடுதலை அடைந்து ஏழு வருஷங்களாகின்றன. இதுவரையில் ஏழை விவசாயிகளுக்கு நிலம் கொடுத்ததாகத் தெரியவில்லை. ஆயிரம் மனுக்கள் அரசாங்கத்திற்கு வந்தும்கூட இன்னும் விவசாயிகளுக்கு நிலம் வழங்கினதாகத் தெரியவில்லை. அதற்காகத்தான் இந்த மசோதாவை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இதை சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதில் எந்த அரசியல் கொள்கையையும் கொண்டு வந்து புகுத்தக் கூடாது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுவும் ஒரு நல்லெண்ணத்துடன்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வேறு எந்த விதத்திலும் இதை எண்ணிவிடக் கூடாது. ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவு தரிசு நிலங்கள் இருக்கின்றன என்ற புள்ளி விவரங்களை அரசாங்கம் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். இதைப்பற்றி சட்டசபையில் பல கேள்விகள் எழுப்பப்பட்டன. புறம்போக்கு நிலங்கள் விநியோகம் செய்வதற்கு எவ்வளவு இருக்கின்றன என்ற புள்ளி விவரங்களைக் கேட்கப்பட்டது. அவ்விதம் கேட்ட போதெல்லாம் அப்படிப்பட்ட புள்ளி விவரங்கள் இல்லை என்றும் அதை சேகரிக்க வேண்டும் என்றும் சொல்லி வந்திருக்கிறார்கள். எப்பொழுது கேட்டாலும் அந்தப் புள்ளி விவரங்கள் இன்னும் தயாராகவில்லை என்றுதான் பதில் சொல்லி வந்தார்கள். ஆகவே அரசாங்கத்தார் தங்களுக்கு வேண்டிய சட்டங்களை மட்டும் செய்து கொண்டிருக்கிறார்களே தவிர இந்த வேலையைச் செய்வதாகவே தெரியவில்லை. சட்டசபை அங்கத்தினர்கள் கூறின ஆக்கப்பூர்வமான வேலைகளைச் செய்யவே இல்லை. அதனால்தான் இந்த மசோதாவை எதிர்க் கட்சியினர் கொண்டு வந்திருக்கின்றனர். உண்மையிலேயே அரசாங்கத்தாருக்கு ஏழை விவசாயிகளுக்கு நிலம் கொடுத்து உதவ வேண்டு மென்ற எண்ணம் இருந்தால் இந்த மசோதாவை ஒத்துக்கொள்ள வேண்டும்.

" தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்கிறோம் என்று சுதந்தரம் கிடைத்த அன்றிருந்தே அரசாங்கத்தார் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். செய்து வருகிறோம் என்று அரசாங்கத்தார் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர இதுவரையில் நிலம் கொடுத்து உதவி செய்ததாகவே தெரியவில்லை. தங்களுக்கு வேண்டிய சட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்களே தவிர ஹரிஜனங்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வதற்கு இன்னும் அரசாங்கம் முன் வரவில்லை. உண்மையிலேயே ஹரிஜன மக்களிடம் அரசாங்கத்திற்கு அனுதாபம் இருக்கிறது என்று சொன்னால் இந்த சட்டத்தை ஒத்துக்கொள்ள வேண்டும். இந்த சட்டத்தை ஒத்துக்கொண்டு அதை அமுல் நடத்திவந்தால் உண்மையிலேயே ஹரிஜனங்களுடைய பொருளாதாரம் முன்னேற்றமடையும், தீண்டாமையையும் ஒழிக்கப்பட்டு விடும். கிராமங்களில் போய் பார்த்தால் ஹரிஜனங்கள் பெரிய நிலக்காரர்களுடைய அடிமைகளாகத்தான் இன்னும் இருக்கிறார்கள். அவன் சொல்படி கேட்கா விட்டால் வயிற்றில் அடித்து விடுவானே என்று பயந்துகொண்டு பெரிய நிலக்காரர்கள் சொல்லியபடி நடந்து வருகிறார்கள். அதனால் நாம் எந்தச் சட்டத்தை இயற்றினாலும் அதை அங்கு அமுல் செய்ய முடியவில்லை. ஆனால் மாதந்தோறும் 30–ம் தேதி ஹரிஜன தினம் என்று அதிகாரிகள் கொண்டாடி வருகிறார்கள். அதற்கு ஹரிஜனங்களைப் போகச் சொன்னாலும் அவர்கள் அங்கு போக மறுக்கிறார்கள். ஏன் ? நாளை அந்த பெரிய நிலக்காரனிடம்தானே போக வேண்டும், அவன் வேலைக்கு வேண்டாம் என்று சொல்லி விட்டால் என்ன செய்கிறது என்று

பயந்துகொண்டு இருக்கிறார்கள். பெரிய நிலக்காரர்களிடம் ஹரிஜனங்கள் வேலைக்குப் போகக் கூடியதாக இருப்பதால் ஹரிஜனங்களை தெருவழியாக போய் நடந்து போங்கள் என்று சொன்னாலும் அவர்கள் போக மறுக்கிறார்கள். ஆகவே காந்தீய தத்துவ அடிப்படையில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றால் இந்த மசோதாவை இந்த அரசாங்கம் ஒத்துக் கொள்ள வேண்டும்.

"எந்தெந்த இடங்களில், புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றனவோ அவைகளை கணக்கெடுத்து அவைகளை நிலமில்லாத விவசாயிகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுது எடுத்துக் கொண்டால் திருச்சியில் பல இடங்களில் புறம்போக்கு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளைக் கொடுக்க வேண்டு மென்று பல மனுக்களும் வந்திருக்கின்றன. அப்படிக் கொடுக்கும்படி தாசில்தாரைப் போய்க் கேட்டால் அவர்களால் கொடுக்கமுடியவில்லை. அவருக்கு எத்தனையோ வேலை இருக்கிறது. ஒரு ஏக்கர் நிலம் வாங்கிக் கொடுப்பதற்கு சட்டசபை உருப்பினர்கள் எவ்வளவு தடவை அலைய வேண்டியிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். இப்பொழுது கணக்குப் பிள்ளைக்கு நூறு, இருநூறு என்று கொடுத்து நிலங்களை வாங்க வேண்டியதாக இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்கும் இந்த மசோதா.

"இதை எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதற்காக இதை ஒத்துக்கொள்ளாமல் இருக்கக் கூடாது. இது ஒரு முக்கியமான பிரச்னை. தீண்டாமையை ஒழிப்பதற்கும் மக்கள் நலன் பெறுவதற்கும் இந்த மசோதாவை அரசாங்கம் ஒத்துக்கொள்ள வேண்டும். ஏழை பணக்காரர் என்பது இல்லாமல் இருக்கவேண்டுமானால் இந்த மசோதாவை ஒத்துக்கொள்ளவேண்டும். ஏழைகளுக்கு அரசாங்கம் நல்லது செய்யவேண்டுமென்றால் புறம்போக்கு நிலங்களை எடுத்து அவைகளை நிச்சயமாக ஏழைகளுக்கு ஜாரி செய்து கொடுக்கவேண்டும். அதற்கு வேண்டியதிட்டம் இப்பொழுது இருக்கிறது. அந்தந்தத் தொகுதி சட்டசபை அங்கத்தினர்களையும், தாசில்தார்களையும் டிஸ்ட்ரிக்ட் போர்ட் மெம்பர்களையும் வைத்துக்கொண்டு புறம்போக்கு நிலங்களை எடுத்து ஜாரி செய்து கொடுக்க வேண்டும். சோஷலிஸ்ட்டிக் அடிப்படையில் இப்பொழுது தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால் காங்கிரசைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது எதிர்க்கட்சி அங்கத்தினர்களாக இருந்தாலும் சரி அவர்கள் இந்த அடிப்படையில் ஏழை மக்களுக்கு நிலம் கொடுப்பதற்கு உதவி அளித்து வரவேண்டும். எதிர்க் கட்சி இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது, அதனால் இதை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று நினைக்கக் கூடாது. காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி அவர்கள் தேசத்திற்கு தொண்டு செய்ய வேண்டும். காங்கிரஸ் மானிபேஸ்டோவில் இது இருக்கிறது. காங்கிரஸ்காரர்களுடைய மானிபேஸ்டோவில் இருப்பதையே அவர்கள் நிறைவேற்றினால்கூட போதும். அதுதான் காந்திய தத்துவமும். ஆகவே எல்லா உறுப்பினர்களுக்கு சேர்ந்து ஏழைகளுக்கு நிலங்களைக் கொடுப்பதற்கு உதவ வேண்டும். இந்த அடிப்படையைக் கொண்டு இந்த மசோதாவை ஒத்துக்கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்."

4–10 p.m. *SRI M. CHADAYAN :—" மிஸ்டர் டெபுடி ஸ்பீகர், ஸர், ஈ பில்லினேர் தத்வம் வளரெ அடியந்திரமாய ஒரு ஆவசியமாயதுகொண்டும் நாட்டிலெ ஜனங்ங்ளுடெ க்ஷேமத்தினும் நம்மடெ ராஜ்யத்தினேர் காக்கிகாபிவுத்஧்கும் ஸாம்பத்திக புரோகதிக்கும் வளரெ அத்யாவசியமாயிட்டுள்ளதாககொண்டும் முஸ்லீம்லீக் பாட்டியுடெ ப்ரதிநிதியெந்ன நிலயில் ஞான் ஈ பில்லினெ பிந்தாங்ஙுன்னு. (கர஘ோஷம்.) எந்னு மாத்ரமல்ல, ஗வர்மேண்டினேர் கைவசமுள்ள ஭ூமி ஈ பில்லு வரும்முன்பு தன்னெ ஭ூமியில்லாத்த ஆதிக்காக்ள பதிச்சு கொடுக்கான் ஗வர்மேண்டு ஶ்ரத்஧ிக்ஙேண்டதாயிரிந்னுவென்னாண் எந்னேர அபிப்ராயம். ஗வர்மேண்டு ஭ூமி சிலர் கயேறியதினேர் ஫லமாயி இந்ன

17th February 1955] [Sri M. Chadayan]

നാട്ടിൽ പല കുഴപ്പങ്ങളും കലാപങ്ങളും നടക്കുന്നുണ്ട്. അതിനെല്ലാം ഉത്തരവാദി ഗവർമ്മേണ്ടുതന്നെയാണ്. ഗവർമ്മേണ്ടിന്റെ കയ്യിലുള്ള ഭൂമി കൃഷിക്കാർക്ക് വിട്ടുകൊടുക്കുന്നപക്ഷം അതു് ഈ രാജ്യത്തെ ഉല്പാദനവർദ്ധനയ്ക്കും സാമ്പത്തികാഭിവൃദ്ധിക്കും ഉതകുന്നതാണ്. അതുകൊണ്ട് ഗവർമ്മേണ്ട് ഈ ബില്ലിന്റെ തത്വത്തെ ഒരു അടിയന്തിരകാര്യമായി ഗണിച്ചു അംഗീകരിക്കണമെന്നാണ് എന്റെ അഭിപ്രായം. ഈ രാജ്യത്തെ ഒരു വലിയ വിഭാഗം കൃഷിക്കാർക്ക്, വിശേഷിച്ചും ഹരിജനങ്ങളായ കർഷകത്തൊഴിലാളികൾക്കു കൃഷിചെയ്യാൻ ഒരിഞ്ചു സ്ഥലം പോലും സ്വന്തമായിട്ടില്ല. അന്യരെ ആശ്രയിച്ചും അന്യരുടെ അടിമകളായി പണിയെടുത്തും കഷ്ടപ്പെടുന്ന ആ ജനവിഭാഗത്തിന്നു കുറച്ചെങ്കിലും ഭൂമി പതിച്ചുകൊടുക്കുകയും അങ്ങിനെ അവരും ഗവർമ്മേണ്ടിൽനിന്നു പട്ടയം സിദ്ധിച്ചിട്ടുള്ളവരാണ് എന്ന ഒരു നില വരുത്തുകയും ചെയ്യേണ്ടതു് ഗവർമ്മേണ്ടിന്റെ കടമയാണ്. ഈ നാട്ടിന്റെ ക്ഷേമത്തിന്നും അഭിവൃദ്ധിക്കും വേണ്ടിയും ഈ നാട്ടിലെ ജനങ്ങളുടെ സാമ്പത്തികപുരോഗതിക്കുവേണ്ടിയും ആണ് മുസ്ലീം ലീഗ് എപ്പോഴും നിലകൊള്ളുന്നതു്. അതുകൊണ്ടാണ് ഈ ബില്ലിന്റെ തത്വത്തെ മുസ്ലീം ലീഗ് സ്വാഗതംചെയ്യുന്നതു്. ഈ ബില്ല് കഴിയുന്നതും വേഗത്തിൽ പാസ്സാക്കേണ്ടതാണെന്നുകൂടി ഞങ്ങൾക്ക് അഭിപ്രായമുണ്ട്. മലബാറിൽ ലക്ഷക്കണക്കിനു ഏക്കർ തരിശുഭൂമി ഗവർമ്മേണ്ടിന്റെ കൈശമുണ്ട്. പല ഭാഗങ്ങളും നാട്ടിലെ പ്രത്യേകക്കാരായ ചില ആളുകൾ കയ്യേറി വച്ചുകൊണ്ടിരിക്കയാണ്. അതിന്നു റവന്യൂ ഉദ്യോഗസ്ഥന്മാരും കൂട്ടുനില്ക്കുന്നുണ്ട്. ജന്മിമാരുടെ ഭൂമികൾ പിടിച്ചെടുത്തു ഭൂമിയില്ലാത്തവർക്കു കൊടുക്കാൻ ശ്രമിക്കുന്നതിന്നുമുമ്പ് സ്വന്തം കൈയിലുള്ള ഭൂമി കൃഷിക്കു കൊടുക്കാൻ ഗവർമ്മേണ്ട് തയ്യാറാകേണ്ടതായിരുന്നു. താൻ നന്നായിട്ടു അന്യരെ നന്നാക്കാൻ പോവുക എന്നൊരു ചൊല്ലുണ്ട്. അതനുസരിച്ചു ആദ്യം ഗവർമ്മേണ്ടിന്റെ കൈയിലുള്ളതു് കൊടുക്കേണ്ടതായിരുന്നു. പിന്നെ മതി ജന്മിമാരുടെ കയ്യിൽനിന്നു എടുത്തുകൊടുക്കുന്ന കാര്യത്തെപ്പററി ചിന്തിക്കുന്നതു്. ഗവർമ്മേണ്ടിന്റെ കൈവശമുള്ള ഭൂമി കൊടുക്കാനുള്ള ഒരു ബില്ലാണിതു്. ഗവർമ്മേണ്ടിന്റെ കൈശമുള്ള ഭൂമി കൃഷിക്കു പതിച്ചുകൊടുക്കാനുള്ള നടപടികൾ അടിയന്തിരമായി എടുക്കണമെന്നഭ്യർത്ഥിച്ചുകൊണ്ട് എന്റെ പ്രസംഗം അവസാനിപ്പിക്കുകയാണ്."

* SRI T. SHANMUGAM :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தரிசு நிலங்களை பிரித்துக் கொடுப்பதற்கு என்று கொண்டு வந்த மசோதா இது. அதாவது உபயோகமில்லாத நிலங்களை ஏழை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று தான் இந்த மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு இவ்வளவு தகராறு வேண்டியதில்லை. எதிர்ப்பும் வேண்டியதில்லை. இவ்வளவு போகட் பேசியதிலிருந்து சர்க்கார் என்ன நினைக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இதற்கு ஒரு கதை உண்டு, அதைத் தெரிந்து கொண்டால் இந்த எதிர்ப்பின் அர்த்தம் தெரிந்துவிடும். ஒரு வீட்டிற்கு ஒரு பிச்சைக்காரன் வந்தான். பிச்சை கொடு என்று கேட்டான். அந்த வீட்டு மருமகள் 'பிச்சை இல்லை போ' என்று சொல்லி விட்டாள். அந்தப் பிச்சைக்காரனும் போய்விட்டான். பிறகு மாமியார் வந்தாள். 'அவன் ஏன் போய் விட்டான்' என்று மருமகளைக் கேட்டாள். அதற்கு மருமகள், 'அவன் பிச்சை கேட்டான், இல்லை போ என்று சொல்லிவிட்டேன்' என்று சொன்னாள். 'நீ என்ன வீட்டிற்கு யஜமானியா அவனைப் போகச் சொல்வதற்கு' என்று அந்த மாமியார் அந்தப் பிச்சைக்காரனைப் போய்க்கூட்டி வந்து தன் வீட்டிற்கு வந்தவுடன் 'உனக்குப் பிச்சை கிடையாது போ' என்று சொல்லி அனுப்பிவிட்டாள். இந்த கதையைப்போல் இருக்கிறது. அதேபோல் வேஸ்ட் லாண்டை எதிர்க்கட்சி மசோதா கொண்டு வந்து நிலங்களை பிரித்துக்கொடுப்பதா, நாங்களே ஒரு மசோதாவைக் கொண்டுவந்து கொடுக்கிறோம் என்று சொல்வதுபோல் இருக்கிறது. அரசாங்கத்தாரே செய்யட்டுமே, அதை நாங்களும் வரவேற்கிறோம். யார் பங்கிட்டுக் கொடுத்தால் என்ன ? வேஸ்ட் லாண்ட் என்றால் என்ன ? ஒரு பக்கம் மலைபோல் இருக்கும், மற்றொரு பக்கம் பள்ளத்தாக்காக இருக்கும். எரிக்கு பக்கமாக இருக்காது. இதுதான் வேஸ்ட் லாண்ட். நல்ல நிலமாக இருந்தால் அதுவும் குளத்திற்குப் பக்கத்தில் இருந்தால் அதை பணக்காரர்கள் இதுவரையில் விட்டுவைத்திருப்பார்களா. அதனால் எப்படிப்பட்ட நிலங்களை பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். 4–15 p.m.

[Sri T. Shanmugam] [17th February 1955

"அப்படி பங்கிட்டுக்கொடுத்தால் மட்டும் போதாது. அவைகள் சாகுபடிக்கு லாயக்காக இருக்காது. அதனால் சர்க்காரே புல் டோசர்களைவைத்து மேடு பள்ளங்களை சரிப்படுத்தி நிலங்களை சாகுபடிக்கு லாயக்குள்ளதாகச் செய்து விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். நிலத்தை மட்டும் கொடுத்துவிட்டால் என்ன பிரயோசனம். கம்யூனிஸ்ட் நண்பர்கள், புறம்போக்கு நிலங்கள், வேஸ்ட் நிலங்கள், கவர்ன்மெண்ட் வேஸ்ட் நிலங்கள், பணக்காரர்கள் வேஸ்ட் நிலங்கள் இதைத்தான் கேட்கிறார்கள். இப்பொழுது கோயில்களுக்கு நிறைய வேஸ்ட் நிலங்கள் இருக்கின்றன. மடாதிபதிகளுக்கு நிறைய வேஸ்ட் நிலங்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான ஏக்கரா நிலங்கள் இருக்கின்றன. இவைகளை அவர்கள் கேட்க மாட்டேன் என்கிறார்கள். அவர்களுக்கு என்ன பயமோ தெரியவில்லை. இப்படிப்பட்ட கோயில்களுக்குச் சொந்தமான லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருப்பதை சர்க்கார் எடுத்துக்கொண்டு அவைகளை ஆளுக்கு ஒரு ஏக்கர் வீதம் ஏழைகளுக்கு பிரித்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்."

* SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பதை எதிர்க்கிறேன். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் 'சர்க்காருக்கே தரிசு நிலங்கள் எவ்வளவு இருக்கிறது என்று தெரியாது என்றும், விவசாயத்திற்கு லாயக்குள்ளதாக எவ்வளவு இருக்கிறது என்பதும் அவர்களாலேயே சொல்ல முடியவில்லை என்றும்' சர்க்காரும் அதையே ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்றும் எனக்கு முன்பு பேசியவர் குறிப்பிட்டார். எத்தனையோ இடங்கள் மேடும் பள்ளமுமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலங்களை நிலமில்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டால் மாத்திரம் அவர்கள் திருப்தி அடைந்து விடமாட்டார்கள். அதனால் சர்க்கார் இத்துடன் நிற்காமல் அந்த நிலங்களுக்கு அதிகப்படியான பணத்தை செலவு செய்து அவைகள் விவசாயத்திற்கு லாயக்குள்ளவைகளாக ஆவதற்கு அவர்களுக்குப் போதுமான பணமும் கொடுத்தால்தான் விவசாயிகள் திருப்தி அடைவார்கள். இந்த மசோதாவில் ஒருவருக்கு ஒரு ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுப்பது என்று இருக்கிறதே அப்படி பங்கிட்டுக்கொடுத்து விட்டால் அதனால் ஜனங்களுடைய தரித்திரம் நீங்கிவிடாது. அவ்விதம் அவர்கள் திருப்தி அடையும்படியாக கொடுக்க வேண்டுமென்றால் சர்க்கார் பெருவாரியாக பணத்தையும் செலவிட வேண்டும். அதற்கு இப்போதைய நிலையில் சர்க்கார் தயாராய் இல்லையென்பதுதான் என் பதில். இதைத்தான் கனம் பாய் அவர்களும் சொன்னார். அதுவேதான் என்னுடைய அபிப்பிராயமும்.

"மற்றும் வேலையில்லா திண்டாட்டத்தை போக்கி விடலாம் என்றும் சொன்னார்கள். ஆனால் வேலை கிடைக்குமா என்று பார்த்தால் வீண் வேலைக் கொடுமையில்தான் கொண்டுபோய் விடும் இந்த மசோதாவை ஒப்புக் கொண்டால். இப்பொழுதே சர்க்கார் நிலங்களில் அவர்களுடைய அனுமதியின்றி விவசாயிகள் (என்க்ரோச்மெண்ட்) பிரவேசித்திருக்கிறார்கள். அவ்விதம் பிரவேசித்து சாகுபடியும் செய்துகொண்டு வருகிறார்கள். தண்டத் தீர்வையும் கட்டிக்கொண்டுவருகிறார்கள். லாயக்குள்ள தரிசுநிலங்கள் காலியாக இல்லை. ஆகவே தரிசு நிலங்கள் என்றால் சுலபமாக பண்படுத்தக் கூடாத நிலங்கள் என்றுதான் ஆகிறது. அப்படிப்பட்ட நிலங்களை எடுத்து ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு ஏக்கர் என்று கொடுத்து விட்டால் அவர்களால் அவைகளில் சுலபமாக விவசாயம் செய்ய முடியாமல் சும்மா வைத்துக்கொண்டிருப்பார்கள். அவைகளை பண்படுத்த வேண்டும் என்றால் அவர்கள் அதிகப்படியாக செலவு செய்ய வேண்டும். அப்படிச் செலவு செய்தாலும் அந்த நிலங்களை சாகுபடிக்கு லாயக்குள்ளவைகளாகச் செய்வதற்கு முடியாமல் அவர்களுடைய ரத்தத்தை மாத்திரம் வீணாக சிந்தி பலன் யாதொன்றும் அடையாமலும் போய் விடுவார்கள். பிறகு இப்படி ஒரு ஏக்கர் கொடுத்து ஆசைகாட்டி எங்களை

17th February 1955] [Sri P. S. Krishnaswamy Ayyangar]

വഞ്ചിത്തു വിട്ടാർക്കൾ എന്നും സൊല്ലുവാർക്കൾ. അപ്പടിപ്പട്ട നിലൈമൈക്കു ഏഴൈകളൈക്കൊണ്ടു പോയ് വിടക്കൂടാതു. അവർകളെ വഞ്ചിത്തു വിടവും കൂടാതു.

"ഇന്ത മശോതാവൈക് കൊണ്ടു നാം ഏഴൈകളെ വഞ്ചിത്തുവിടക്കൂടാതു. നല്ല നിലങ്കളാക ഇരുന്താൽ, വിവശായം ചെയ്വതറ്കു ലായക്കാന നിലങ്കളാക ഇരുന്താൽ അവറ്റൈ ഉടനടിയാക നിലമില്ലാത ഏഴൈക്കുപ് പിരിത്തുക് കൊടുപ്പതിൽ കൊഞ്ചം കൂടക് കാലതാമതം ചെയ്യക്കൂടാതു. അന്തക് കൊൾകൈയെ ചർക്കാർ ഒപ്പുക്കൊണ്ടിരുക്കിറതു. ആനാൽ വിവശായത്തിറ്കു ലായക്കാന നിലങ്കളോ, വിവശായത്തിറ്കു ലായക്കറ്റ നിലങ്കളോ അതൈപ് പറ്റിക് കവലൈപ് പടാമൽ രാജ്യം പൂരാവും ഇരുക്കിന്ന തരിശു നിലങ്കളെ എല്ലാം പിരിത്തുക് കൊടുത്തുവിടവേണ്ടുമെന്നു സൊന്നാൽ അതൈ എപ്പടി ഒത്തുക് കൊൾവതു എന്നു താൻ എനക്കുത് തെരിയവില്ലൈ. ഒരുനിലം വിവശായം ചെയ്വതറ്കു ലായക്കാന നിലമില്ലൈ എന്നു തെരിന്തും നാം ഒരു പരമ ഏഴൈക്കു അന്ത നിലത്തൈപ് പിരിത്തുക് കൊടുത്താൽ അവൻ അതൈ നമ്പി കൈയിൽ ഇരുക്കിറ കൊഞ്ച നഞ്ച പണത്തൈയും പോട്ടു അതിൽ വിവശായം ചെയ്തു, കടൈശിയിൽ ഏരാള നഷ്ടമും അടൈന്തു ചർക്കാരൈയേ വയ്യവും ആരംപിത്തുവിടുവാൻ. അവർകളുടൈയ കോപത്തിറ്കു ചർക്കാർ ആളാകക് കൂടാതു എൻപതോടു കൂട അപ്പടി അന്ത ഏഴൈകൾ നഷ്ടം അടൈയും വകൈയിൽ, അവർകളെ വഞ്ചിക്കും വകൈയിൽ, വിവശായം ചെയ്വതറ്കു ലായക്കറ്റ നിലങ്കളൈപ് പിരിത്തുക് കൊടുപ്പതൈ നാൻ പലമാക ആട്ചേപിക്കിറേൻ. ആകവേ ഇന്ത മശോതാ വറ്പുറുത്തപ്പടമാട്ടാതു എന്നു നമ്പുകിറേൻ. എതിർക്കാലത്തൈപ് പറ്റി കൊഞ്ചം യോചിത്തുപ് പാർക്കും എന്ത തീർക്കതിരുഷ്ടി വായ്ന്ത അരശിയൽ വാതികളും ഇതൈ ആതരിക്കമാട്ടാർക്കൾ എന്നു സൊല്ലിക് കൊണ്ടു എൻ പേച്ചൈ മുടിത്തുക് കൊൾകിറേൻ."

* SRI E. T. KUNHAN :—"മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഏററവും അടിയന്തിരമായി പാസ്സാക്കേണ്ട ഒരു ബില്ലാണ് സഖാവ് കന്തസ്വാമി കൊണ്ടുവന്നിരിക്കുന്നതു്. ഭൂമിയില്ലാത്ത കർഷകത്തൊഴിലാളികൾക്കും ചെറുകിട കൃഷിക്കാർക്കും നമ്മുടെ നാട്ടിലുള്ള തരിശുഭൂമികൾ പതിച്ചുകൊടുക്കുവാനുള്ള ഒരു ബില്ലാണിതു്. ഭൂമിയിൽ പ്രവൃത്തിയെടുത്തു് രാജ്യത്തിന്റെ ഉല്പാദനം വർദ്ധിപ്പിക്കുന്നതു് പ്രധാനമായും കർഷകത്തൊഴിലാളികളും ചെറുകിട കൃഷിക്കാരുമാണ്. അവർക്കു ഭൂമികൊടുക്കേണ്ടതു് ഏററവും അത്യാവശ്യമായിട്ടുള്ള ഒരു സംഗതിയാണ്. കർഷകത്തൊഴിലാളികളും ഈ ഭൂമിയിൽ ജനിച്ചിട്ടുള്ളവരാണ്. അവർക്കും ഭൂമിക്കു് അവകാശമുണ്ട്. അവർക്കു് ഭൂമികൊടുക്കാനാണ് ഈ ബില്ല കൊണ്ടുവന്നിരിക്കുന്നതു്. സഖാവ് കന്തസ്വാമി പറഞ്ഞപോലെ ആവടി കോൺഗ്രസ് കൃഷിക്കാർക്കു് തരിശുഭൂമികൊടുക്കണമെന്നു് പ്രഖ്യാപിച്ചിട്ടുണ്ട്. ഇതു് ആവടി കോൺഗ്രസ്സിൽ മാത്രമല്ല, 30 കൊല്ലം മുമ്പേ കോൺഗ്രസ്സ് പ്രഖ്യാപിച്ചിട്ടുള്ള ഒരു കാര്യമാണ്. ജന്മിത്തം അവസാനിപ്പിക്കുക, മുതലാളിത്തം അവസാനിപ്പിക്കുക, കൃഷിഭൂമി കർഷകന് കൊടുക്കുക എന്നെല്ലാം കോൺഗ്രസ്സ് 30 കൊല്ലത്തിനു മുമ്പേ പറഞ്ഞിട്ടുണ്ട്. പക്ഷെ ഇടതാനും ചെയ്യാൻ വേണ്ടി പറയുന്നതല്ല. ആത്മാർത്ഥതയോടുകൂടി പറയുന്നതുമല്ല. ഇപ്പോൾ ആന്ധ്രാ എലക്ഷൻ പ്രചരണത്തിനുവേണ്ടി എടുത്തിരിക്കുന്ന ഒരടവാണ് ഇതു്. 4-2 p.m.

"തരിശുഭൂമികൾ ജന്മിമാരിൽനിന്നു എടുത്തു കൃഷിക്കാരനു കൊടുക്കണമെന്നു് മലബാർ കുടിയാന്മാർ നിയമം 52-ാം വകുപ്പിൽ പറഞ്ഞിട്ടുണ്ട്. മലബാറിൽ ഗവർമ്മെണ്ടിന്റെ കൈവശംതന്നെ ധാരാളം ഭൂമി കിടപ്പുണ്ട്. കൃത്താളി എസ്റ്റേററിൽ ഭൂമി കൊടുക്കുവാൻ വേണ്ടിയുള്ള സമരം ഇന്നു കലക്ടരാഫീസിന്റെ മുമ്പിൽ എത്തിയിരിക്കയാണ്. സത്യാഗ്രഹം നടത്താൻ മാത്രമല്ല, തരിശു കൊത്തുവാൻതന്നെ അവർ ഇന്നു് തയ്യാറായിരിക്കയാണ്. വയനാട്ടിലും മററും കാട്ടു വെട്ടിത്തെളിച്ചു് കർഷകത്തൊഴിലാളികൾ ധാരാളം ഭൂമി നല്ല കൃഷിഭൂമിയാക്കിയിട്ടുണ്ട്. അതിന്റെയെല്ലാം ഫലം അനുഭവിക്കുന്നതു് തോട്ടം ഉടമസ്ഥന്മാരായ സായ്പന്മാരാണ്. തൊഴിലാളികൾക്കു പട്ടിണിയും മർദ്ദനവും മാത്രം. തൊഴിലാളികൾ യഥാർത്ഥത്തിൽ നരകിക്കുകയാണ്. അവർക്കു ഭൂമിപതിച്ചു കൊടുക്കേണ്ടതാവശ്യമാണ്. ഇന്നും ഭൂമി പതിച്ചുകൊടുക്കുന്നുണ്ട് ? കൊടുക്കുന്നില്ലെന്നു് പറഞ്ഞുകൂട. പക്ഷെ ആർക്കാണ് കൊടുക്കുന്നതു ? ധാരാളം ഭൂമി കൈവശമുള്ള പണക്കാർക്കും ജന്മിമാർക്കും ആണു വീണ്ടും തരിശുഭൂമികൾ പതിച്ചു

കൊടുക്കുന്നതു്. കൃഷിക്കാരും തൊഴിലാളികൾക്കും ഒരിഞ്ചു ഭൂമിപോലും കിട്ടിയിട്ടില്ല. ചാവക്കാട് ഫക്കയിൽതന്നെ കടപ്പുറം വില്ലേജിൽ വളരെയധികം പുറമ്പോക്കു ഭൂമികൾ കിടപ്പുണ്ടു്. ആരാണ് അതെല്ലാം കൈയടക്കിവച്ചിരിക്കുന്നതു്? പണക്കാരായ ഒരു കൂട്ടം സേട്ടുവന്മാരാണ് അതെല്ലാം കൈയടക്കി കൃഷി ചെയ്തുകൊണ്ടിരിക്കുന്നതു്. അതേ സമയം കർഷകത്തൊഴിലാളികളായിട്ടുള്ള ആളുകൾ എത്രയോ കാലമായി ഭൂമിക്കുവേണ്ടി മുറവിളി കൂട്ടിക്കൊണ്ടിരിക്കുന്നുണ്ടു്. അവർക്കു ഒരിഞ്ചുപോലും കിട്ടിയിട്ടില്ല. ഇതാണ് ഇന്നു ഈ നാട്ടിൽ നടന്നുകൊണ്ടിരിക്കുന്നതു്. പൊന്നാനി താലൂക്കിൽ താനൂർ, കാഞ്ഞിരമുക്കു് മുതലായ വില്ലേജുകളിൽ കായൽപുറമ്പോക്കുകളുണ്ടു്. ഹരിജനങ്ങൾ ആവശ്യപ്പെട്ടിട്ടു് അവർക്കാണ് കൊടുക്കാതെ മുതലാളിമാർക്കു ജന്മിമാർക്കുമാണ് അതെല്ലാം കൊടുക്കുന്നതു്. ചില വില്ലേജ് ഉദ്യോഗസ്ഥന്മാരും ഭൂമി കരസ്ഥമാക്കുന്നുണ്ടു്. ആ ഭൂമികൾ തങ്ങൾക്കുതന്നെ കിട്ടണമെന്നു് കാണിച്ചു് അവിടത്തെ ഹരിജനങ്ങൾ രണ്ടു കൊല്ലം മുമ്പേ റവന്യൂ അധികാരികൾക്കും ബഹുമാനപ്പെട്ട റവന്യൂ മന്ത്രിക്കും മെമ്മോറാണ്ടങ്ങൾ അയച്ചിട്ടുണ്ടു്. പക്ഷെ അവർക്കു ഇതുവരെ ഭൂമി കിട്ടിയിട്ടില്ല. അതേ സമയം പ്രബലന്മാരായ ജന്മിമാരും മുതലാളിമാരും ആ സ്ഥലങ്ങളെല്ലാം കൈവശപ്പെടുത്തിക്കഴിഞ്ഞിരിക്കയാണ്.''

4-25 p.m. *SRI C. VELUKKAN :—'' മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഇപ്പോൾ സഭ മുമ്പാകെ ചർച്ചയ്ക്കു വന്നിരിക്കുന്ന ബില്ലിനെ പിന്താങ്ങിക്കൊണ്ടു് വയനാട്ടിലെ തരിശു ഭൂമികളെ സംബന്ധിച്ചു് ചുരുക്കത്തിൽ ചിലതു പറയുവാനാണ് ഞാൻ ആഗ്രഹിക്കുന്നതു്. വയനാട്ടിന്റെ ചരിത്രം പരിശോധിച്ചാൽ മനസ്സിലാകും അവിടത്തെ തരിശു ഭൂമികളെല്ലാം ന്യായമായി പതിച്ചുകൊടുക്കേണ്ടതു് അവിടത്തെ ആദിമനിവാസികൾക്കാണെന്നു്. അവരാണ് വണ്ടുകാലം മുതൽക്കേ അവിടെ കുടിപാർത്തു അദ്ധ്വാനിച്ചു വരുന്നതു്. അമ്പത്തിമൂവായിരത്തോളം വരുന്ന ഈ ആദിമനിവാസികൾ ഭൂമിയില്ലാതെ അരയേക്കർ സ്ഥലത്തും കാലേക്കർ സ്ഥലത്തും മുപ്പതും നാല്പതും കുടികൾകെട്ടി തിങ്ങിക്കിടക്കുകയാണ്. വയനാട്ടിൽ തരിശുഭൂമികൾ ധാരാളമുണ്ടെങ്കിലും ഒരിഞ്ചു ഭൂമിപോലും അവർക്കു് സമ്പാദിക്കാൻ കഴിഞ്ഞിട്ടില്ല. കാരണം അവരുടെ സത്യസന്ധതയും മര്യാദയുമാണ്. സത്യവും, മര്യാദയും അനുസരണവുമുള്ളവരായതുകൊണ്ടാണ് അവർക്കു ഭൂമികിട്ടാതെ പോയിട്ടുള്ളതു്. ഈ നാട്ടിലെ ഭൂമിയില്ലാത്ത കൃഷിക്കാർക്കു് ഭൂമി പതിച്ചുകൊടുക്കുന്നതിനുള്ള ബില്ലു് ചർച്ചചെയ്യുന്ന ഈ അവസരത്തിൽ, വയനാട്ടിലെ കൃഷിക്കാരായ ആദിമനിവാസികൾക്കു് ഭൂമി സ്ഥിരമായി പതിച്ചുകൊടുക്കുവാൻ ഒരു സ്പെഷ്യൽ താസിൽദാരെ നിയമിക്കണമെന്നു് ആവശ്യപ്പെട്ടുകൊണ്ടു എന്റെ ചെറു പ്രസംഗം അവസാനിപ്പിക്കുകയാണ്.''

DEPUTY SPEAKER :—'' The Hon. Finance Minister will now reply.''

SRI M. KALYANASUNDARAM :—'' Sir, there are some more speakers. It would be enough if two or three minutes are given for each.''

DEPUTY SPEAKER :—'' I have no objection. The Hon. Minister has to reply.''

SRI M. KALYANASUNDARAM :—'' The Hon. Finance Minister will not require much time.''

4-30 p.m. THE HON. SRI C. SUBRAMANIAM :—'' Sir, I do not want to stand in the way.''

SRI T. C. NARAYANAN NAMBIAR :—'' Mr. Deputy Speaker, Sir, I do not know what I have to speak within the three minutes. Anyhow, I want to say a few words only with regard to the Koothali Estate. The hon. Member Sri Kanaran has already invited the

17th February 1955] [Sri T. C. Narayanan Nambiar]

attention of the Hon. Minister for Finance and other hon. Members of this House to the realities of the situation in that part of the country. The people are very eager that the land should be brought under the plough. Various representations were made to the Government, but they have been futile. Hence they are compelled regretfully to go and do a thapasya before the Tahsildar. The Hon. Minister and other spokesmen of the Government say the Communists are fomenting trouble, that the law and order of the country is upset by them and all that. In this connexion, I would only read the recommendations of the Investigation Officer appointed by the Government of Madras :

'There is no doubt that some definite, legislative measure is necessary in this matter. Large extents of waste lands are available. Though the janmis have been maintaining from time to time that they would grant such lands for cultivation, nothing tangible has been done. The population has increased ; the number of landless people is on the increase. Now and then, agrarian disputes arise, showing the unrest of the poor and landless people. Recently, there were serious troubles in North Malabar for the grant of unoccupied lands for cultivation . . .'

This was in 1947. After that much water has flown. This was not written by any Communist. (Interruption.) Yes, this is not a Communist manifesto. Therefore, even if Government come forward to distribute waste lands, there should be some principle even so far as Government lands are concerned. I shall narrate an instance. I am a karnavan and I have got my mother's land and father's property; I am not able to lease my lands to my nephew or brother whom I like. They come and complain, 'You are leasing our paternal property to somebody to get more income; you do not lease them to us.' But I am not able to do that. When such is the case with regard to an individual's property, what will be the position of State property if there is no principle. Therefore, there should be some statutory principles, some democratic principles—the Hon. Finance Minister may get angry if the word 'democracy' is uttered by a Communist—let me say, some reasonable principle as to what is to be done with these lands, to whom should they be given and what is the maximum acreage to be given, etc. I hope for all these reasons, the Hon. Finance Minister would accept this Bill.

"The hon. Member, Sri Kurup, was saying that in Malabar there was no proper accounting of the lands and that the figures furnished by Government officials were not correct. According to a Government publication on the achievements of Congress rule in five years, it is said that in Malabar there are 359,870 acres of forest lands and 182,999,917 acres of cultivable waste lands. In Tamilnad alone as per publication by Sri O. P. Ramaswami Reddiar, there are about 15 lakhs acres of cultivable waste land. Supposing one acre produces grain worth Rs. 50 on a minimum and if the cultivation expenses are Rs. 25 per acre, the bare minimum we can get out of it is Rs. 25 per acre and that is, we can get about Rs. 25 crores in all. We want to construct so many dams and execute so many projects and we want money for all those things.

[Sri T. C. Narayanan Nambiar] [17th February 1955

Therefore, is it not a constructive suggestion, is it not a patriotic suggestion that the waste lands should be brought under the plough which is what we have now placed before the Government? I hope the Hon. Finance Minister will not refuse to accept this simply because this has been brought forward by the Opposition or by the Communists. That is not our fault. Even here it has received support from others also. For example, the Hon. Member, Mr. Chadayan has supported this Bill on behalf of the Muslim League. It was not because they want to support the Communists, but because the issue involved is genuine and it is a burning problem of the day. I think no patriot can repudiate the sound principles contained in this Bill. I hope the Hon. the Finance Minister, a patriot as he is, will accept this Bill, as he himself has said several times that he wants to solve the burning problems of the State. I request him to accept this Bill and bestow his early attention to the matter at least as far as Malabar is concerned."

4-33 p.m. * SRI V. MADANAGOPAL :—" கனம் உப சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் நியாயத்தை எல்லோரும் ஒப்புக்கொள்வதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அதற்காக ஒரு சட்டம் தேவையேயில்லை, அரசாங்கத்தார் நிர்வாக உத்திரவு மூலமே அவற்றை காரியத்தில் செய்து விடுவார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையை அதுவும் அரசாங்கத்தார் நிர்வாக உத்தரவு மூலமாகவே நிறைவேற்றிக்கொண்டு வரும் ஒரு காரியத்தை சட்ட ரீதியாகச் செய்ய ஒரு மசோதா கொண்டுவருவதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். சர்க்கார் தங்களுடைய சொந்த நலனை உத்தேசித்து, தங்களது கட்சி நலனை உத்தேசித்து இதை எதிர்க்கிறோம் என்று சொல்லி விட்டால் அதைப்பற்றி எனக்கு ஆட்சேபனையேயில்லை.

" இன்றைக்கு நம் ராஜ்யத்திலே எங்கங்கே தரிசு நிலங்கள் இருக்கின்றன என்பது திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லையென்றும் சிலர் சொன்னார்கள். அது சரியல்ல. என்னுடைய தொகுதியிலே எங்கங்கே நன்றாக விவசாயம் செய்யக் கூடிய தரிசு நிலங்கள் கிடக்கின்றன என்று என்னால் சொல்ல முடியும். குறிப்பாக மதுரை ஜில்லா கோடைக்கானல் ரோடுக்கு அருகாமையில் ஸ்ரீ ஜெயராஜ் நாடார் அவர்கள் தன்னுடைய நிலங்களோடு கூட ஒரு ஐம்பது ஏக்கரா நல்ல அசல் ஒன்றும் நம்பர் தரிசு நிலத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஏக்கரா விலை ஐயாயிரம் ரூபாய் இருக்கும். இதைப் போல இன்னும் பலவிடங்களில் சொல்லிக்கொண்டே போக முடியும். ஆனால் எனக்கு நேரமில்லை.

" திண்டுக்கல், ஆத்தூர் பிர்க்காவில் தர்மத்துப்பட்டிக்கு அருகில் தரிசு நிலங்களில் பயிரிட்டிருக்கிறார்கள் ஏழை விவசாயிகள். ஏழை விவசாயிகள் எல்லாம் பயிரிட்டு அறுவடைச் செய்து வீட்டில் வைத்திருந்த கம்மங் கதிர் சுமார் முப்பது கலமாகும். அந்த கதிர்களை போலீசார் உதவி கொண்டு கிராம முன்சீப் எடுத்து சென்று விட்டார். விவசாயிகள் கலெக்டரிடம் முறையிட்டபோது அம்மாதிரியான உத்திரவு எதுவும் போடவில்லை என்று சொல்லுகிறார்கள். இந்த விஷயத்தில் மிகப் பிரபலமான புள்ளிகள் எல்லாம் சம்பந்தப்பட்டிருக்கின்றன. தவிர கோம்பையில் போடி ஜமீனுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான தரிசு நிலங்கள் இருக்கின்றன. அவற்றில் விவசாயிகள் உழுது பயிரிட்டிருக்கிறார்கள். ஆனால் அதை அதிகாரிகளால் திரும்பப் பறிக்கப் பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக மதுரை ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கம்யூனிஸ்டுகளின் " நில ஆக்கிரமிப்பு " என்று அறிக்கை விடுகிறார். ஆகவே அங்கங்கே அரசியல் நோக்கத்தோடு, கட்சி நோக்கத்தோடு, தங்கள் கட்சிக்குப்பலம் தேடிக்கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்த தரிசு நில

17th February 1955] [Sri V. Madanagopal]

வினியோகப் பிரச்னை நடந்து கொண்டிருக்கிறதே தவிர ஒரு இடத்திலாவது நியாயமான முறையில் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது என்று சர்க்காரால் கூறமுடியாது.

" ஆகவே தான் சில குறிப்பிட்ட கொள்கையை வரையறைந்து அதன்படி நிலம் வினியோகிக்கப்படவேண்டுமென்பதற்காக நாங்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். இப்படி ஒரு சட்டம் தேவையில்லை. நிர்வாக உத்தரவு மூலமே தரிசு நிலங்களை கொடுத்து வருகின்றோம் என்று சர்க்கார் கூறினால் அது தவறு. ஒரு கால் வரிவிதிப்பதென்றாலும், செலவு செய்வதென்றாலும் அது இந்த சபையில் அங்கீகரிக்கப்படவேண்டிய விஷயம். அப்படியிருக்க, லக்ஷக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்களைத் தங்கள் இஷ்டப்படி வினியோகம் செய்வதென்பது முறையல்ல. அது ஜனநாயகமாகாது. அது இந்த ராஜ்யத்தின் பொது சொத்து. அதற்கு பொதுவான சட்டம் வேண்டும்.

" இதை மறுத்து நிர்வாக விஷயமாக கவனித்து வருகிறோம் என்று கூறினால் அதனுடைய அர்த்தம் சர்க்கார் தங்கள் கட்சி நலனை உத்தேசித்து வேண்டிய நபர்களுக்கும் தியாகிகளின் பேராலும், இதர துறைகளிலும் தரிசு நிலங்களைக் கொடுத்து பயன் படுத்துவதாகும்.

" நான் கூறுவது தவறு. சர்க்காருக்கு அப்படி உள் நோக்கம் இல்லையென்றால், இந்த மசோதாவை சர்க்கார் ஒப்புக்கொண்டு தனது நேர்மையை நிரூபிக்கவேண்டும் என கூறிக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டுவந்தவருடைய நல்லெண்ணத்தை நான் மறுக்க வில்லை. ஆனால் நல்லெண்ணம் இருந்தால் மட்டும் ஒரு நல்ல சட்டத்தை உண்டாக்கிவிட முடியாதென்பதற்கு சிறந்த உதாரணமாக இந்த மசோதா இருக்கிறது. நான் இந்த மசோதாவை ஒப்புக்கொள்வதற்குத் தயாராய் இல்லையென்றால் அதை ஒப்புக்கொண்டு அதை அமுலாக்குவதில் ஏற்படப் போகும் கஷ்டங்கள் இப்பொழுது இருப்பதை விட மிக அதிகமாக இருக்கும் என்கிற காரணத்திற்காகவே யொழிய எதிர்க்கட்சியிலிருந்து பிரேரிக்கப்பட்டிருக்கிறது என்பதற்காக அல்ல. ஏழைகளுக்குத் தரிசு நிலங்களை விநியோகிக்கும் கொள்கையே சர்க்கார் ஒப்புக்கொள்ளவில்லை என்பதற்காகவும் அல்ல. இந்த மசோதாவின் பிரகாரம் இந்த ராஜ்யத்தில் இருக்கக் கூடிய தரிசு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு, நிலமில்லாத ஹரிஜனங்களுக்கு விநியோகம் பண்ணவேண்டுமென்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. நிலமில்லாதவர்களுக்கு தரிசு நிலங்களைக் கொடுத்தே தீரவேண்டும். ஆனால் அதைக் கொடுக்கின்ற முறையில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொண்டாக வேண்டும். 4-36 p.m.

"நான் இந்த இரண்டு வருஷங்களாக, என் மூன்று வருஷங்களாக நிர்வாகத்தில் இருந்துக்கொண்டிருக்கிற நேரத்தில், நிலமில்லாதவர்களுக்கு தரிசு நிலங்களை வழங்கும் பிரச்னையை தீர்க்க வேண்டுமென்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தும்கூட போதிய அளவு நிலம் பிரித்துக் கொடுக்கிற வேலை திருப்தியாக நடந்திருக்கிறது என்று என்னால் சொல்ல முடியாது. அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அதற்குக் காரணம் என்ன வென்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்டதொரு சட்டத்தினால் நிலம் பிரித்துக் கொடுக்கும் பெரிய பிரச்னையை வெகு சுலபமாகத் தீர்க்க முடியுமென்றால் சர்க்கார் இதைப் போன்றதொரு சட்டத்தை வெகு நாட்களுக்கு முன்பாகவே கொண்டு வந்திருக்கும் ஆனால் இது சட்டத்தினால் தீர்க்கக் கூடிய பிரச்சனை அல்ல வென்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

[Sri C. Subramaniam] [17th February 1955

"அதோடு ஸ்ரீ டி. ஷண்முகம் அவர்கள் ஒரு விஷயத்தை நன்கு எடுத்துச் சொன்னார். அதாவது இந்த ராஜ்யத்திலுள்ள தரிசு நிலங்களில் 99 சத விகிதத்துக்கு மேல் தனிப்பட்டவர்கள் யாராலும், அதுவும் நிச்சயமாக நிலமில்லாத ஏழை விவசாயிகளால், ஹரிஜனங்களால் நிலத்தைப் பண்படுத்தி சீர் திருத்தி விவசாயம் செய்யக் கூடிய நிலைமையில் இல்லை என்பதை நாம் எல்லோரும் மறந்து விடக் கூடாது. அப்படிப்பட்ட ஏதாவது நிலம் இருந்திருக்குமானால் அவை வெகு நாட்களுக்கு முன்பே சிலரால் ஆக்கிரமித்துக் கொள்ளப் பட்டிருக்கும். ஆகவே மீத மிருக்கக் கூடிய தரிசு நிலங்களில் எத்தனை கஷ்டப் பட்டாலும், எத்தனை பணத்தைக் கொண்டு போய் கொட்டினாலும் இருக்கின்ற சௌகர்யத்தை வைத்துக்கொண்டு அவற்றில் விவசாயம் செய்ய முடியாது. இந்தப் பெரும்பான்மையான நிலங்களுக்குப் போட்டியே கிடையாது. போட்டி வரக் கூடிய தரிசு நிலங்கள் குட்டைப் புறம்போக்கு, ஆற்றுப் புறம்போக்கு நிலங்களாகத்தான் இருக்கும். இதை வைத்துக்கொண்டு ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன என்றும், அதனை உழுது பண்படுத்த ஏராளமான நிலமில்லா விவசாயக் கூலிகள்முன் வருகின்றனர் என்றும், அவர்களுக்கு சர்க்கார் ஏன் அவற்றையும் கொடுக்க மறுக்கின்றார்கள் என்றும் சிலர் சொல்லிக் கொண்டே இருக்கின்றனர். எதிர்கட்சியிலிருந்து பேசிய ஸ்ரீ மதனகோபால் அவர்கள் சில இடங்களைக் குறிப்பிட்டு அங்கங்கே 100 ஏக்கரா, 200 ஏக்கரா, நல்ல சாகுபடிக்கு லாயக்கான தரிசு நிலங்கள் இருக்கின்றன வென்றும், அவற்றை ஏன் சர்க்கார் விநியோகிக்கக்கூடாதென்றும் சொன்னார்கள். இந்த மாதிரியாக சில குறிப்பிட்ட நிலங்களை எடுத்துக்கொண்டு பொதுவாக ராஜ்யம் பூராவும் இருக்கும் தரிசு நிலங்கள் அப்படியே நல்ல வளப்பமுள்ள நிலமாக இருக்கின்றன என்பது போல் பேசுவதில் பிரயோசன மில்லை. இம்மாதிரி விவசாயம் செய்வதற்கு லாயக்கான நல்ல நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன என்று குறிப்பிட்டுக் கணக்கு எடுத்து விடலாம். ரொம்ப அதிகமாகப் போனாலும் கூட அவை பத்தாயிரம் ஏக்கரா வரையில் தான் இருக்கும். இவற்றில் பெரும் பகுதி குட்டைப் புறம்போக்கு, ஆற்றுப் புறம்போக்குகளாகத்தான் இருக்கும். இவற்றை விநியோகம் செய்வது நல்லதா என்பதை நாமெல்லோரும் கொஞ்சம் ஆழ்ந்தே கவனிக்க வேண்டும். இதிலே குட்டைப் புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்து கொடுத்து விடுகிறோம் என்றாலும் கூட உடனே குட்டையில் தண்ணீர் வந்து நிரம்பியவுடன் அதிலிருந்து மற்றவர்களுக்குத் தண்ணீர் பாய வசதி இல்லாமல் இந்த நிலங்களில் பயிர் செய்யப்பட்டு விடும். பின்னால் இது சம்பந்தமாக பல கிளர்ச்சிகள், அந்தப் பிரதேசத்தில் நடக்கலாம்.

4-40 p.m.

"அதனால் அந்தக் குட்டைப் புறம்போக்கை தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாகக் கொடுத்து விடக்கூடாது. அந்த கிராமத்திலுள்ளவர்களுடைய நலனுக்காக அது தரிசாகவே இருக்க வேண்டுமென்று மறுபடியும் உத்திரவானால் உடனே ஸ்ரீ ரத்தினம் போன்றவர்கள் சட்டசபையில் எழுந்திருந்து, 'ஏழை ஹரிஜனங்களுக்குக் கொடுத்திருந்த ஒரு ஏக்கரா நிலத்தையும் மறுபடியும் பிடிங்கிக்கொண்டு விட்டார்கள் பார்த்தீர்களா இது அநியாயமில்லையா' என்று பேசுவதற்கு இடம் உண்டாகி விடுகிறது. குட்டைப் புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்வது மிகச் சுலபமான விஷயமல்ல. குட்டைப் புறம்போக்கு, ஆற்றுப் புறம்போக்கு ஆகிய நிலங்கள் நம்முடைய சமுதாய நலனை உத்தேசித்து அந்தக் காலத்தில் பொது மக்களால் வேண்டு மென்ற ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களாகும். காடுகளுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை பட்டுவாடா செய்யக் கூடாதென்கின்ற தத்துவத்தை நாம் எப்படி ஒப்புக்கொண்டிருக்கிறோமோ அதைப் போலவே தான் குட்டைப் புறம்போக்கு. ஆற்றுப் புறம்போக்கு ஆகியவற்றையும் நாம் பிரித்துக் கொடுத்து விட முடியாது. பிரித்துக் கொடுத்து விட்டால் அதனால் பிற்காலத்தில் ரொம்பவும் கஷ்டம் ஏற்படுவது நிச்சயம். அது தவிர்க்க முடியாதவையாகப் போய்விடும். ஆகவே இந்த ஆற்றுப் புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு ஆகிய நிலங்களை சர்க்கார் நிலமில்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க மாட்டேன் என்கிறார்களே என்று சர்க்காரை இப்பொழுது ஒரு சிலர் நிந்தித்தாலும் கூட பிற்காலத்தில் மக்கள்

17th February 1955] [Sri C. Subramaniam]

நிச்சயம் நம்மைப் போற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவசரப் பட்டுக்கொண்டு நாம் சமுதாய பொது நலனுக்காக வென்றே அந்தக் காலத்திலிருந்து விவசாயம் செய்யாமல் ஒதுக்கப்பட்டு வந்திருக்கும் நிலத்தைப் பிரித்துக் கொடுக்க முடியாது. பிரித்துக் கொடுக்க லாயக்கான நிலங்கள் இருத்தல் பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் அதிலேயும் பல சிக்கல்கள் உண்டாகின்றன. சில குறிப்பிட்ட இடத்திற்கே போட்டி மேல் போட்டி போடுகிறார்களே தவிர இதர இடங்களை அதிகாரிகள் நேரில் சென்று 'இதை யார் வைத்துக் கொள்ளுகிறீர்கள், இதை யார் வைத்துக் கொள்ளுகிறீர்கள்?' என்று கேட்டாலும் யாரும் முன் வரமாட்டேன் என்கிறார்கள். போட்டி அதிக முள்ள அந்தக் குறிப்பிட்ட நிலத்தை யாருக்கு வழங்குவது என்று நிர்ணயிப்பதில் பெருத்த கஷ்டம் சர்க்காருக்கு வந்து விடுகிறது. இப்படிப்பட்ட பிரத்யட்ச கண்ணோட்டத்தை விட்டு விட்டு, இருக்கிற தரிசு நிலங்களையெல்லாம் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்து விட்டால் மட்டும் போதாது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, நாட்டிலுள்ள லட்சக்கணக்கான தரிசு நிலங்களை எல்லாம் நிலமில்லாத ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்து விட்டால் அவர்கள் நன்றாக உழுது பயிரிடுவார்கள் என்றும், அதனால் உணவுப் பிரச்னை நீங்கிவிடும் என்றும் ரொம்ப அழகாகச் சொல்லலாம். சட்டத்தினால் பிரித்துக் கொடுப்பது அவ்வளவு சுலபமானதாக இருந்தால், பிரித்துக் கொடுத்தவுடனேயே நம் ராஜ்யத்தின் உணவுப் பிரச்னையும் தீர்ந்து விடுவதாக இருந்தால் சர்க்கார் இதுவரையிலும் இந்த மாதிரியானதொரு சட்டத்தைக் கொண்டு வராமலா இருந்திருக்கும் என்று கேட்க விரும்புகிறேன்.

"எதிர்க் கட்சிக்காரர்கள், அதிலும் கம்யூனிஸ்டுகள், இது பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் சர்க்காருடைய அனுபவம் இவ்விஷயத்தில் எப்படி யிருக்கிறது என்றும் கொஞ்சம் பார்க்க வேண்டும்.

"யுத்தத்தில் சேவை செய்தார்கள் என்பதற்காக சர்க்கார் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக மாஜி ராணுவத்தினருக்கு தரிசு நிலங்களைக் கொடுத்து மாடு வாங்குவதற்குப் பணம் கொடுத்து, ஏரு வாங்குவதற்குப் பணம் கொடுத்து, விதை வங்குவதற்குப் பணம் கொடுத்து, ஆக இப்படி எல்லாம் வசதிகளையும் செய்து கொடுத்து, 'விவசாயம் செய்யுங்கள்' என்றால் அவர்கள் சொல்லிக் கொள்ளாமல் கூட விவசாயம் செய்வதை விட்டு விட்டு ஓடிவந்து விடுவதைத்தான் நாம் பார்க்கிறோம். காரணம் என்ன? பாடுபட்டு, கஷ்டப்பட்டு விவசாயம் செய்தும் அதில் எவ்விதப் பிரயோஜனமும் இல்லை; இது வரையில் இம்மாதிரி நிலங்களில் பாடுபட்டு விவசாயம் செய்து லாபம் அடைந்திருக்கிறவர்களில் ஒருவரைக்கூட நான் பார்த்ததில்லை என்பதையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

"அதோடு இன்னொரு பிரச்னையும் பார்க்க வேண்டியிருக்கிறது. அதைப் பற்றி கனம் அங்கத்தினர் ஸ்ரீ அநந்தபாய் அவர்கள் குறிப்பிட்டார். இன்றைக்கு இருக்கக்கூடிய தரிசு நிலங்களை அப்படியே நிலமில்லாத விவசாயிகளிடம் கொடுத்தாலும், அதுவும் கொஞ்சம்கூட சௌகர்யமில்லாத ஏழை விவசாயத் தொழிலாளர்களுடைய கையில் கொடுத்தாலும் அவர்கள் அவற்றில் எப்படி விவசாயம் செய்ய முடியும்? அந்தத் தரிசு நிலத்தை அவர்களால் எப்படிப் பண்படுத்த முடியும்? அவற்றுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டு மென்றால் அவர்கள் என்ன செய்வார்கள்? இதையெல்லாம் நன்கு யோசித்துப் பார்க்க வேண்டும். உண்மையிலேயே விவசாயத் தொழிலாளர்களுக்கெல்லாம் நன்மை செய்ய வேண்டுமென்று கருத்தோடு இந்தத் தரிசு நிலங்களை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று சொன்னால், அதோடு வழங்கப்பட்ட அந்தத் தரிசு நிலங்களில் அவர்கள் பயிர் செய்து லாபமடைந்து சுகமாக வாழ வேண்டு மென்று சொன்னால், அதனால் நாட்டின் உணவுப் பிரச்னையும் தீரும் என்று சொன்னால், இன்றைக்கு இருக்கக்கூடிய தரிசு நிலங்களை இப்பொழுது இருக்கிறபடியே அந்த நிலமில்லாத ஏழை விவசாயத் தொழிலாளர்களின் கையில்

[Sri C. Subramaniam] [17th February 1955

கொடுப்பதில் பிரயோஜனமில்லை. சர்க்கார் தங்களுடைய சொந்தச் செலவில் அந்தத் தரிசு நிலங்களை யெல்லாம் பண்படுத்தி, அவற்றிற்குப் பாசன வசதியையும் செய்து கொடுத்து, பின்னர் அவற்றை அந்த நிலமில்லாத ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்குப் பிரித்துக் கொடுப்பது என்றால் தான் அந்த எண்ணம் ஈடேறும்.

"அதை விடுத்து, ஏதோ எதிர் கட்சிக்காரர்கள் தரிசு நிலங்களைப் பிரித்துக்கொடுக்கவேண்டுமென்று ஒரு மசோதா கொண்டுவந்தார்கள், அதை ஒப்புக் கொண்டு சர்க்காரும் இப்பொழுது ராஜ்யம் பூராவும் கிடக்கின்ற தரிசு நிலங்களை யெல்லாம் பிரித்துக் கொடுக்க ஒப்புக் கொண்டு விட்டார்கள் என்று சொன்னால், ஏதோ சர்க்காருடைய பொறுப்பும் அத்துடன் தீர்ந்தது என்கின்ற முறையில், அதாவது பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் முறையில்தான் இந்த மசோதாவை ஒப்புக்கொள்ளலாம்.

"அல்லது உண்மையாக ஏழை எளிய நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் கொடுத்து உதவி செய்ய வேண்டும், அவர்களுடைய பொருளாதார நிலமையை உயர்த்த வேண்டும், சர்க்கார் கொடுக்கக்கூடிய நிலத்தில் அவர்கள் உண்மையாகவே விவசாயம் செய்து பலன் அடைந்து சுகமாக வாழ வேண்டுமென்கிற அபிப்பிராயமுள்ள எப்படிப்பட்ட பொறுப்புள்ள சர்க்காரும் இந்த மசோதாவை ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்பதை நான் நிச்சயமாகத் சொல்வேன்.

"ஏனென்றால் இதில் சொல்லப்பட்டிருக்கிற விஷயம் என்னவென்று பார்ப்போம். இந்த மசோதாவின் 7-வது ஷரத்திலே '**wet land** ஆகவோ அல்லது **garden**, மானாவாரி நிலமாகவோ இருந்தால்' ஒரு வருக்கு மிக அதிகமாக ஒரு ஏக்கராவும், மிகக் குறைவாக அரை ஏக்கராவும் கொடுக்க வேண்டுமென்றும், '**dry land** ஆக' இருந்தால் ஒருவருக்கு மிக அதிகமாக மூன்று ஏக்கராவும் மிகச் குறைவாக ஒன்றரை ஏக்கராவும் தான் கொடுக்கப்பட வேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு எந்த விவசாயியும் லாபகரமாக விவசாயத்தைச் செய்ய முடியுமென்று யாரும் எதிர் பார்ப்பதற்கில்லை. இதை நம்பி கையில் இருக்கும் கொஞ்சநஞ்சம் பணத்தையும் அதில் போட்டு விட்டு கடைசியில் மொட்டையடித்துக்கொண்டு வேறு பிழைப்பே நாடி எங்காவது ஊரை விட்டு ஓட வேண்டித்தான் வரும் என்று நிச்சயமாகச் சொல்லிவிடலாம். அதில் அவன் விவசாயம் செய்வான் என்றோ, அல்லது அதில் வரும் லாபத்தைக்கொண்டு, கிஸ்தி கட்டி, அவன் பிழைத்து, அவன் குடும்பம் பிழைக்குமென்றோ யாராவது சொன்னால் அவர்கள் யாதார்த்த நிலைமையைக் சொஞ்சம்கூட உணராது வெரும் கற்பனா லோகத்தில்தான் சஞ்சரித்துக் கொண்டுருக்கிறார்கள் என்று சொல்லி விட முடியும். இது கம்யூனிஸ்டுக்குத் தெரியாது என்று சொல்வதற்கில்லை. இப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டு வருவோம். அதை சர்க்கார் ஒப்புக்கொண்டு விட்டார்கள் என்றால் அதனால் பல சிக்கல்கள் பின்னால் சர்க்காருக்கே உண்டாகும். அல்லது அதை அவர்கள் ஒப்புக் கொள்ள மறுத்து விட்டார்கள் என்றாலும் ரொம்பவும் நல்லது, மக்களிடையே, நாங்கள் உங்கள் நலனுக்காக ஒரு மசோதா கொண்டு வந்தோம், அதை சர்க்கார் ஒப்புக் கொள்ள மறுத்து விட்டார்கள் என்பதாகப் பிரசாரம் செய்யவும் வழி ஏற்படுகிறது என்கிற இரு நோக்கத்தையும் கொண்டே அவர்கள் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று தான் நான் எண்ண முடியும்.

"ஏன் அப்படி அவர்களை சந்தேகிக்கிறேன் என்றால் இந்த மசோதாவில் அவர்கள் நடைமுறைக்குச் சாத்தியமான எந்த விஷயத்தையும் குறிப்பிடவில்லை. உதாரணமாக இந்த மசோதாவில், '**act to override contract and other law, etc.**', என்று கொடுக்கப்பட்டிருக்கும் மூன்றாவது ஷரத்தைப் பாருங்கள். இந்தச் சட்டத்தின் பிரகாரம் அமைக் கப்பட போகிற திரு மூர்த்திகளைக் கொண்டே ஒரு கமிட்டி, இந்த நிலத்தை இன்னாருக்குக் கொடுக்க வேண்டு மென்ற தீர்ப்பு அளித்து விட்டது என்றால் அந்த உத்தரவை மாற்ற எந்தக் கோர்ட்டுக்கும் அதி

17th February 1955] [Sri C. Subramaniam]

காரம் கிடையாது. அதற்கு முன்பே ஒரு கோர்ட்டுத் தீர்ப்பு இருந்தாலும் சரி, பழக்க வழக்கங்கள் எப்படி இருந்தாலும் சரி, எப்படிப்பட்ட ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தாலும் சரி, அவையெல்லாம் இந்தச் சட்டத்தினால் அடிப்பட்டுப்போகிறது. இந்தக் கமிட்டி போடும் உத்தரவை மாற்ற சிவில் கோர்ட்டுக்கு அதிகாரமே கிடையாது என்றும் சொல்லப்படுகிறது. இதிலே நான் சந்தேகப்படக்கூடிய விஷயம் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அதாவது இதற்கு முன்னால் நாங்கள் ஏதாவது சட்டம் கொண்டுவந்து அதில் சிவில் கோர்ட்டுக்குத் தலையிட அதிகாரம் இல்லையென்று குறிப்பிட்டிருந்தால் உடனே எதிர்க்கட்சிக்காரர்கள் எழுந்திருந்து அதை பலமாக ஆட்சேபிப்பதோடு கூட அப்படிச் செய்வதால் ஜனங்களுடைய ஜீவாதார உரிமையை பறிக்கப்பட்டு விடுவதாகக் கூறுவதுண்டு. ஆனால் இந்த மசோதாவின்படி அமைக்கப்படுகின்ற கமிட்டி கொடுக்கக்கூடிய தீர்ப்பை மாற்ற சிவில் கோர்ட்டுக்குகூட அதிகாரம் இல்லையென்று அவர்களே கொடுத்திருப்பதிலிருந்து எங்களது தத்துவத்தை அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள் என்பதை அறியத்தான் நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால் அவர்கள் சொல்கின்ற நடைமுறையில் சாத்தியமா என்பதைக் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். இதற்கு முன்பு எப்படிப்பட்ட ஒப்பந்தம் அமுலில் இருந்தாலும் சரி, பழக்க வழக்கங்கள் நடைமுறையில் இருந்தாலும் சரி, இதற்கு முன்பே அதைப்பற்றிய வழக்கு கோர்ட்டுக்குச் சென்று அதன் பேரில் போர்ட்டு எப்படிப்பட்ட தீர்ப்பை அளித்திருந்தாலும் சரி, இன்னொருக்கு இந்த நிலத்தைக் கொடுக்கவேண்டுமென்ற கமிட்டியார் தீர்ப்பளித்துவிட்டால் அதை மாற்றவேமுடியாது என்று சொல்வது நியாயத்திற்குப் பொறுத்தமா என்று பார்க்கவேண்டும். இல்லாவிட்டால் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு சாக வேண்டுமென்பதற்காகவே இது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றால் அது விகையாகாது.

"நான் வக்கீலாக இருந்த காலத்தில் கோர்ட்டுக்கு வந்த ஒரு வழக்கு என் ஞாபகத்திற்கு வருகிறது. இப்படித்தான் அவசரம் அவசரமாக நிலத்தைப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்ற உத்தரவுபோடப்பட்டு, அதனால் ஒரு கர்ணம் ஒரு நிலத்தை ஒரு குடியானவருக்கு "இதுதான் உன்னுடைய நிலம்" என்று காட்டிவிட்டுப் போய்விட்டார். சர்க்காரே தனக்கு அந்த நிலத்தை வழங்கி விட்டதாக அந்த விவசாயி எண்ணிக் கொண்டு அதில் விவசாயம் செய்ய ஆரம்பித்து விட்டான். ஆனால் அந்த நிலம் ஏற்கனவேயே இன்னொருவனின் அனுபவத்திலேயே பல வருஷங்களாக இருந்துக்கொண்டு வந்திருக்கிறது. அவர் இவரை அங்கே விவசாயம் செய்யக்கூடாது எனத் தடுக்க அதனால் சச்சரவு முற்றி ஒரு கொலையே நடந்து கடைசியில் அந்தக் கேஸ் கோர்ட்டுக்கு வந்தது.

"அதைப்போலவே இந்தச் சட்டத்தை ஒப்புக்கொள்வதனால் நாட்டில் பல கொலைகள்தான் நடைபெறுமே தவிர, பல இடங்களில் பெரும் குழப்பங்கள்தான் உண்டாகுமே தவிர, சுமுகமான முறையில் நிலம் பிரித்துக் கொடுக்கும் பிரச்னையைத் தீர்க்கமுடியாது என்று நான் நிச்சயமாகச் சொல்வேன். குறிப்பாகப் பாருங்கள். ஒரு நிலத்தைத் தவறுகவே இன்னொருவனுக்குத் அந்த கமிட்டி வழங்கி விடுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள் ; கமிட்டி வழங்கி விட்டால் வழங்கினதுதான். அதை சிவில் கோர்ட்டுகூட மாற்றமுடியாது என்று இந்த மசோதாவின் விதி. நிலம் வழங்குவதில் தவறுதல் நடந்துவிட்டது என்பதை கமிட்டியாரின் கவனத்திற்கு எடுத்துச் சொன்னால் அவர்கள் வழங்கிய தீர்ப்பை அவர்களே திருத்தமுடியுமா என்றால் அதுவும் கூட முடியாது. நிலத்தைவழங்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, நிலம் தவறுதலாக வழங்கப்பட்டு விட்டால் அந்த உத்தரவை மாற்ற அந்தக் கமிட்டிக்கு எந்த விதமான அதிகாரமும் இந்த மசோதாவில் கொடுக்கப்பட வில்லை. அந்த மூன்று பேர்கள் கொண்ட கமிட்டி கொடுக்கும் முடிவே கடைசியானது, முடிவானதும் கூட. இதை சர்க்கார் ஒப்புக்கொள்ளவேண்டுமென்றால் இது முடிகின்றகாரியமா? இருக்கின்ற நிலத்தை அது முன்பே யாருக்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, அவர்கள் யாருக்குகாவது வழங்கி

விடுவார்கள். பின்னால் அதன் காரணமாக நாட்டில் பெரும் குழப்பம் ஏற்படும். 'சர்க்கார் எப்படிப்போனால் என்ன' என்கின்ற முறையில்தான் மசோதா தயாரிக்கப்பட்டிருப்பதாக நான் நிச்சயம் சொல்லமுடியும்.

"அதுவும் இந்த மசோதாவை கனம் ஸ்ரீ பி. ராமமூர்த்தி draft பண்ணியிருக்கிறார். விவசாயத்தில் நல்ல அனுபவமுள்ள கனம் ஸ்ரீ கந்தசாமி அவர்கள் இதைத் தயாரித்திருபார்களேயானால் இப்படிப் பட்ட சிக்கல்களை யெல்லாம் நன்கு உணர்ந்து நடைமுறைக்குச் சாத்திய மான வகையில் அது தயாரிக்கப்பட்டிருக்கும் என்றே நம்புகிறேன். விவசாயத்திற்கும் கனம் ஸ்ரீ ராமமூர்த்திக்கும் எவ்வளவு சம்பந்தம் என்பது எல்லோருக்கும் தெரியும். நானாவது ஒரு பரம்பரை விவசாயி. என்னுடைய குழந்தைப் பருவத்திலே நான் அடிக்கடி காட்டிலே வேலை செய்திருக்கிறேன், உழுதிருக்கிறேன், கவலை ஓட்டியிருக்கிறேன். இப்பொழுதும்கூட கிராமத் திற்குச்சென்றால் காட்டுக்குப்போகக்கூடிய வழக்கம் எனக்கு உண்டு. ஆனால் அப்படிப்பட்ட வழக்கம் எதுவுமில்லாத கனம் ஸ்ரீ ராமமூர்த்தி, அதுவும் பட்டணவாசத்திலேயே பெரும் பகுதியைக் கழிக்கும் கனம் ஸ்ரீ ராமமூர்த்தி, நகரப்புறங்களிலுள்ள தொழிற்சாலைகளிலேயே தன் நடவடிக்கை யாவையும் செய்துகொண்டிருக்கும் கனம் ஸ்ரீ ராமமூர்த்தி விவசாயம் சம்பந்தமாக ஒரு மசோதாவைக் கொண்டு வந்தால் அது இப்படித்தான் இருக்கும் என்பதற்கு அத்தாட்சியாக விளங்குகின்றது இந்த மசோதா. (பலத்த ஆரவாரம்.) இதற்கு போதுமான சாட்சியங்களை இதிலிருந்து காட்டமுடியும்.

"இந்த மசோதாவிலுள்ள இரண்டாவது ஷரத்தில் ஐந்தாவது உட் பிரிவில்.

' "dry land", "garden land", "wet land", "thottam land", "manavari land" and all other kinds of land shall have the same meaning as in Government revenue registers and records . . .'

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் கண்டுள்ள dry land என்றால் என்ன, மானாவாரி land என்றால் என்ன என்பது எனக்குப் புரிய வில்லை. எதிர்கட்சி உப தலைவர் கனம் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களை 'dry land என்றால் என்ன, மானாவாரி land என்றால் என்ன,' என்று கேட்டேன். அவர் dry land என்றால் கிணறு வெட்டி அதி லிருந்து தண்ணீர் பாய்ச்சக்கூடிய பிரதேசங்கள் என்றும், 'மானாவாரி land' என்றால் மழையை மாத்திரம் நம்பி இருக்கக்கூடிய பிர தேசங்கள் என்றும் சொன்னார். அப்படியென்றால் 'garden' என்றால் என்ன என்று கேட்டேன். 'மா, பலா, கமுகு போன்ற மரங்களுடைய தோப்புக்கள்' என்று குறிப்பிட்டார். அப்புறம் 'தோட்டம் என்றால் என்ன என்று கேட்டேன்'. அதற்கு கிணறு வெட்டி தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்யக்கூடிய நிலங்கள் தோட்டம் என்றார்.

"இவர்கள் 'waste land ஐ', ஏழை, நிலமில்லாத தொழி லாளர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த வேஸ்ட்லாண்ட்களில் எப்படி 'வெட் லாண்ட்', 'கார்டன் லாண்ட்', தோட் டம் முதலிய எல்லாம் இருக்குமென்று கேட்கிறேன். (சிரிப்பு.) தரிசாகக் கிடக்கக்கூடிய நிலங்களில் இது நஞ்சைப் பகுதி, இது தோட்டப் பகுதி, இது புஞ்சைப் பகுதி என்றெல்லாம் பாகுபாடு எங்கேயிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை."

SRI M. KALYANASUNDARAM :—"மசோதாவைப் படிக்காமலேயே பேசுவதில் என்ன பிரயோஜன மிருக்கிறது?"

4-50 p.m. * **THE HON. SRI C. SUBRAMANIAM** :—"கனம் எதிர்க்கட்சி உப தலைவருக்கு நான் மசோதாவை நன்றாகப் படித்திருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுதுதான் படித்தேன் என்றாலும், நன்றாக ஊன்றிப் படித்திருக்கிறேன். ஆகவே அவர்களுக்கு வேண்டுமென்றாலும் படித்துக் காட்டுகிறேன்.

17th February 1955] [Sri C. Subramaniam]

"இந்த மசோதாவின் 2-வது ஷரத்திலே, 5-வது உட் பிரிவில் 'ட்ரை லாண்ட், கார்டன் லாண்ட், வெட் லாண்ட், தோட்டம் லாண்ட், மானுவாரி லாண்ட்', என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு இந்த மசோதாவின் 7-வது ஷரத்தைக் கொஞ்சம் படித்துப் பாருங்கள்.

'7. *Maximum and minimum allotment.*—In the allotment of waste lands no person shall be allotted more than one acre and not less than half an acre if wet, garden, thottam or manavari and not more than three acres or less than one and a half acres if dry.'

என்பதற்காக ஒருவருக்கு வெட் லாண்ட், கார்டன், தோட்டம், மானுவாரி நிலங்களாக இருந்தால் மிக அதிகபட்சம் ஒரு ஏக்கரும், மிகக் குறைந்த பட்சம் ½ ஏக்கரும் வழங்க வேண்டுமென்றும், ட்ரை லாண்டாக இருந்தால் ஒருவருக்கு மிக அதிக பட்சம் 3 ஏக்கரும், மிகக் குறைந்த பட்சம் 1½ ஏக்கரும் வழங்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

"இப்படிச் சொல்லியிருக்கிறீர்களே, waste land-களில் தோட்ட நிலம் என்றும், கார்டன் நிலம் என்றும், வெட் லாண்ட் என்றும் உண்டா என்று கேட்டதற்கு, 'அவற்றை நாங்கள் அவ்வளவு தூரம் ஆழ்ந்து யோசித்துப் பார்க்கவில்லை, சர்க்கார் அதை ஒப்புக்கொள்ளும் என்கின்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தால் தானே நாங்கள் அவற்றை யெல்லாம் பார்த்துப் போடுவதற்கு' என்று சொன்னார். அப்படியென்றால் சர்க்கார் இந்த மசோதாவை ஒப்புக்கொள்ளாது என்பதற்காக முன்பே ஒருவித அபிப்பிராயத்திற்கு வந்துவிட்டாலும் பிரசார நோக்கத்திற்காக இப்படி சரியாக எதையுமே யோசிக்காமல் ஒரு மசோதாவைச் தயாரித்துக் கொண்டுவந்து அதை விவாதிக்க வேண்டுமென்றால் இது என்ன ஒரு விளையாட்டா என்று கேட்க விரும்புகிறேன். சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நல்லெண்ணத்துடனேயும், அதைச் சபையினரும் அங்கீகரிக்க வேண்டுமென்ற கருத்துடனேயும் எந்த மசோதாவும் நல்ல முறையில் யோசித்துத் தயாரிக்கப்படவேண்டியது ரொம்பவும் அவசியமாகும். எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுவதிலிருந்தே அவர்கள், இதை சர்க்கார் ஏற்றுக்கொண்டு அமுல் நடத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தயாரித்திருப்பாகத் தோன்ற வில்லை.

"அப்படியிருக்கும்போது ஸ்ரீ வி. ஆர். கிருஷ்ணய்யர் தன்னுடைய சட்ட மூளையை உபயோகப்படுத்தி இந்த மசோதாவை தவும் நன்றாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும், இந்தச் சட்டத்தை உள் நோக்கிப் பார்த்தாலும் அதில் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள் எல்லாவற்றையும் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று எப்படிச் சொன்னார் என்று தெரிய வில்லை. அவர் தன்னுடைய எப்படிப்பட்ட விவசாய அனுபவத்தை வைத்துக்கொண்டு அப்படிச் சொன்னார் என்பதும் எனக்குத் தெரிய வில்லை."

SRI V. R. KRISHNA AYYAR :—"On a matter of personal explanation, Sir, I am certainly happy that the Hon. Minister is in a very humerous mood and not in a very serious mood. He has developed his speech as if we have come to the stage of moving amendments to the Bill but that stage has not yet been reached. We do not know what sort of amendments will be moved during the second reading of the Bill, if the Bill is taken into consideration. When I said that the Bill had been soundly worded I only meant that the principle of the Bill had been well stated. I did not mean that the Bill should be accepted as it is with a mere dotting of the i's and dashing of the t's."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—"அவர் ஆதரிக்கின்றது பற்றி ரொம்பவும் சந்தோஷம்.

[Sri C. Subramaniam] [17th February 1955

"இதில் இன்னொரு முக்கியமான விஷயத்தைப்பற்றியும் பார்க்கவும் வேண்டும். நம்முடைய நாட்டில் இரண்டு விதமான நிலப்பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. ஒன்று ஏராளமான நிலங்கள் ஒரு சிலரிடையே குவிந்து கிடக்கும் பிரச்னை. மற்றொன்று ஏராளமான மக்களிடையே சிறிது சிறிது நிலமாகப் பிரிந்து மூலைக்குக் கொஞ்சமாகச் சிதறிக் கிடக்கும் பிரச்னை. பெரு நிலச்சுவாந்தார்களின் பிரச்னையைச் சமாளிப்பது ஒரு புறமிருக்க, நாட்டிலுள்ள நிலங்களெல்லாம் மிகச் சிறிது சிறிதாக பிரிக்கப் பட்டு வரப்பிட்டப்பட்டுக் கிடப்பதினால் விவசாயத்தொழிலை லாபகரமாக இன்றைக்குச் செய்யமுடியாமல் பல விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையை எப்படித் தீர்ப்பது என்று சர்க்கார் ஒருபுறம் திணறிக்கொண்டிருக்கும்பொழுது நாம் இந்த மசோதாவை ஒப்புக்கொள்ளுகிறோம் என்று வைத்துக்கொண்டால் அதனால் என்ன ஏற்படுகின்றது? இருக்கக்கூடிய தரிசு நிலங்களை அரை ஏக்கர், ஒரு ஏக்கர், ஒன்றரை ஏக்கர் என்று இந்தச் சட்டப்படி பிரித்துக் கொடுத்துவிட்டால், நான் சொன்ன இரண்டாவது நிலப்பிரச்னையை இது மேலும் அதிகப்படுத்து மே தவிர அதைச் சமாளிக்க சர்க்காருக்கு உதவி செய்யாது. அதோடு இப்படியே பிரித்துக்கொடுக்கிறோம் என்று சொன்னாலும்கூட, அந்தப் பெரும்பான்மையான நிலங்களில் ஒன்றும் செய்யமுடியாது. இரண்டாவ தாகப் பிரித்துக்கொடுக்கும் நிலத்தை அந்த விவசாயி விற்க முடியாது, அடமானம் செய்ய முடியாது. உழுதாலும் அல்லது உழாது பேருக்காக நிலத்தை வாங்கிப் பேசாமல் வைத்துக்கொண்டிருந்தாலும் இருக்கவேண்டி யதுதான். அவர்களுடைய சந்ததியாருக்குக்கூட அந்த நிலத்தைப் பரா தீனம் செய்யும் பாத்தியம் கிடையாது என்று ஷரத்து 8-இல் இரண்டாவது பாராவில் சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும். இப்படியாக இந்த மசோதா பூராவிலும் பல குறைகள் காணப்படுவதை என்னால் காட்டிக் கொண்டே போகமுடியும்.

"இந்த மாதிரி தவறுகள் இருந்தால் அதற்குத் திருத்தங்கள் கொடுத்து அவற்றைத் திருத்தக் கூடாதா என்று சொல்லப்படலாம். திருத்தலாம். ஆனால் எப்படித் திருத்துவது என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு தவறு, இரண்டு தவறு இருந்தால் சுலபமாகத் திருத்திவிட முடியும். ஒரே தவறாக இருந்தால் எப்படித் திருத்த முடியும்? ஒரு வேளை ஸ்ரீமான் கிருஷ்ணய்யர் அவர்களால் முடியுமோ என்னவோ எனக்குத் தெரியாது. என்னைக் கேட்டால் இந்த மசோதாவையே கிழித்து எறிந்து விட்டு வேறு ஒரு மசோதாவை பூராவாகவும் **draft** பண்ண வேண்டியே ஏற்படும் என்று நிச்சயமாகச் சொல்லமுடியும்.

"ஆகவேதான் இதை அப்படியே ஒப்புக்கொண்டால் அதன் மூலமாக இருக்கிற கஷ்டங்கள் போதாதென்று மேலும் பல கஷ்டங்கள் ஏற்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

"இந்த மசோதாவைப் பிரேரித்துப் பேசும்போது ஸ்ரீ சி. கந்தசாமி அவர்கள் தன்னுடைய அபார மூளையின் திறமையை யெல்லாம் உப யோகித்து, 'இந்த மாதிரியாக இந்தச் சட்டப்படி ராஜ்யத்திலுள்ள தரிசு நிலங்களை யெல்லாம் நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டால் அதனால் பெரிய நிலப் பிரபுக்களுடைய நிலங்களை அதிகக் குத்தகைக்கு யாரும் போட்டி போட்டுக்கொண்டு போய் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்,' என்று சொன்னார். அவர் சொல்வதிலிருந்து ஏதோ ஒரு சில குறிப்பிட்ட உத்தேசங்களையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு அவர் கள் சுற்றி வளைத்து இந்த மாதிரியாக ஒரு மசோதா கொண்டுவந்திருக் கிறதாகத் தெரிகிறது. ஆனால் அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் சர்க்கா ருக்குக் கிடையாது. நல்ல பண்படுத்தக்கூடிய நிலங்கள் எங்காவது இருந் தால் அவை எல்லாம் நிலமில்லாத ஏழை விவசாயக் கூலிகளுக்குப் பிரித்துக்கொடுக்க வேணடுமென்பதே சர்க்காருடைய நோக்கம். அதற்காக நிலம் கொடுத்தோம் என்ற பேருக்காக காடு மேடு கரம்பு நிலங்களை யெல்லாம் அவர்களுக்குப் பிரித்துக்கொடுத்து, அவர்கள் அதில் விவசாயம் செய்யமுடியாது, தங்களிடமிருக்கும் கொஞ்சநஞ்ச பணத்தையும் அதில்

17th February 1955] [Sri C. Subramaniam]

போட்டு நஷ்டம் அடையும்படி செய்யவேண்டுமென்பது சர்க்காருடைய நோக்கமல்ல. விவசாயம் செய்யக்கூடிய நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு பிரித்துக் கொடுக்கும்படி ஏற்கனவே உத்தரவு போட்டிருக்கிறோம். அதிலே பல தகராறுகள் ஏற்பட்டன. கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலமாக முயற்சி செய்து பார்த்தோம்.

"குறிப்பாக ஒரு விஷயத்தை கனம் உதவி சபாநாயகர் மூலமாக சபையினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலப் பிரச்னையை சர்க்கார் உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணத் துடன்தான் ஆத்தூரில் 50 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை எடுத்து அவற்றை நிலமில்லாத ஏழைகளுக்கு விநியோகிக்கும்படியாக உத்திர விட்டிருக்கிறோம். சென்ற மாதத்தில் 12 ஆயிரம் ஏக்கரா வரை பிரித்துக் கொடுக்கப்பட்டுவிட்டது. மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் 50 ஆயிரம் ஏக்கராவும் பிரித்துக் கொடுக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அங்கே சர்க்காருக்கு ஏற்படுகின்ற அனுபவத்தை வைத்துக்கொண்டு மற்ற ஜில்லாக்களுக்கும் அதே திட்டத்தை சர்க்கார் விஸ்தரிக்க நிச்சயமாக ஏற்பாடு செய்வார்கள் என்று சபையினருக்கு உறுதியளிக்கிறேன்.

"குறிப்பாக இந்தத் தரிசு நிலத்தை விநியோகிப்பதில் ஒரு கஷ்டம் இருக்கிறது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி குட்டைப் புறம்போக்கு, ஆற்றுப் புறம்போக்கு நிலங்களுக்குத்தான் நான், நீ எனப் பலர் போட்டி போட்டுக்கொண்டு வருகிறார்களே தவிர, மற்ற நிலங்களுக்கு யாரும் விண் ணப்பம் போடமாட்டேன் என்கிறார்கள். சட்டம் கொண்டுவந்து இரண்டே மாதத்தில் எல்லா நிலங்களையும் பிரித்துக் கொடுத்துவிட்டால் எல்லோரும் விவசாயம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அதனால் உணவுப் பிரச்னையே தீர்ந்துவிடும் என்று பேசுகின்ற கம்யூனிஸ்ட் அங்கத்தினர்களுக்குத்தான் குறிப்பாக இவ்விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். அவர்களது எண்ண மெல்லாம் வெறும் கனவாக இருக்கிறதே தவிர, காரியத்தில் நிறை வேறும் காரியங்கள் அல்ல. ஒரு வருஷத்தில் இந்த ராஜ்யத்தை ஒரு சுவர்க்க லோகமாக ஆக்கிவிடுவோம் என்று அவர்கள் சொல்வதுபோல் தானிருக்கிறது.

"ஏனென்றால் எல்லா தரிசு நிலங்களுக்கும் போட்டி போட்டுக்கொண்டு யாருமே முன்வராதபோது எப்படி சட்டம் கொண்டுவந்து விநியோகிக்க முடியுமென்று கேட்கிறேன். நாமே வலியக் கூப்பிட்டுக் கொடுத்தாலும் கூட, இந்தத் தரிசு நிலத்தை யார் பயிர் செய்ய முடியுமென்று சொல்லி விட்டுப்போய்விடுகிறார்கள். ஆகவே சட்டத்தினால் ஒருவிதமான பிரயோ ஜனமும் இருக்கப்போவதில்லை.

"ஏனென்றால் இன்றைக்கே நல்ல நிலங்கள் எல்லாம், விவசாயம் செய்வதற்கு லாயக்கான தரிசு நிலங்கள் எல்லாம் நிலமில்லாதவர் களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் நியாய மான செலவாக இருந்தால் அந்தப் பணத்தையும் சர்க்கார் கொடுத்து உதவி செய்கிறார்கள். அதைப்போலவே எல்லாத் தரிசு நிலங்களும் வழங்கப் படவேண்டுமென்றால் அவற்றை அப்படியே நிலமில்லாத விவசாயக் கூலி களுக்கு விநியோகிப்பதைவிட பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்து கொஞ்சம் தொகையை எடுத்து அந்தத் தரிசு நிலங்களை விவசாயம் செய்யக் கூடிய வகையில் திருத்தி பின்னர் அவற்றை ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தால்தான் நல்லது. சபை அப்படிக் கொடுக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டாலும் அப்படியே செய்யலாம். அதைவிட்டு விவசாயம் செய்யக்கூடிய நிலமோ, செய்யவே முடியாத நிலமோ அதைப்பற்றி கவலையில்லை. இருக்கின்ற தரிசு நிலத்தை யெல்லாம் ஆளுக்கு அரை ஏக்கரா, ஒரு ஏக்கராவாகப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று சொல்வது விவசாயிகள் நன்மை அடைய வேண்டுமென்பதற்குச் சொல்வதாக தோன்றவில்லை. அவர்கள் எல்லாம் இன்னும் பலவிதமான நஷ்டங்களை அடைந்து கஷ்டப்பட வேண்டுமென்பதற்குச் சொல்லப்படுவதாகவே

தோன்றுகிறது. ஆனால் அப்படிப்பட்ட எண்ணம் சர்க்காருக்குக் கொஞ்சம்கூட இல்லாததின் காரணமாகத்தான் சர்க்கார் இந்த மசோதாவை எற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள்.

"இந்த ராஜ்யத்தில் எங்கெங்கே விவசாயம் செய்வதற்கு லாயக்கான நிலங்கள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் கணக்கெடுத்து நில மில்லாத விவசாயிகளுக்கு அவற்றை பிரித்துக்கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டுவரப்படுகிறது. அதுவும் ஸ்ரீ ரத்னம் அவர்களுக்கு ஒரு விஷயத் தைச் சொல்ல விரும்புகிறேன். ஹரிஜனங்களுக்குத்தான் முக்கியமாக இந்த நிலங்கள் பிரித்துக்கொடுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் சக்தி பெற்று, பொருளாதார வளம் பெற்று, மற்ற சமூகத்தார்களைப்போலவே உயர்ந்த நிலைமைக்கு வரவேண்டுமென்ற கருத்தோடுதான் அவர்களுக்குப் பல சௌகர்யங்கள் செய்துகொடுக்கப்பட்டு வருவதைப்போலவே நிலங்கள் விநியோகம் செய்வதிலும் அவர்களுக்கு வேண்டிய சௌகர்யங்கள் செய்யப் பட்டு வருகின்றன. இதுவரையில் சர்க்கார் அவர்களுடைய சமூகத்தின் முன்னேற்றத்திற்காகச் செய்துகொண்டு வந்திருக்கும் நன்மைகளை உத் தேசித்து அவர்கள் சர்க்காருக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் அவற்றுக்காக சர்க்காருக்கு நன்றி செலுத்தினா லும் செலுத்தாவிட்டாலும் அவர்களுடைய சமூகத்தின் முன்னேற்றத்திற் காக சர்க்கார் இன்னமும் பல சௌகர்யங்களை அவர்களுக்குச் செய்து கொண்டேதான் இருப்பார்கள். அதில் கொஞ்சம்கூட சந்தேகப்படவேண்டிய தில்லை என்கின்ற உறுதியையும் அவருக்கு அளிக்கிறேன்.

"கடைசியாக நான் கனம் அங்கத்தினர்களுக்கு ஒரு விஷயத்தை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் இந்த மசோதாவை எதிர்ப் பதற்குக் காரணம் கொள்கை அடிப்படையில் எந்த விதமான வேற்றுமை யும் இருப்பதால் அல்ல. இந்த மசோதா சரியான முறையில் தயாரிக்கப்பட வில்லை என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறேன். இதை ஒப்புக்கொண்டால் இன்றைக்கு இருக்கிற கஷ்டங்கள், சிக்கல்கள் எல்லாம் இன்னும் அதிகப் படுமே தவிர இந்தப் பிரச்னையைத் தீர்க்க உதவாது என்றும் சொல்லி யிருக்கிறேன். ஆகையால் எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள் தங்கள் கட்சி யினரால் பிரேரிக்கப்பட்டதால் அதை ஆதரிக்கவேண்டுமென்ற கருத்து இல்லாமல், கட்சி மனப்பான்மைக்கே இடம் கொடுக்காமல் நான் கூறிய காரணங்களை எல்லாம் நன்கு யோசித்து மனம் மாறி இந்த மசோதாவையே எதிர்ப்பார்கள் என்ற நம்பிக்கையில் நான் முடித்துக்கொள்ளுகிறேன்."

5 p.m. **DEPUTY SPEAKER :—"I wish to adjourn the House. I would like to know how long it will take the hon. Member Sri C. Kandasamy to finish his speech."**

SRI C. KANDASAMY :—"Sir, I will finish it as quickly as possible, at the most within ten minutes."

SRI K. RAJARAM NAIDU :—"No, no, five minutes."

* **SRI M. KALYANASUNDARAM :—"**கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சாதாரண தினங்களில் சர்க்கார் எவ்வளவு அவசரமாக அவர்களுடைய மசோதாவைக் கொண்டுவந்தாலும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் உட்கார்ந்து அதை விவாதித்து சபையில் நிறை வேற்றியிருக்கிறோம். அது விஷயத்தில் சர்க்காருடன் ஒத்துழைக்கவேண்டு மென்பதற்காக இரவு பத்து மணிக்குக்கூட நாங்கள் சபைக்கு வந்து ஒத்துழைத்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கு இந்த மசோதா எதிர்க் கட்சியிலிருந்து பிரேரிக்கப்பட்டிருக்கிறது என்பதற்காக ஐந்து மணிக்கு மேல் ஒரு பத்து நிமிஷம்கூட உட்கார முடியாது என்கின்ற முறையில் சர்க்கார் அவசரப்படுவது கண்டு வருத்தப்படுகிறேன். கனம் மந்திரி அவர் கள் கூறியவற்றுக்கு பதில்கூற ஸ்ரீ கந்தசாமி அவர்களுக்குப் போதுமான நேரம் கொடுக்கப்படவேண்டுமென்றும், அவர் பதில் கூறிமுடிந்தவுடன்

17th February 1955] [Sri C. Kandasamy]

சபையின் ஓட்டுக்கு விடப்பட்டு அந்த மசோதா நிறைவேறுகின்ற வரையில் அல்லது நிராகரிக்கப்படுகின்ற வரையில் சபை உட்கார வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்."

*SRI C. KANDASAMY :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் கொள்கையை வரவேற்று அனேகமாக எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் பேசியிருக்கிறார்கள். ஆனால் கடைசியாகப் பேசிய கனம் நிதி மந்திரி அவர்கள் மசோதாவில் அடங்கியிருக்கக்கூடிய சில விஷயங்கள் யதார்த்தத்திற்குப் புறம்பானவை போல நையாண்டி செய்யும் வகையில் பேசியிருக்கிறார்கள். இந்த மசோதாவே ரொம்ப விளையாட்டுத்தனமாகத் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், பொறுப்பற்ற முறையில் எதையும் கவனிக்காமலே டிராப்ட் செய்யப்பட்டிருப்பதாகவும், அதுவும் விவசாயமே இன்னதென்று தெரியாத ஸ்ரீ பி. ராமமூர்த்தி அவர்களால் டிராப்ட் செய்யப்பட்டால் இப்படித்தான் இருக்கும் என்பதற்கு உதாரணமாக விளங்குவதாகவும், வேடிக்கையும், நையாண்டியும் கலந்த முறையில் பேசினார்கள். உண்மையிலேயே யார் நாட்டில் இருக்கக்கூடிய யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளாமல் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு உணர்த்தவே நான் எழுந்திருக்கிறேன்.

"தோழர் ஸ்ரீ பி. ராமமூர்த்தி அவர்களுக்கு விவசாயம் என்றால் இன்னதென்றே தெரியாது என கனம் நிதி அமைச்சர் சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல. அது உண்மையும் ஆகாது. கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு விவசாயத்தைப்பற்றி எவ்வளவு தெரியுமோ, என் அதைவிட ஒரு படி மேலேயே ஸ்ரீ பி. ராமமூர்த்தி அவர்களுக்கும் விவசாயத்தைப்பற்றிய நுணுக்கங்கள் எல்லாம் தெரியும். அவர் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்தான். ஆகவே அவருக்கு விவசாயம் தெரியுமா, தெரியாதா என்கின்ற பிரச்னைக்கே இடமில்லை. அது ஒருபுறமிருக்க, கனம் நிதி அமைச்சரைக் கேட்கிறேன், அவர்களுடைய இலாக்காவிலுள்ள எத்தனை காரியதரிசிகளுக்கு விவசாயம் என்றால் என்ன என்று தெரியும்? மாடுகளில் காளை மாடு எது, பசு மாடு எது என்று காட்டக்கூடத் தெரியாத எவ்வளவு கலெக்டர்களை, எவ்வளவு தாசில்தார்களை, எவ்வளவு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை கனம் நிதி அமைச்சர் அவர்கள் தங்களுடைய சர்க்காரிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியுமா என்று கேட்கிறேன். காளை மாடு எது, பசு மாடு எது என்று கூடக் காட்டத் தெரியாத அதிகாரிகளை விவசாய இலாக்காவில் வைத்துக்கொண்டு அவர் இவ்வளவு வாய்ப்பந்தல் போட்டால் விவசாயத்தையே ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டு, வாழ்ந்து வருகின்ற எங்களுக்கு திருப்பிப் பேச ஒன்றுமே தெரியாதென்று அவர்கள் நினைக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். இன்றைக்கு ராஜ்யத்திலுள்ள தரிசு நிலங்களை எல்லாம் ஏழை எளிய நிலமில்லாத விவசாயிகளுக்கு எல்லாம் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்பதற்கு நாங்கள் ஒரு சட்டம் கொண்டுவந்தால் அதன் அவசியத்தை, அதன் அவசரத்தை கனம் நிதி மந்திரி அவர்கள் உணர்ந்து கொள்ளாமலே இன்றைக்கு நையாண்டி செய்து பேசலாம்; கிண்டல் செய்தும் பேசலாம். இன்றைக்கு இவரே இதை ஒப்புக்கொண்டு தரிசு நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வராவிட்டால் நாளைக்கு தங்கள் தலைவிதியை தாங்களே நிர்ணயித்துக்கொள்ளவேண்டுமென்பது விவசாயிகளுக்குத் தெரியும். எப்படி நிர்ணயித்துக்கொள்வது என்பதையும் அவர்கள் நன்கு அறிவார்கள். நாளைக்கு இந்தச் சட்டத்தை இந்தச் சர்க்காரே வலுக்கட்டாயமாகக் கொண்டுவரவேண்டிய நிலைமையும் ஏற்படப் போகிறது என்பதை நான் அறிவேன். அது வேறு விஷயம்.

"ஆனால் கனம் நிதி மந்திரி அவர்கள் பேசும்பொழுது, 'தரிசு நிலங்களில் தோட்டப் பகுதி நிலமாவது, கார்டன் பகுதி நிலமாவது, நஞ்சைப் பகுதி நிலமாவது, இவர்கள் ஏதோ தரிசு நிலங்களை வினியோகிக்கவேண்டுமென்று சொல்லிவிட்டு, ஊரிலிருக்கிற நிலங்களை எல்லாம் கண்டபடி வினியோகித்துவிட்டு வீண் தகராறை உண்டுபண்ணப் பார்க்

கிறார்கள்,' என்று குறிப்பிட்டார். நான் ரொம்பத் தாழ்மையுடன் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர் இந்த மசோதாவையே நன்கு படிக்கவில்லையென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. காரணம் என்ன? தரிசு நிலங்களில் மானவாரி நிலம் கிடையாதா? நல்ல நீர்ப்பாசன வசதியுள்ள புஞ்சைப் பகுதிகள் தஞ்சை ஜில்லாவிலே கிடையாதா? ஏன் கிடையாது? என்னுடன் அவர் வந்தால் அவருக்கு நான் அவற்றை எல்லாம் காட்டத் தயாராக இருக்கிறேன். ஆனால் அவை எல்லாம் தரிசாகவே கிடக்கின்றன என்று யாரும் சொல்லவில்லை. பெரிய பெரிய மிராசுதார்கள் அவற்றை இன்றையதினம் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். சொந்த நிலம்போல் அவற்றில் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். கிராமங்களிலுள்ள கர்ணம் முதல் ரெவின்யூ ஆபீசர்கள் வரையில் எல்லோரும் அந்தப் பெருநிலச்சுவாந்தார்களின் கையாட்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்த சிவோஜ்யமா நிலங்கள் சர்க்காருடையது இல்லையா? அவற்றைப் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று சொல்வதில் என்ன தப்பு இருக்கிறது? தோழர் மதனகோபால் பேசும்பொழுது மதுரை ஜில்லாவில் கோடைக்கானலுக்கு அருகில் ஸ்ரீ ஜெயராஜ் நாடார் என்பவர் நல்ல ஒண்ணு நம்பர் நிலம் 100 ஏக்கராவுக்குமேல் ஆக்கிரமித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறார். ஒவ்வொரு ஏக்கராவும் 5,000 ரூபாய்க்கு மேல் விலை மதிப்புள்ளது என்று குறிப்பிட்டார். அந்தப் புறம்போக்கு நிலம் எந்தப் பிரிவில் வரும் என்று கனம் நிதி அமைச்சரைக் கேட்கிறேன். ஏதோ பொறுப்பற்ற முறையில் எதிர்க்கட்சியார் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்ற முறையில் பேசுவது ரொம்ப வருந்தவேண்டிய விஷயம். அதுவும் கனம் நிதி அமைச்சர் அவர்கள், 'நாங்கள் இருக்கிற நிலங்களை எல்லாம் பிரித்துக் கொடுத்துவிட்டு கிராமங்களில் தகராறை உண்டுபண்ணவே முயற்சிக்கிறோம்,' என்று சொல்வது ரொம்ப வருந்தத் தக்கதாகும். அவர் இந்த மசோதாவை நல்ல கண்ணோட்டத்தோடு படித்தே பார்க்கவில்லை என்று நினைக்கிறேன்.

"இந்த மசோதாவில் 5-வது ஷரத்திலே, இந்த மசோதா சட்டமாக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள்ளேயே, ஒவ்வொரு தாலூக்காவிலும் உள்ள தாசில்தார்கள் அவர்களுடைய தாலுக்காவில் இருக்கக்கூடிய தரிசு நிலங்கள் எல்லாம் என்னென்ன என்பதை அந்த நிலங்களின் தரம்வாரியாகப் பிரித்து சர்க்கார் கெஜட்டிலும், ஒவ்வொரு ஜில்லா கெஜட்டிலும், அந்தந்த தாலுக்காவில் எந்தப் பத்திரிகை பிரபலமாக இருக்கின்றதோ அந்தப் பத்திரிகையிலும் வெளியிடவேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 'தாசில்தார்கள் இதுதான் தரிசு நிலம் என்று குறிப்பிடாத ஒரு நிலத்தை எடுத்து இந்தக் கமிட்டி ஒருவருக்குக் கொடு என்று உத்திரவு போட்டுவிடுமா, போடத்தான் முடியுமா?' என்று கேட்கிறேன். பொருத்தமற்ற வகையில் மசோதாவைத் தயாரித்திருக்கிறது நாங்களா, அல்ல மசோதாவில் கொடுக்கப்பட்டிருக்கிற விஷயங்கள் எதையுமே படிக்காமல் பொறுப்பற்ற முறையில், பொருத்தமற்ற வகையில் பேசுவது கனம் நிதி அமைச்சர் அவர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

"'நாங்கள் ஆத்தூரில் ஸ்பெஷல் தாசில்தார்கள் போட்டு தரிசு நிலங்களை வெகு சீக்கிரம் வினியோகிக்கும்படி உத்திரவிட்டிருக்கிறோம்', என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆத்தூர் விஷயம் எவ்வளவு நாளாக இழுத்துக்கொண்டிருக்கிறது என்பது எங்களுக்கு நன்கு தெரியும். கடந்த நான்கு வருஷங்களாகவே அங்கே நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதிலே எவ்வளவு ஊழல்கள் நடந்திருக்கின்றன என்பதும் எங்களுக்குத் தெரியும். ஏதோ இந்த ராஜ்யத்தில் நடக்கின்ற விஷயம் எதுவுமே தெரியாமல் நாங்கள் இருப்பதாக எண்ணிக் கொண்டு கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசுவதில் பிரயோஜனமில்லை என்று அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"இந்த மசோதாவின் 7-வது ஷரத்திலே நஞ்சைப்பகுதி, தோட்டப் பகுதி, மானவாரிப்பகுதி தரிசு நிலங்களாக இருந்தால் ஒருவருக்கு மிக அதிகபட்சம் ஒரு ஏக்கராவும், மிகக் குறைந்த பட்சம் அரை ஏக்கராவும்,

17th February 1955] [Sri C. Kandasamy]

வறண்ட பிரதேசமாக இருந்தால் ஒருவருக்கு மிக அதிகபட்சம் மூன்று ஏக்கராவும் மிகக் குறைந்தபட்சம் 1½ ஏக்கராவும் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

"இதைப்பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, 'இதை வைத்துக்கொண்டு ஒரு விவசாயி பிழைக்க முடியுமா? சர்க்காருக்கு கிஸ்தி கட்டி, தான் வாழ்ந்து, தன் குடும்பமும் வாழும்படி செய்ய முடியுமா? முடியவே முடியாது. தலையை மொட்டை அடித்துக்கொண்டு ஓடும்படித்தான் ஏற்படும்,' என்று மிக வேடிக்கையாகச் சொல்லிவிட்டார்கள். அப்படியென்றால் ஒவ்வொருவருக்கும் 50 ஏக்கரா, 100 ஏக்கரா கொடுத்தால்தான் விவசாயம் செய்து சுகமாக வாழமுடியுமென்று அவர்கள் நினைக்கிறார்கள் போலிருக்கிறது. அது உண்மையாகக்கூட இருக்கும். ஏனென்றால் முன்பே லட்சக்கணக்கான ஏக்கரா நிலங்களை உடைய பெரு நிலச்சுவாந்தார்களுக்கே தியாகிகள் என்ற பெயரில் நூறு ஏக்கரா, ஐம்பது ஏக்கரா என்று தரிசு நிலங்களை வழங்கியிருக்கிறார்கள் அல்லவா! ஆகவே அப்பொழுதுதான் பெருநிலச்சுவாந்தார்கள் பிழைக்க முடியும், ஏழை எளிய விவசாயிகள் செத்து மடிய முடியும் என்பது இவர்களது எண்ணமாக இருக்கலாம்.

"ஆனால் நாங்கள் ஒருவருக்கு தோட்டப்பகுதி நிலமாகவோ, புஞ்சைப் பகுதி நிலமாகவோ இருந்தால் மிக அதிகபட்சம் ஒரு ஏக்கராதான் கொடுக்க வேண்டுமென்று ஏன் சொல்லுகிறோம் என்றால், அவரவர்களே அவரவர்களது சொந்த உழைப்பைக்கொண்டு அதில் விவசாயம் செய்து பிழைக்க வேண்டுமென்றால் அவ்வளவுதான் கொடுக்கவேண்டும். அதற்கு அதிகமாகக் கொடுத்தால் அவன் மற்றவர்களை அடிமைப்படுத்தும் நோக்கம் வந்துவிடும். யாரும் யாரையும் அடிமைப்படுத்தக்கூடாது. யாரும் சோம்பேறியாக இருந்து பிறர் உழைப்பைக்கொண்டு உண்ணக் கூடாது, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சொந்த உழைப்பைக்கொண்டு பாடுபட்டே பிழைக்கவேண்டுமென்ற கருத்தோடுதான் கொடுக்கப்படும் நிலத்தின்மேல் வரம்பை நிர்ணயித்திருக்கிறோம். இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்க வேண்டுமென்றால் எல்லோரும் உழைக்கவேண்டும். உழைக்கத் தயாராக இருக்கின்றவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்கவேண்டும். ஆனால் சர்க்காருக்கு இதைப்பற்றிக் கவலையில்லை. இன்றையதினம் நெய்வேலி திட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஆயிரக்கணக்கான கூலிகள் வேலையில்லாமல் மண் எடுத்துக்கொட்டத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அமெரிக்காவிலிருந்து ட்ராக்டர்களும், புல்டோசர்களும் மின்சார யந்திரங்களும் வரவழைக்கப்படுகின்றன. இந்த நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் கொடுக்கும் பணத்தை அதே மக்களுக்குக் கொடுக்காமல் இயந்திரங்கள் வாங்குவதற்காக வெளிநாட்டாருக்குக் கொடுத்துவிட்டு உள்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டுபண்ணிவிடுகிறவர்கள் நாங்கள் அல்ல. ஆகவேதான் எல்லா மக்களும் உழைத்து உண்ணுகின்ற வகையில் நல்ல நஞ்சைப்பகுதி, தோட்டப்பகுதி, மானாவாரிப் பகுதி நிலங்களாக இருந்தால் ஒருவருக்கு மிக அதிக பட்சம் ஒரு ஏக்கரா கொடுக்கவேண்டுமென்றும், வறண்ட பிரதேசமாக இருந்தால் மூன்று ஏக்கரா கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். விவசாய விஷயம் எதுவுமே தெரியாமல் ஒன்றும் நாங்கள் கொடுத்துவிடவில்லை.

"இந்த நிலத்தைக்கொண்டு எந்த விவசாயியாலும் லாபகரமாக விவசாயத்தைச் செய்யமுடியாது என்று சொன்னால், 'நீங்கள் என்ன இதைவிட ஏராளமான நிலங்கள் கொடுப்பதற்கு ஏதாவது திட்டம் கிட்டம் போட்டிருக்கிறீர்களா,' என்று நிதி அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன். அவர்களுடைய ஆட்சியில் விவசாயிகள் இதுவரை அடைந்திருக்கும் நன்மைகள் என்ன? ஒவ்வொன்றாகச் சொல்லட்டுமே. 'நாங்கள் இன்ன இன்ன நன்மை செய்திருக்கிறோம்,' என்று எடுத்து காட்டினால் அவற்றை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் இவர்களுடைய ஆட்சியில் விவசாயிகள் அடைந்திருப்பது தாங்க முடியாத வரிப்பளுதானே. கந்தாயம் கட்டமுடியாமல் ஆயிரக் கணக்கில் கடன்கள்தானே அவர்கள் வாங்கியிருக்கிறார்கள். மேலும் நீர்ப்பாசன அபிவிருத்தி வரி வேறு போடப்

படுகிறது. அதைத்தவிர ஏழை எளிய விவசாயி நன்மை அடையவேண்டுமென்ற கருத்தோடு ஒரு சீர்திருத்தச் சட்டம் ஏதாவது சர்க்கார் கொண்டு வந்திருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். அப்படியிருக்கும்போது இந்த மசோதாப்படி நீங்கள் அரை ஏக்கராதான் கொடுக்கிறீர்கள் என்று வைத்துக்கொண்டாலும், அவன் அதில் லாபகரமாக விவசாயம் செய்ய முடியாது என்பது ஒருபுறமிருக்கட்டும். நிம்மதியாக தனக்கும் ஒரு அரை ஏக்கரா நிலம் உண்டு என்கின்ற மன நிம்மதியோடு அவன் சாக மாட்டானா? உங்களை விவசாயம் செய்வதற்குக்கூட நிலம் கேட்கவில்லை. உங்கள் ஆட்சியில்பட்ட துன்பம் போதும். நிம்மதியாக தன்னுடைய சொந்த நிலம் என்று ஒரு இடத்தில் படுத்துச் செத்துப்போவதற்காகவாவது ஒரு அரை ஏக்கரா நிலம் கொடுங்கள் என்றுதான் கேட்கிறோம். 'என்னுடைய சொந்த நிலத்தில் படுத்து நான் உயிரை விடுகிறேன்,' என்ற நிம்மதி யாவது அந்த ஏழை விவசாயிக்கு இருக்கட்டும் என்றுதான் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"கனம் நிதி மந்திரி அவர்கள் பேசும்பொழுது மிக வேடிக்கையாக திருமூர்த்திகள் கொண்ட கமிட்டி இன்னாருக்கு இன்ன நிலத்தைக் கொடுக்கவேண்டுமென்று சொல்லிவிட்டால், அதை மாற்ற வேறு யாரா லுமே முடியாது என்று சொன்னார்கள். அந்தத் திருமூர்த்திகள் யார்? கம்யூனிஸ்ட்கள் இருக்கவேண்டுமென்கிறார்களா? ஒவ்வொரு தாலுக்கா வுக்கும் அமைக்கப்படுகிற கமிட்டியில் அந்தத் தாலுக்கா தாசில்தார், அந்த தாலுக்காவிலிருந்து சட்டசபைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் சட்டசபை பிரதிநிதி, அந்தத்தாலுக்காவுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஜில்லா போர்டு மெம்பர் ஆகியோர் இருக்க வேண்டுமென்றால் அவர்களைவிட பொறுப்பு வாய்ந்த வேறு எந்த நபர்களைக் கமிட்டியில் போடவேண்டு மென்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் விரும்புகிறார்கள் என்று கேட்கிறேன்.

"யதார்த்தத்தை உணராமல், மசோதா முழுவதும் ஒரே தவறாக இருக்கிறது என்று குறிப்பிட்டு அதைத் திருத்துவது என்பதே முடியாத காரியம், ஆகவே இதைக் கிழித்தே எறியவேண்டுமென்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொல்லலாம். பெரிய சட்ட நிலாக்காவையும், பெரிய பெரிய சட்ட நிபுணர்களையும் வைத்துக்கொண்டு இவர்கள் இதுவரையில் தயாரித்திருக்கின்ற மசோதாக்களில் எத்தனை சட்டங்கள் கோர்ட்டுகளால் கிழித்து எறியப்பட்டிருக்கின்றன என்பது இந்த ராஜ்ய மக்களுக்கு எல்லாம் தெரியாது என்று அவர் எண்ணிக்கொண்டுவிடவேண்டாமென்று அவ ருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேறு காரியங்கள் எதிலுமே கவனம் செலுத்த முடியாமல் ஒவ்வொரு நாளும் எவ்வளவு திருத்த மசோதாக்கள் சபை முன்பு சர்க்காரால் கொஞ்சம்கூட வெட்கமில்லாதபடி கொண்டுவரப்படுகின்றன என்பது எல்லாம் எங்களுக்குத் தெரியும். இன்றைய தினம் இந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற நாங்கள் நிச்சயமாக நாளைக்கு அந்தப் பக்கத்தில் உட்கார்ந்து அவர்களைப் போலவே பல சட்டங் களைக் கொண்டுவர முடியும்; கொண்டுவரத்தான் போகிறோம் என்பதை யும் கனம் நிதி அமைச்சர் அவர்கள் மறந்துவிட்டுப் பேசவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்நாட்டு அரசியல் சட்டப்படி இன்றைக்கு கோவணம் கட்டிக்கொண்டு மாடு மேய்த்துக்கொண்டிருப்பவன்கூட நாளைக்கு ஆட்சி பீடத்தில் அமர்ந்து, அதுவும் நிதி மந்திரி ஸ்தானத்தில் அமர்ந்து பல சட்டங்களைப் போட முடியும். முடியாதது ஒன்றுமில்லை. ஆகவே கனம் நிதி அமைச்சர் அவர்கள்தான் படித்துவிட்டோம் என்கின்ற பெருமையிலே, ஒன்றும் கிண்டலாக, நையாண்டியாகப் பேசத் தேவை யில்லையென்று அவருக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

5–10 p.m. "இந்த மசோதா ஒப்புக்கொள்ளப்படுமா, ஒப்புக்கொள்ளப்படாதா என் பது எங்களுக்குத் தெரியாதது அல்ல. நாங்கள் ஒரு மசோதாவைப் பிரேரிக்கவேண்டுமென்றால் அதற்கு கவர்னர்பிரான் **'permission refused'** என்று போட்டு அனுப்பிவிடுவார்கள் என்பதும் எங்களுக்குத்தெரியும்.

17th February 1955] [Sri C. Kandasamy]

" அதை யெல்லாம் கருத்தில் வைத்துக்கொண்டே, நாட்டில் இன்றைக்கு இருக்கும் யதார்த்த நிலைமையையும் நன்கு பரிசீலித்து, அதற்கு ஏற்ப மிகக் குறைந்தபட்சமாக ஒவ்வொரு நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கும் ஒரு ஏக்கரா கொடுங்கள், அவர்களே அதில் சொந்தமாக உழைத்துப் பாடு பட்டுப் பிழைப்பார்கள், அவர்களுக்கே அந்த நிலத்தை விற்கவோ, அட மானம் செய்யவோ அதிகாரம் கொடுக்கவேண்டாம். உழைத்துப் பிழைக் கின்ற வரையில் அந்த நிலத்திலிருந்து அவர்கள் வெளியேற்றப்படமாட்டார் கள் என்றமிகக் குறைந்தபட்ச உத்திரவாதத்தையாவது அளியுங்கள் என்று தான் இந்த மசோதாவில் கேட்டிருக்கிறோம். அதற்கு நையாண்டி செய்து பேசினால் எங்களுக்கும் பேசத் தெரியும். தெரியாது என்பது இல்லை. இந்த மாதிரியாக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினால் அதனால் எங்களுக்குப் பெருமை ஏற்படும் என்றோ, எங்கள் கட்சிக்குப் பலம் ஏற்படும் என்றோ கருதி நாங்கள் இந்த மசோதாவைக் கொண்டுவர வில்லை. இந்த மசோதா ஏற்பட்டால் அவர்களுடைய கட்சியின் நலன் பெரிதும் பாதிக்கப்பட்டுவிடுமே, இப்பொழுதுபோல் தங்கள் கட்சிக்காரர் களுக்கே நிலம் வழங்க முடியாது போய்விடுமே என்கின்ற காரணத்திற் காக அவர்கள் வேண்டுமானால் இதை எதிர்க்கலாம். அதைப்பற்றியும் நாங்கள் கவலைப்படவில்லை. லட்சக்கணக்கான ஏக்கரா நிலம் நம் ராஜ்யத் தில் தரிசாகக் கிடக்கும்போது அதை ஆளுக்குக் குறைந்த பட்சம் ஒரு ஏக்கரா வீதம் கொடுத்தால்கூட லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை அளிக்க முடியும். ஒரு ஏக்கராவில் மிகக் குறைந்தபட்சம் ஒரு மூட்டை தானியம்தான் விளைவிக்க முடிந்தது என்றாலும் இந்த ராஜ்யத்தில் இன்னும் லட்சம் மூட்டை தானியங்களை அதிகப்படியாக விளைவிக்க முடியும் என்கிறது போன்ற விரிவான, தேச நலனை, இந்த ராஜ்யத்திலுள்ள விவசாயிகளின் நலனை உத்தேசித்தே நாங்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். தவறு இருந்தால் எடுத்துக்காட்டினால் நாங்கள் திருத்திக் கொள்ளுகிறோம். அவர்களைப் போல், 'நாங்கள் கொண்டுவர வாவது அதற்குத் திருத்தம் கொடுக்கவாவது,' என்கின்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது. அதைவிட்டு இந்த மசோதா கிழித்தெறியப் படுகின்ற மசோதா என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறுவார் களேயானால், அவர் படிப்பினால் ஏற்படுகின்ற பெருமையிலேதான் அப்படி யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளாமல் பேசுகின்றார். ஆனால் யாரும் வெகு சுலபமாக பி.ஏ. பி.எல். படுத்து விட முடியும், ஆனால் உலக அனு பவத்தைத்தான் படிக்க முடியாது. படிப்பினால் மாத்திரம் உலக அனு பவம் யாருக்கும் ஏற்பட்டுவிடாது', என்று கனம் நிதி அமைச்சர் அவர் களுக்குச் சொல்லிக்கொண்டு நான் இந்த மசோதாவை சபையின் முடி வுக்கே விடவேண்டுமென்று வற்புறுத்துகிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, the point for consideration is this. I pointed out the difficulties which this Bill is likely to create even in the distribution of land. I also gave an assurance to the House that it is the intention of the Government to distribute these waste lands as early as possible. There is no use of distributing merely waste lands unless those to whom lands are allotted are able to cultivate them, and we should make it possible for them to cultivate them. We are now making an experiment in Atur taluk in the district of Salem in the matter of distribution of waste lands, and we are hoping that it will be possible to distribute these lands by executive action alone. But the Government would not hesitate to bring any legislation if it is ultimately found that legislation is necessary for the purpose of distributing these lands. We are hoping that it would be possible to do it even within the administrative structure by executive action alone. That is why, I explained in detail the various pitfalls which this present Bill is likely to lead to and not that I want to assert

that we have got the monopoly of wisdom and that we alone can frame Bills. All I want to point out is that this not a proper Bill. Hon. Member Sri C. Kandasamy may be able to claim that he can frame a much better Bill than any of us can do. I do agree but that does not mean that he can justify the principles of this Bill. That is all I want to say, considering the nature of the Bill and also considering the fact that we are making an attempt to distribute lands by executive action. If it is found ultimately necessary within the next three or six months that legislation is absolutely necessary for solving this problem, then we will not hesitate to bring in a legislation and a proper one. I appeal to the mover of the Bill not to press the motion in view of the assurance given unless the Opposition wants to make political capital out of this Bill."

(Mr. Speaker resumed the Chair.)

MR. SPEAKER :—" May I know whether the hon. Member is withdrawing the motion?"

SRI C. KANDASAMY :—" I am not withdrawing the motion."

MR. SPEAKER :—" The question is—

' That the Distribution of Waste Land Bill, 1954 (L.A. Bill No. 34 of 1954), be taken into consideration at once.' "

The motion was put and declared lost.

5–20 p.m. A poll was demanded and the House divided as follows :—

Ayes—38.

Sri A. Ratnam.
,, N. Ratna Gounder.
,, M. P. Subramanyam.
,, P. Rangaswami Reddiar.
,, T. Shanmugam.
,, A. Veloo.
,, M. Narayana Kurup.
Dr. K. B. Menon.
Sri K. T. Sreedharan.
,, K. R. Nallasivam.
,, C. Kunhirama Kurup.
,, V. Sankaranarayana Menon.
,, M. Palaniyandi.
,, M. Narayanan Nambiar.
,, P. Kunhirama Kidav.
,, O. Koran.
,, K. Moidu.
,, M. Kalayanasundaram.
,, K. P. Gopalan.
Sri T. C. Narayanan Nambiar.
,, C. Kandasamy.
,, K. T. Raju.
,, S. Ramalingam.
,, V. R. Krishna Ayyar.
,, S. Vadivelu.
,, K. C. Gopalan Unni.
,, V. Madanagopal.
,, P. K. Gopalakrishnan.
,, A. K. Subbiah.
,, K. V. Ramaswami.
,, T. S. Ardhanari.
,, P. Venkatesha Sholagar.
,, K. Madhavan Nambiar.
,, E. T. Kunhan.
,, C. H. Kanaran.
,, R. Krishnan.
,, P. Chockalingam.
,, M. Manickasundaram.

Noes—60.

The Hon. Sri C. Subramaniam.
,, A. B. Shetty.
Sri K. Rajaram Naidu.
,, B. Bhakthavatsalu Naidu.
,, P. G. Karuthiruman.
,, B. K. Nallaswami.
,, S. C. Virupakshiah.
,, R. Kuppuswami.
,, N. Mounaguruswamy Naidu.
Sri S. R. Arumugam.
,, P. S. Rangaswami Naidu.
,, P. G. Manickam.
,, N. Ramakrishna Ayyar.
,, M. R. Ramachandran.
,, O. Venkatasubba Reddi.
,, T. P. Elumalai.
,, V. K. Ramaswamy Mudaliar.
,, K. G. Muniswami Gounder.

17th February 1955]

Noes—60—cont.

Sri A. Ramachandra Reddiar.
,, K. S. Ardhanareeswara Gounder.
,, A. Sambasivam.
,, P. M. Muniswami Gounder.
,, O. A. Nanjappa.
The Hon. Sri B. Parameswaran.
Sri V. S. Chinnaswami Naidu.
,, V. S. Sivaprakasam.
,, A. Iyanar.
,, V. Muthu.
,, S. Thinakarasami Thever.
,, V. Chinnayya.
,, R. M. Palaniappan.
,, T. R. Varadan.
,, C. Muthiah Pillai.
,, O. Chengam Pillai.
,, L. Anandan.
,, V. Krishnaswami Padayachi.
,, K. Parthasarathy.
,, M. Jagannathan.
,, P. S. Krishnaswamy Ayyangar.
,, G. Govindan.
Sri P. Chellathurai.
,, P. Urkavalan.
,, A. Vaikuntam.
,, V. Arumugam.
,, P. B. K. Raja Chidambaram.
,, M. Chinnathambi Thevar.
,, P. Selvaraj.
,, S. N. Somayajulu.
,, K. P. Kuttikrishnan Nair.
,, B. Vaikunta Baliga.
,, K. H. Bomman.
,, V. R. Nagarajan.
,, N. Gopala Menon.
,, E. K. Sankara Varma Raja.
,, K. Aranganathan.
,, A. Appu.
,, M. Muni Reddi.
,, K. R. Viswanathan.
,, V. Govindaswami Naidu.
The Hon. Sri S. S. Ramaswami Padayachi.

Neutral—4.

Sri K. Uppi.
,, K. M. Seethi Sahib.
Sri M. Chadayan.
,, K. Kunhi Mohamed Shafee.

Ayes—38; Noes—60; Neutral—4.

The motion was declared lost.

MR. SPEAKER :—"I now adjourn the House to 11 o'clock on Monday, the 21st February 1955."

The House then adjourned.

TRUTH ALONE TRIUMPHS